₹10

fmpb

# அறைகூவல்

Volume 55 | Issue 6 | June 2025

*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். எபிரெயர் 11:6*




## விசுவாசம்

## விசுவாசத்தில் இன்னும் அதிகமாய்

# ஆரம்ப வரிகள்... விசுவாசத்தோடு அடியெடுத்து

சார்லஸ் ஸ்பர்ஜன் அவர்களின் தாத்தா ஜேம்ஸின் குடும்பம் ஒரு பெரிய குடும்பம். ஆண்டவரை அதிகமாய் நேசித்ததினால் மிகக் குறைவான வருமானத்துடன் ஒரு ஏழைப் போதகராக வாழ்ந்து வந்தார். இவர் எந்த சூழ்நிலையிலும் சுவிசேஷத்தை அறிவிக்காமல் இருந்ததில்லை. இவர்களின் பால் கொடுக்கும் ஒரே பசுமாடு இறந்தபோதிலும், **'தேவைப்பட்டால், ஐம்பது மாடுகளைக் கூட தேவன் தர வல்லவர்'** என்று ஜேம்ஸ் நம்பிக்கையுடன் கூறினார். அதே நாளில், அவர்களின் நிலையை அறியாத லண்டனில் ஒரு குழு, போதகர்களின் கஷ்டங்களுக்கு உதவிசெய்ய நிதி திரட்டியது. அவர்களின் பட்டியலில் உள்ளவர்களுக்கு கொடுத்து முடித்தபோது இன்னும் அவர்களிடம் ஐந்து பவுண்டுகள் எஞ்சி இருந்தன. ஒருவர் அதை ஜேம்ஸ் ஸ்பர்ஜனுக்கு அனுப்ப பரிந்துரைத்தார். மற்றொருவர் ஐந்து பவுண்டுகள் மட்டுமே அனுப்ப வேண்டாம், அதனுடன் இன்னும் ஐந்து சேர்த்து அனுப்பும்படி கூறினார். பசுமாடு இறந்த மறுநாளே இப்பரிசு கிடைக்க தேவன் ஜேம்ஸ் ஸ்பர்ஜனுக்கு உதவி செய்தார்.



*முழு படிக்கட்டையும் பார்க்க இயலாவிட்டாலும் முதல் அடியை எடுத்துவைப்பதே விசுவாசம்.*
*– மார்ட்டின் லுத்தர் கிங்*

கர்த்தர் நம் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்கிறார். அவர் வாக்குத்தத்தங்களை தந்து அதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்பதை இந்த நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. தேவன் மீதான நம் விசுவாசம் ஜெபங்களில் மட்டுமல்ல, அவரின் நீதிக்காக பொறுமையுடன் காத்திருப்பதில் வெளிப்படுகிறது. நமக்கு அநீதி இழைக்கப்படும்போது, அதற்கு நாமே பழி வாங்குவதற்குப் பதிலாக தேவன் பார்த்துக் கொள்வார் என்று விசுவாசிக்க வேண்டும். நாம் செய்யமுடியாத ஒரு காரியத்தை முடிக்க மருத்துவர், வழக்கறிஞர் அல்லது வங்கி அலுவலரை நம்புகிறோம். ஆனால், உதவியற்ற சூழ்நிலையில் நாம் முற்றிலும் கர்த்தரையே விசுவாசித்து, அவர் கையில் நம்மை ஒப்புக்கொடுக்கும் போது, நம்மை இரட்சிக்க அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். நமது இயக்கத்தின் அடுத்த Ethos **விசுவாசம்.** ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்'' (எபி.11:6).

முதல் படியாக நாம் இரட்சிக்கப்படுவதற்கு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். அடுத்தபடியாக நம் வாழ்நாள் முழுவதும் அவரையே பின்பற்றவேண்டும். மேலும் மிக முக்கியமானது இயேசு கிறிஸ்துவின் மூலம் பிதாவாகிய தேவன் மீது விசுவாசம் வைப்பது. ஏனென்றால் நாம் உடைக்கப்படும்போது, சோர்ந்து போகும் போது, தோல்விகளின்போது அவர் நம்மை கைவிடாதபடி பாதுகாப்பார். நம் விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமைப்போல நமது மூத்த ஊழியர்களும் விசுவாசத்துடன் ஒருமனப்பட்டு ஜெபித்து இந்த இயக்கத்திற்கு வித்திட்டார்கள் (எபி.11:8). FMPBயின் ஊழியத்தில் இம்மட்டும் கர்த்தர் நமக்கு உண்மையுள்ளவராக இருந்திருக்கிறார். ஆத்துமாக்களை கொடுப்பதிலும், தேவைகளிலும் ஒருபோதும் நம்மை தோல்வியடையச் செய்யவில்லை. நாம் வாசிப்பதுபோல் கிரியையில்லாத விசுவாசம் செத்தது. நம் விசுவாசம் வார்த்தையில் மாத்திரமல்ல, நடக்கையிலும் வெளிப்பட வேண்டும். சிறிய கடுகு விதையைப்போல் நமக்கு விசுவாசம் இருந்தால் நாம் பெரிய பிரச்சனைகளையும் கடக்க முடியும். உங்கள் விசுவாசத்தின் அளவுதான் என்ன?

**– மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும்.**

*1 தீமோத்தேயு 3:9.*

**விசுவாசம் என்பது ஒரு உணர்வு அல்ல, மாறாக எதிர்கால பாதை நிச்சயமற்றதாகத் தோன்றும் சூழ்நிலையிலும் தேவனை மாத்திரம் நம்ப தெரிவு செய்வதாகும்.** *– தாவே வில்லிஸ்*

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;...**

*எபேசியர் 2:8-9*

**விசுவாசம் என்பது கண்ணுக்குத் தெரியாததைப் பார்க்கிறதும், நம்ப முடியாததை நம்புகிறதும், சாத்தியமற்றதைப் பெற்றுக்கொள்வதும் ஆகும்.**

*– கோரி டென் பூம்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*



# பொதுச்செயலாளரிடமிருந்து...

பிரியமுள்ள ஜெபப் பங்காளர்களுக்கு,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்! கலவரம், நிலையற்றத் தன்மை, வெடிகுண்டு சப்தங்கள் போன்ற மிகவும்மோசமான காலச் சூழ்நிலையில் நம் தேசம் காணப் படுகிறது. தேச எல்லைகளில் பதற்றம், அரசியலில் ஸ்திரத்தன்மையற்ற நிலை, வன்முறையினால் ஏற்பட்ட வடு போன்றவை ஒருவிதமான அமளியை தேசமெங்கும் ஏற்படுத்தி யுள்ளது. ஊடகங்கள் தலைப்புச் செய்தி யாக சுமூகமான பேச்சுவார்த்தைகள் பற்றியும், பதிலடி கொடுக்கப்படுவதைக் குறித்தும் முழக்கமிட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் நிரந்தர சமாதானத்திற்கு திருச்சபையானது இடைவிடா ஜெபம் மற்றும் தைரியமான சாட்சிகளாக நிற்க வேண்டியதின் முக்கியத்துவத்தை இச்சம்பவங்கள் நமக்கு நினைப் பூட்டுகின்றன.

ஊழியம் மற்றும் ஜெபத்தின் பங்காளர் களான நாம், நடந்துக்கொண்டிருக்கும் நிகழ்வுகளை பார்வையிடும் பார்வை யாளர்களாக அல்ல. மாறாக தேவ மீட்பின் பணியில் செயல்படும் செயல் வீரர்களாக செயல்பட நம்மை அழைக்கிறது. நாம் அனுதினமும் வாசிக்கும் தலைப்புச் செய்தி களையெல்லாம் பார்க்கும்போது நாம் ஜெபிப்பதற்கும், சுவிசேஷம் அறிவிக்கவும், சமாதானத்தின் வாய்க்கால்களாகவும் செயல்பட அழைக்கப்படுகிறோம் என்ற நமது கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

## முரண்பாடுகளின் தன்மையை அறிந்துகொள்ளுதல்

நமது வேதாகமத்தில் யுத்தங்கள் மற்றும் அமளிகளைக் குறித்ததான அநேக நிகழ்வுகளை நாம் காணலாம். அதேபோல் அதில் குறிப்பிட்டுள்ள சரீரப்பிரகாரமான யுத்தங்களைவிட ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்து யாக்.4:1இல் ‘‘உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது” என்று யாக்கோபு கேள்வி எழுப்புகிறார். இக்கேள்வியினிமித்தம் நமக்குள்ளாக ஏற்படும் முரண்பாடுகள், பாவம், பெருமை, சுயநலமான நோக்கங்கள் போன்றவற்றை சுட்டிக் காண்பிக்கிறது. இதை நாம் கருத்தில் கொண்டு, நம்மை சுற்றி வெளியில் நடைபெறும் யுத்தங்களைக் காணும்போது அது நமது ஆவிக்குரிய

வாழ்வில் அந்தகார இராஜ்யமானது நம்மை சீர்குலைத்து அழிக்க எத்தனிப்பதை உணரலாம்.

போர் நிறுத்தம் என்பது தற்காலிகமான ஒப்பந்தமானாலும், அப்போரால் ஏற்பட்ட காயங்கள், இதயங்களை ஆற்றுவது என்பது சாத்தியமல்ல. வேதத்தின்படி சமாதானம் என்பது யுத்தங்கள் ஓய்ந் திருப்பது அல்ல, மாறாக நீதி நிலைத் திருப்பது மற்றும் மறுசீரமைத்தல் ஆகும் (எரேமியா 6:14). உண்மையான சமாதானம் என்பது தேவனிடம் நாம் ஒப்புரவாகுதலின் மூலம் கிடைக்கிறது. விசுவாசிகளான நமக்கு நம்பிக்கை என்னும் செய்தி கொடுக்கப்பட்டு, அதை எச்சூழ்நிலையிலும் கலகம் உண்டாயிருக்கும் ஒவ்வொருவருக்கும் அறிவிக்க நமக்கு கட்டளையிடப் பட்டுள்ளது.

## பரிந்து பேசுதல் மற்றும் ஊழியத்திற்கு வேதாகமத்தின் கட்டளை

சரித்திரம் முழுவதும் தேசத்திற்காய் பரிந்துபேசும் நபர்களை தேவன் தேடிக் கொண்டேயிருக்கிறார். எசே.22:30 வசனத்தில் அமளியான வேளைகளில் பின்வாங்காமல் அதிகாரத்தோடே திறப்பில் நிற்கவும், சுவரை அடைக்கவும் திருச்சபையாக அழைக்கப்படுகிறோம். இயேசு கிறிஸ்துவே எருசலேமை நோக்கி அழுது புலம்பினார் (லூக். 19:42). அவரின் கண்ணீரானது தேசங்கள் மெய் சமாதானத்தின் வழியை அறிந்துகொள்ள வேண்டும் என்று வாஞ்சிப்பதை வெளிப்படுத்துகிறது.

மலைப் பிரசங்கத்தில் சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனின் புத்திரர்களெனப் படுவார்கள் (மத். 5:9) என்று இயேசு கற்பித்தார். சமாதானம் பண்ணுகிற வர்கள் செயலற்ற நிலையிலிருக் கலாகாது. அவர்கள் அமளியான இடங்களில் பரிவோடும், ஞானத்தோடும், இராஜ்யத்தின் மதிப்பீடுகளோடும் செயல்பட வேண்டும்.

## தேவைகளின் மத்தியில் ஊழியம்

யுத்தங்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் சுவிசேஷத்தின் தேவை மிக அவசரமாக உள்ளது. சரீரப்பிரகாரமான அழிவுகளின் மத்தியில் மனதளவிலும், ஆவிக்குரிய பாதிப்புகளும் இணைந்து உண்டாகும் பயம், இடமாற்றம் மற்றும் இழப்புகள் அவர்களை தங்கள் சூழ்நிலைகளில் ஒரு பதிலையும் நம்பிக்கையையும் தேடச் செய்கிறது. இங்குதான் நமது ஊழியம் மிகவும் பொருத்தமாக உள்ளது. கிறிஸ்துவின் செய்தியான மனிதன் இறைவனிடம் ஒப்புரவாகுதல், முறிந்துப்போன உறவுகளை கட்டுதல் ஆகிய இவைகளே மெய்யான நிரந்தர சமாதானத்திற்கு வழியாகும்.

நண்பர்களே! சந்திக்கப்படாத, மற்றும் தேவை நிறைந்தவர்களோடு, மிகவும் உணர்ச்சிமிக்க கொந்தளிப்பு நிறைந்த பகுதிகளில் வாழும் மக்களோடு நாங்கள் இணைந்து நிற்கிறோம். நமது ஊழியர்களின் அர்ப்பணம் ஆழ்ந்த அர்ப்பணமாகும். அது நம்பிக்கையின் நங்கூரமாகவும், கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை அறிவிக்கும், குணமாக்குதல் தேவைப்படும் இடங்களில் பரிவோடு சேவை செய்யும் அர்ப்பணமாகும்.

## அமளி நிறைந்த பகுதிகளில் தெய்வீக பாதுகாப்பு

ஜம்மு & காஷ்மீர் மற்றும் பஞ்சாப் பகுதி களில் வாழும் நமது ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு தேவன் கொடுத்த பாதுகாப்பிற்காக அவருக்கு மனமார்ந்த நன்றிகளை செலுத்துகிறோம். குழப்பமான, அபாயகரமான சூழ்நிலைகளிலும் இவர்கள் தங்கள் அழைப்பில் வேரூன்றி நின்றிருக்கின்றனர். அங்குள்ள மக்களுக்கு தைரியத்தோடும், கிருபை பொருந்திய வார்த்தைகளோடும், அசைக்க முடியாத விசுவாசத்தோடும் பணி செய்துள்ளனர்.

அம்மக்களோடே இருந்து அவர் களுக்காக ஜெபிக்கவும், அவர்களை தேவ வசனத்தின் மூலம் உற்சாகப் படுத்தவும், தங்கள் ஆதரவை செலுத்தவும் தங்களை அர்ப்பணித் திருந்தது, கிறிஸ்துவின் அன்பினை வெளிப்படுத்தியதற்கு சாட்சிகளாகும். அவர்கள் ஜெபித்த ஒவ்வொரு ஜெபமும், பகிர்ந்த ஒவ்வொரு வேத வசனமும், செய்த உபகாரங்களும் சுவிசேஷத்தை பிரதிபலிக்கிறது. சங்கீதக்காரன் எழுதி யதை அவர்களின் வாழ்வு (சங்.91:4) சுட்டி காட்டுகிறது.

நமது ஜெபப்பங்காளர்கள் ஒவ்வொரு வரையும், அங்குள்ள நமது ஊழியர் களின் குடும்பத்திற்காய் வாக்குத்தத் தங்களைக் கூறி, அவர்களின் ஜீவன், சுகம் மற்றும் ஊழியத்திற்காக அனுதினமும் ஜெபிக்கவும், அவர்களை இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை களிலும் தேவன் பாதுகாத்து வந்தமைக் காக அவருக்கு நன்றி செலுத்தவும் கேட்டுக்கொள்கிறோம்.

## நம்பிக்கையின் ஓர் பார்வை

நாம் சந்திக்கும் அனைத்து சவால்கள் பெரிதாய் இருப்பினும் நமது விசுவாசம் அதிலும் பெரிது. வெளி. 21:14இல் இனி வரும் காலங்களைக் குறித்த ஒரு வெளிப்பாட்டை தருகிறது. இது ஒரு கற்பனை அல்ல, கிறிஸ்துவின் தூதுவர்களாகவும், அவருடைய களத்தில் பணி செய்பவர்களாகவும் நாம் அன்றாடம் உழைக்கிறோம் என்பதே உண்மை. அதே சமயம், நெகேமியாவையும், அவரோடிருந்த கட்டுமான ஊழியர்களைப்போல நாமும் ஒரு கரத்தில் கட்டுமான தட்டையும், ஒரு கரத்தில் பட்டயத்தையும் எடுத்து தேவ ராஜ்ஜியத்தை கட்டவும், ஜெபத்தில் போராடவும் முனைந்திடுவோம் (கலா.6:9).

அன்பார்ந்த ஊழியப் பங்காளர்களே, இது ஒரு அவசர காலம். ஆனால் தேவன் ராஜரீகம் பண்ணுகிறார். மோதல்கள் கொதித்துக்கொண்டிருக்க, சமாதானம் சாத்தியமற்றிருக்க, ஜாமக்காரர்களாய் மதில்களில் ஏறுவோம். உண்மையோடு பரிந்து பேசுபவர்களாக, தைரிய சாட்சிகளாக, விசுவாசத்தில் அசைக்கப்படாதவர்களாக வாழுவோம். திறப்பில் நிற்கும் காலம் இதுவே. கிறிஸ்துவின் சமாதானத்தை பிரசங்கிக்கும் காலமும் இதுவே. இருளில் வெளிச்சம் அதிகம் பிரகாசிக்கும் என்று நம்பும் காலம் இதுவே. ஒவ்வொரு

கட்டுகளும் ஒழியுமட்டும், காயப்பட்ட இதயங்கள் குணமாகுமட்டும், நம் தேசத்தின் எத்திசையிலும் இயேசுவே ஆண்டவர் என்று முழுங்குமட்டும் நாம் இணைந்து உழைப்போம். தேசத்தை சுதந்தரிப்போம்.

## ஜூன் மாத நிகழ்வுகள்

### ஊழியத்தில் ஈடுபடு, மேம்படு, விரிவாக்கு

இம்மாதம் நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் அவசரமான மற்றும் சுவிசேஷத்தின் முக்கியமான முயற்சி களை முன்வைத்து செயல்படுகிறது.

ஜூன் 6-7 புதிதாக இணையவிருக்கும் ஊழியர்களுக்கான நேர்காணல். இது அறியப்படாத இடங்களுக்கு நாம் அனுப்ப வேண்டிய அறுவடை யாளர்களை தேர்ந்தெடுக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும். நேர்காணலுக்கு வரவிருக்கும் வாலிபர்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். தேவன் அவர்களின் அழைப்பினை உறுதி செய்யவும், ஒரு தெளிவினை கட்டளை யிடவும், அழிந்துபோகும் ஆத்துமாக் களை குறித்ததான ஒரு பாரத்தினால் அவர்கள் நிரம்பிடவும் ஜெபிப்போம்.

ஜூன் 9 பெரியமலை தினத்தை நினைவு கூறுகிறோம். கண்ணீரோடு விதைத்த நமது மூத்த ஊழியர்களின் தியாகம் மற்றும் கடந்து சென்ற பாதைகளை மறுபடியும் நினைவுகூறுவோம். அற்பமான ஆரம்பம். ஆகிலும் சரித்திரமான நமது இயக்கத்தின் ஆரம்பத்தை சிந்திக்கும்போது இம்மாபெரும் அசைவு, சிறிய கீழ்ப்படிதல், தியாகம் மற்றும் ஜெபத்தின் விளைவே என்று நம்புகிறோம்.

ஜூன் 23-29 தேதிகளில் நடைபெறும் மத்திய மண்டல ஊழியர்களின் சந்திப்பு மற்றும் பணித்தள நிகழ்ச்சிகளும் உள்ளன. இந்நாட்களில் நமது ஊழியர்கள் மற்றும் தலைவர்களை உற்சாகப்படுத்திடவும், நமது இயக்கத்தின் நோக்கத்தையும், மதிப்பீடுகளையும் பகிர்ந்தளிக்கக்கூடிய முக்கியமான நாட்களாக அமைந்திடவும், ஒவ்வொரு சந்திப்பும் தேவையான புதிய பெலனைத் தந்து, செய்து முடிக்கவேண்டிய பணிக்கு நேராய் நடத்திடவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

சுகவீனமாக இருக்கும் ஊழியர்களுக் காகவும், கவலை மற்றும் தனிப்பட்ட கடினமான சூழ்நிலைகளில் கடந்துச் செல்லும் நமது ஊழியர்கள் மற்றும் அங்கத்தினர்களுக்காகவும் ஜெபிக்க மறவாதிருங்கள். நமது ஊழியர்களில் சிலர் தங்களுக்கு அருமையானவர்களை இழக்கக் கொடுத்துள்ளனர். இன்னும் சிலர் சிறிய விபத்துகளைச் சந்தித்து அதிலிருந்து குணமாகி வருகின்றனர். சரீர வேதனைகளில் உள்ள ஊழியர் களுக்கு தேவையான சுகம், பெலனை தேவன்தாமே தந்திட ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவராக! ஆமென்!!

தாழ்மையுடன் தேவ பணியில்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**



# விசுவாசம்

விசுவாசம் என்பது நமது திரித்துவ தேவன் மீது நாம் கொள்ளும் நம்பிக்கை, இவ்விசுவாசமானது ஆவியானவரால் ஏவப்பட்டு அதிகாரப்பூர்வமான தேவ வார்த்தைகளை வாசித்து ஏற்றுக்கொள்வதின் அடிப்படையில் வருகிறது, வளர்கிறது.

விசுவாசம் என்பது கிறிஸ்துவின் மீதான நம்பிக்கையின் மூலைக்கல். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாதகாரியம்.

## 1. விசுவாசம் – தேவன் மீதுள்ள பற்று மற்றும் நம்பிக்கை

"...தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11:6). விசுவாசத்தினால் நாம் தேவனின் அதிகாரத்தையும், பெலத்தையும் மற்றும் அவரின் பிரசன்னத்தையும் உணர முடியும். விசுவாசத்தினால் ஒருவன் ஜீவனுள்ள தேவனின் பிரசன்னத்தை தேவ வார்த்தை, வெளிப்பாடு மற்றும் தனிப்பட்ட அனுபவத்தின் மூலமாகவும் அறிந்துகொள்ள முடியும். விசுவாசத்தினால் தேவனின் மகத்துவத்தை புரிந்துகொள்ள முடியும். கர்த்தர் சிருஷ்டிப்பின் மீது அதிகாரத்தையும் வல்லமையையும் கொண்டுள்ளார். தேவன் எந்நேரமும், எல்லா இடங்களிலும் இருக்கிறார். தேவனின் படைப்பு மற்றும் மனித குலத்துடனான உறவின் அடிப்படையில் அவரது அன்பு வெளிப்படுகிறது. அவர் முற்றிலும் பாவமற்றவர். தேவனின் பிற தன்மைகளான நீதிபரர், நன்மை செய்பவர் என்பதை நம் வாழ்வில் அனுபவப் பூர்வமாக அறியலாம். நாம் அவரின் வசனத்தையும், குணாதிசயங்களையும் நம்முடைய வாழ்க்கையில் அனுபவிக்கலாம்.

## 2. விசுவாசம் என்பது வாக்குத்தத்தங்கள் மீதான முழு நம்பிக்கை

ஒரு மனிதன் இரண்டு மலைகளுக்கு இடையில் ஒரு நீண்ட மூங்கில் குச்சியைப்

பிடித்துக்கொண்டு, தோளில் தன் மகனை அமர வைத்து ஒரு இறுக்கமான கயிற்றின் மீது நடந்து கொண்டிருந்தான். அந்த மனிதன் கயிற்றின் மேல் நடந்து சென்று தன் மகனுடன் மறுமுனையை அடைந்தபோது, அங்கு சேர்ந்திருந்த கூட்டம் அவனது மூச்சடைக்க வைக்கும் சாகசத்தைக் கண்டு கைதட்டி, விசில் அடிக்கத் தொடங்கியது. அந்த மனிதன் கூட்டத்தினரிடம் நான் இதை மீண்டும் செய்யலாமா என்று கேட்டான். கூட்டத்தினர் செய்யும்படி கத்தினர். அவர் மீண்டும் கேட்டார். “என் திறமையில் உங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறதா?” என்று கேட்டார். கூட்டத்தினர் ஆம் என்று பதிலளித்தனர். பின்னர் அந்த மனிதன் “உங்களில் ஒருவர், உங்கள் குழந்தையை என் தோள் மீது சுமந்து செல்ல அனுப்புங்கள்” என்று கேட்டார். ஆனால் அதற்கு யாரும் தயாராக இல்லை. அந்த மனிதனுக்கு தங்கள் குழந்தையை கயிற்றின் மீது கொண்டு செல்லும் திறமை உள்ளது என்பதை அறிந்திருந்தனர். ஆனால் அவர்களின் தனிப்பட்ட அனுபவத்தைப் பொறுத்தவரை அவர்களுக்கு அவர் மீது முழுமையான நம்பிக்கை இல்லை. தேவன் மீது நமக்கு அத்தகைய நம்பிக்கையும், விசுவாசமும் இல்லையென்றால் நாம் எப்போதும் கவலையுடனும், மன அழுத்தத்துடனும் இருப்போம். கர்த்தரையும், அவரது வாக்குத்தத்தங்களையும் முழுமனதுடன் நாம் விசுவாசிக்க வேண்டும். (நீதி.3:5-6).

## 3. விசுவாசம் என்பது இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கை

இயேசு கிறிஸ்துவின் மீதும், அவரின் கிருபையின் மீதும் விசுவாசம் வைக்கும் போது இரட்சிக்கப்படுவோம். இரட்சிப்பு என்பது நித்திய ஆக்கினையிலிருந்து காப்பாற்றப்படுவதைக் குறிக்கிறது. இது பாவத்திலிருந்தும், அதன் விளைவுகளிலிருந்தும், தேவனுக்கும், நமக்கும் உள்ள பிரிவிலிருந்தும், இறுதியில் நியாயத் தீர்ப்பிலிருந்தும் காப்பாற்றப்படுவதைக் குறிக்கிறது. இரட்சிக்கப்படுவதற்கு நான்கு படிகள் உள்ளன.

- இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து அதை அறிக்கை யிடுதல் (ரோமர் 10:10)
- பாவத்தன்மையை கண்டுணருதல்
- பாவத்திலிருந்து மனந் திரும்புதல் (பாவத்தை உணர்ந்து, அதற்காக வருத்தப்பட்டு, அதை அறிக்கையிட்டால் அது மனந் திரும்புதலுக்கான முக்கியமான படியாகும். இந்த வகையான மனந் திரும்புதல் இரட்சிப்புக்கு வழி வகுக்கும் (2 கொரி.7:10).
- கிறிஸ்தவ விசுவாசம் என்பது உலகத்தில் நாம் வாழும் வாழக்கை முறையில் வெளிப்படுகிறது (2கொரி.5:7). விசுவாசம் என்பது வார்த்தைகளைவிட அது கிரியை களின் மூலம் வெளிப்பட வேண்டும் (யாக்.2:14).

## 4. தியாகமான சேவை விசுவாசத்தை அதிகரிக்கும்

விசுவாசத்தில் அதிகமாய் வளர என்ன செய்யவேண்டும் என்று சீஷர்கள் கேட்ட போது, ஒரு வேலைக்காரனைபற்றிய உவமையின் மூலம் இயேசு கிறிஸ்து சீஷர்களுக்கு விளக்குகிறார். (லூக்.17:5-10) கடுகளவு விசுவாசமிருந்தால் பெரிய காரியங்களை சாதிக்க முடியும் என்றும், அற்புதங்களை விட கீழ்படிதல் மற்றும் அர்ப்பணிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். விசுவாசம் என்பது ஒருவரின் கடமையை முழுமையாக நிறைவேற்றுவதும், அங்கீகாரம் அல்லது வெகுமதியை எதிர்பார்க்காமல் மற்றவர்களுக்கு பணிவிடை செய்வதாகும். இப்படிப்பட்ட ஊழியத்தின் மூலம் இயேசுவின் வல்லமை மற்றும் அன்பின் சாட்சிகளாக நாம் வாழ முடியும்.

## 5. விசுவாசத்தின் சோதனை

ஒரு தனிநபரின் விசுவாசத்தின் ஆழத்தையும், விசுவாசத்தில் அவர் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்த தேவன் அவனை சோதிக்கிறார். இயேசுவின் மீது இருந்த அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்த கானானியப் பெண்ணின் விசுவாசத்தை இயேசு சோதித்தார். (மத்.15:21-28) இயேசு ஆரம்பத்தில் அவளுடைய கோரிக்கையைப் புறக்கணித்தார். இரண்டாவதாக இயேசு, தான் இஸ்ரவேலர்களுக்காக மட்டுமே அனுப்பப்பட்டதாக பதிலளித்து அவளுடைய கோரிக்கையை மறுத்தார். மூன்றாவதாக அவர், தேவனின் ஆசீர்வாதங்கள் யூத மக்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன, உன்னைப்போன்ற புறஜாதியினருக்கு அல்ல என்றும், மேலும் குழந்தைகளின் ரொட்டி மற்றும் நாய்களின் ஒப்புமையைப் பயன்படுத்தி இயேசு அவளை முற்றிலுமாக நிராகரித்தார்.

இப்படி நிராகரிக்கப்பட்ட போதிலும், இந்தக் கானானியப் பெண் தன் வேண்டுகோளை விடாப்பிடியாகக் முன்வைத்தாள். ஏனென்றால் இயேசுவால் மட்டுமே தன் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பது அவளுக்குத் தெரியும். இப்படிப்பட்ட விசுவாசம் எல்லா சோதனைகளையும் ஜெயிக்க நமக்கு உதவுகிறது. யோபு சாத்தானால் சோதிக்கப்பட்டார். ஆபிரகாம் தேவனால் சோதிக்கப்பட்டார். சீடர்கள் ஒரு காலத்தில் புயலால் சோதிக்கப்பட்டனர். நாமும் தேவனால், சாத்தானால் அல்லது இயற்கை பேரிடர்களால் சோதிக்கப்படலாம். ஆனால் திரியேக தேவன் மீதுள்ள நமது உறுதியான விசுவாசம் இந்த சோதனைகளை ஜெயிக்க நமக்கு உதவும். சோதனைகளிலும், தடைகளிலும் சுத்திகரிக்கப்பட்ட தங்கத்தைவிட நமது விசுவாசம் உயர்ந்ததாயிருக்க வேண்டும்.

**அருள்திரு. ஆபிரகாம் தாமஸ்,**
பிராந்திய செயலர்
- விரிவுப்பணி, மத்திய கேரளா

# சந்தோஷ வித்யாலயா சந்திப்பு





டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவை சகோ. ஜேம்ஸ் தர்மபாலன் அண்ணனோடு பார்வையிட்டேன். அங்கு படிக்கும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகள், பள்ளி முதல்வர் மற்றும் பள்ளி வாரியத்தின் தலைவரோடு செலவிட்ட நேரம் மகிழ்ச்சியாக இருந்தது. FMPB மற்றும் NSM மிஷனெரிகளின் 300க்கும் மேற்பட்ட பிள்ளைகள் இங்கு தங்கி படிக்கிறார்கள். நான் அவர்களை சந்தித்தபோது அவர்கள் கண்களில் பிரகாசத்தையும், அவர்களின் அணுகுமுறையில் ஆர்வத்தையும் காணமுடிந்தது.

இம்மிஷனெரி பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக கணிசமாக முதலீடு செய்வது நமது பொறுப்பு. பள்ளிப்படிப்பு மாத்திரமல்ல, பல்கலைக்கழகக் கல்வி, தொழில் மேம்பாடு, குணநலன் மேம்பாடு மற்றும் மிஷனெரி அழைப்பு ஆகியவற்றிற்காக முதலீடு செய்ய விரும்புகிறோம். பள்ளியுடன் கலந்தாலோசித்து, இது தொடர்பாக சில திட்டங்களை நாம் மேற்கொள்ளலாம். மாணவர்களுடன் நான் உறையாடியபோது பல மாணவர்கள் மிஷனெரிகளாக மாற விருப்பம் தெரிவித்தனர்.

நம் நாட்டின் எதிர்கால தலைவர்களாக நான் அவர்களைப் பார்க்கிறேன். நமது தேசத்தில் மிஷனெரி மருத்துவர்களாக, பொறியாளர்களாக, சிவில் ஊழியர்களாக, நீதிபதிகளாக, விஞ்ஞானிகளாக, ஆசிரியர்களாக, முழுநேர மிஷனெரிகளாகவும், சமுகத்தில் ஒரு தீர்க்கமான மாற்றத்தைக் கொண்டுவரும் அரசியல் தலைவர்களாகவும் அவர்களைப் பார்க்கிறேன். FMPB மிஷனெரி பிள்ளைகளின் விருப்பங்கள் மற்றும் ஆவிக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், சந்தோஷ வித்யாலயாவில் ஒரு மிஷனெரி தம்பதியை நியமிப்பது குறித்து பரிசீலிக்குமாறு பொதுக் காரியதரிசியை கேட்டுக்கொண்டேன். திருநெல்வேலி விடுமுறை வேதாகம சங்கத்துடன் இணைந்து மாணவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்த பரிசீலிக்குமாறு பள்ளி முதல்வரிடம் கேட்டுக்கொண்டேன்.

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர் – FMPB

# பெரியமலை தினம் 2025



பெரியமலை என்பது ஒரு இடத்தின் பெயர் மட்டுமல்ல, மாறாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு அது ஒரு உணர்வு (Emotion) அல்லது உயிர் (Life). ஏனென்றால் 1967 ஜூன் 9ஆம் தேதியன்று தர்மபுரி மாவட்டத்திலுள்ள பெட்டமுகிலாளம் என்ற இடத்தில் பெரியமலை என்ற மலை கிராமத்தில் தான் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் வித்து விதைக்கப்பட்டது. தேவன் அதை விளைய செய்து, இன்று ஆலமரம் போல இத்தேசமெங்கும் பரந்து, விரிந்து, வளர்ந்து வருகின்றது. ஆம்! நமது இயக்கத்தின் முதல் பணித்தளம் இந்த பெட்டமுகிலாளத்திலுள்ள பெரியமலைதான். இத்தனை அழகாக ஆரம்பித்த மாதூய பணியினை கடந்த 58 வருடங்களாக தேவன் பலரைக்கொண்டு பலவிதங்களில் செய்து வருகிறார். ஒரு தனி மனிதனின் கீழ்ப்படிதலைக் கனப்படுத்தி, 58 கனியுள்ள வருடங்களைக் கடக்கவும், அதை எண்ணி தேவனுக்கு நன்றி கூறும் விதமாகவும் இந்நாள் அமைந்துள்ளது. இந்நாட்களில் முதன்முறையாக பெரியமலை என்ற தரிசன பூமியில் அருள்திரு. ஹாரிஸ் ஹில்டன் மற்றும் திருமதி. பத்மா அக்காவை தேவன் பயன்படுத்திய விதங்களை நினைவுகூர்ந்து தேவனை ஸ்தோத்தரிப்போம்.

அவரைத் தொடர்ந்து சென்ற திரு. & திருமதி. ஏசா, திரு. பாக்கிய முத்து, திரு. தேவ நேசன், திரு & திருமதி. எபன் அசரியா ஆகியோர் தேவ ராஜ்யம் இப்பகுதிகளில் கட்டப்பட தங்கள் பணம், படிப்பு, இளமை மற்றும் தாலந்து திறமைகளை முதலீடு செய்தனர். நமது மூத்த அண்ணன்மார், அக்காமார்களையும், அவர்களின் குடும்பங்களையும் நம் ஜெபங்களில் நினைவு கூறுவோம். நீங்கள் சென்று களத்தில் தேவ பணி செய்யுங்கள், நாங்கள் உங்களை எங்களின் ஜெபத்தாலும், காணிக்கைகளினாலும் தாங்குகிறோம் என்று விசுவாசத்தோடு, தியாகத்தோடு அனுப்பிவைத்த நமது ஜெபக்குழுக்கள், தலைவர்களின் பங்கும் இதில் ஏராளம்.

இவ்வாறாக கர்த்தர் பயன்படுத்தின பாத்திரங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம்.

பெரியமலையில் பலதரப்பட்ட மக்கள் கூட்டத்தினர் வாழ்கின்றனர். இவர்கள் இருளர், லிங்காயத்து, ஆதிதிராவிடர், அருந்ததியர், வன்னியர் மற்றும் வெள்ளாள கௌண்டர்கள் ஆவார். 1967க்கு முன் இம்மக்கள் இயேசு கிறிஸ்து என்ற வார்த்தையை ஒருமுறைகூட கேள்விப்படாதவர்களாக இருந்தனர். இவர்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் ஒரு வழியை உண்டுபண்ணினார். தேவ செயலை நாம் தொடர்ந்து வாசிப்போம்.

## முதல்கனி



தேவன் இந்த பெரியமலை பகுதியில் கொடுத்த முதல்கனி **திரு. ராமன்** என்பவர். ஊழியர்கள் இங்கு வந்ததால்தான் மழை இல்லை, எனவே இவர்களின் குடிசையை எரித்துவிட வேண்டும் என்று திரு. ராமன் என்பவரின் தலைமையில் ஆறுபேர் கிளம்பினார்கள். ஆனால் அன்று இரவு முழுவதும் பெருமழை பெய்ததால் அவர்களால் நமது ஊழியர்களை ஒன்றும் செய்ய இயலவில்லை. காலையில் ராமன் ஓடிவந்து உங்கள் தெய்வம் தான் உங்களை காப்பாற்றியிருக்கு. அந்த தெய்வத்தைப் பற்றி எனக்கு கூறுவீர்களா என்று கேட்டார். பத்மா அக்கா இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட ஒரு படத்தைக் காண்பித்து சுவிசேஷம் அறிவித்தார்கள். அந்நாளே தன்னிடம் இருந்த பீடி, சிகரேட்டை தூக்கி எரிந்துவிட்டு, ராமன் ஸ்டீபனாக மாறினார்.

## இரண்டாம் கனி



**திரு. ஜாண் அல்லிமுத்து** என்பவர் மாரண்டஹள்ளி அருகே உள்ள டென்டஹல்லி தபால் நிலையத்தில் போஸ்ட் மாஸ்டர் ஆவார். அவர் பெட்டமுகிலாளத்திற்கு தபால் எடுத்துச்சென்ற போது ராமன் ஸ்டீபன் அறிமுகமானார். பெட்டமுகிலாளத்தில் ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டு 50 வீடுகள் தீக்கிரையாயிற்று. அவ்விபத்தைக் காணச் சென்ற திரு. அல்லிமுத்து அவர்கள் நமது ஹில்டன் அண்ணன் மற்றும் பத்மா அக்காவை காண வாய்ப்புப் பெற்றார். வேடிக்கைப் பார்க்கச் சென்றவர், அண்ணன் அக்காவோடே தங்கி, இயேசு கிறிஸ்துவை பற்றி அறிந்துகொண்டார். இவருக்கு புதிய ஏற்பாடு ஒன்றினைக் கொடுத்தார்கள். 1969ஆம் ஆண்டு டேனிஷ்பேட்டையில் நடந்த கூடுகையில் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரின் மந்தையில் இணைந்தார்.

## மூன்றாம் கனி



**திரு. விக்டர் ராமலிங்கம்** என்பவர் உலகாநள்ளி கிராமத்தில் தலைமை ஆசிரியராக 1967இல் பொறுப்பேற்றார். இவருக்கு திரு. ஜாண் அல்லிமுத்து அறிமுகமாகியுள்ளார். 1967இல் பெட்டமுகிலாளத்தில் நடந்த தீ விபத்தை பார்க்க இவர்கள் இருவரும் சென்றனர். அப்போது மழையில் நனைந்த இவர்களை நமது ஊழியர்கள் தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று உணவு, உடை கொடுத்து, அப்போது அவர்கள் தங்கியிருந்த சிறிய குடிசையான **யோகோவா யீரே**வில் அடைக்கலம் கொடுத்து, இரட்சிப்பிற்கான வழியையும் கொடுத்து அனுப்பியுள்ளனர். திரு. விக்டர் அவர்கள் பெரியமலையிலே தன் விசுவாசத்தை அறிக்கையிட்டு கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து அவரின் குடும்பத்தினர் 27 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தனர்.

இவ்வாறு சுவிசேஷம் பெட்டமுகிலாளம் துவங்கி திரு. எபன் அசரியா அண்ணனின் மூலம் மாரண்டஹள்ளிக்கும் சென்றடைந்தது. இதன் மூலம் திரு. விஜயக் குமார் அவர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்தார். இதைத் தொடர்ந்து இருதுக்கோட்டையில் திரு. & திருமதி. தர்மமணி அவர்களது ஊழியத்தின் மூலம் திரு. பேதுரு முனியப்பா அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு முதல் சுதேச ஊழியராக பணி செய்தார். அவரைத் தொடர்ந்து இன்று இப்பகுதிகளிலிருந்து நான்காம் தலைமுறையினராக பல குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகின்றார்கள். இவர்கள் மத்தியிலிருந்து 27 பேருக்கும் அதிகமானோர் ஊழியர்களாக தேசத்தில் பல பகுதிகளில் தேவ பணியை நிறைவேற்றி வருகிறார்கள். 55 பேருக்கும் அதிகமானோர் சுதேச ஊழியர்களாக ஊழியம் செய்கின்றனர். இன்று இது ஒரு தனி மண்டலமாக மூன்று பிராந்தியங்களை கொண்டு இயங்கி வருகிறது. இங்குள்ள ஆலயங்கள் தன்னிறைவு பெற்ற ஆலயங்களாக தன்னிச்சையாக செயல்படுகின்றன. இங்குள்ள விசுவாசிகளும் நம் இயக்கத்தின் ஊழியங்களை தங்கள் ஜெபத்தாலும், பொருளாலும் தாங்கி வருகின்றனர்.

இங்கு நடைபெறும் ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள். “அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்? பூமியெங்கும் சுற்றிப்பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையில் இருக்கிற தூக்குநூலை சந்தோஷமாய்ப் பார்க்கிறது என்றார்” சகரியா 4:10.

இந்த பெரியமலை தினத்தன்று இங்கு பணி செய்த ஊழியர்களையும், அவர்களின் குடும்பங்களையும் நாம் நினைவுகூர்ந்து அவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்தி ஜெபிப்போம்.

*தொகுப்பாளர்* – **மெர்சி செல்வின்** (தகவல் தொடர்புத்துறை)

# பணித்தள விஜயம் & ஆலயப் பிரதிஷ்டை



தேவ கிருபையால் சென்னை அம்பத்தூரிலிருந்து 25 பேர் கொண்ட குழுவாக 2025 மார்ச் 14-17 வரை சத்தீஸ்காரிலுள்ள நமது பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றோம். 15.03.2025 சனிக்கிழமை பத்தல் காவ் பணித்தளத்தின் அம்பபானி கிராமத்தில் கட்டப்பட்ட புதிய ஆலயப் பிரதிஷ்டையில் பங்குப்பெற்றோம். புதிய ஆலயத்தை FMPBயின் மிஷனெரி அருள்திரு. பாலமுருகன் அவர்கள் திரியேக தேவ நாமத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். இந்த ஆலயத்தை அம்பத்தூர் ஸ்கேன் ஐக்கியத்தைச் சார்ந்த வியாபார பெருமக்கள் கட்டிக்கொடுத்தார்கள். இந்த ஆலயத்தைக் கட்ட திரு. சோகன் குஜ்ர் தன் நிலத்தைக் கொடுத்துள்ளார். முன்பதாக இந்த திருச் சபையின் வாலிபப் பெண்களும், சகோதரிகளும் எங்களை ஆடல், பாடல்களுடன் வரவேற்று, எங்கள் கால்களை கழுவினார்கள். அந்த தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ. பங்குப்பெற்றதோடு எல்லா உதவிகளையும் செய்வதாக வாக்களித்தார்.

16.03.2025 ஞாயிறு அன்று நாங்கள் நான்கு குழுக்களாக பிரிந்து வெவ்வேறு கிராமங்களில் தேவனை ஆராதித்தோம். விசுவாசிகளின் சாட்சி எங்களைப் பிரமிக்க வைத்தது. ஆராதனையில் தேவ செய்தியை நாங்கள் பகிர்ந்துகொண்டு தேவனை மகிமைப்படுத்தினோம். மேலும் இங்குள்ள சிறுவர் மற்றும் சிறுமியர் விடுதிகளைப் பார்வையிட்டோம். விடுதிப் பிள்ளைகளின் பாடல்கள், ஜெபம் மற்றும் நிகழ்ச்சிகள் சிறப்பாக இருந்தது. ஒலி ஒளி நாடகம் மூலம் இயேசுவின் கல்வாரி காட்சியை நம் குழுவினர் நடித்துக் காண்பித்தார்கள். அநேக பிள்ளைகள் கண்ணீரோடு தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அனைவருக்கும் பரிசு பொருட்களைக் கொடுத்து மகிழ்வித்தோம்.

17.03.2025 அன்று மிஷனெரிகள் திரு. முத்து குமார் & திருமதி. நேத்ராவதி முத்து குமார் இருவரும் ஒராவன் மற்றும் கொருவா இன மக்களைப் பற்றியும், ஊழிய கரிசனைகளையும் பாரத்தோடு பகிர்ந்து கொண்டார்கள். இவ்விரு இன மக்களுக்காகவும், சத்தீஸ்கார் மாநிலத்திலுள்ள சுவிசேஷ ஊழியத்திற்கான தடைகள் நீங்கவும் கண்ணீரோடு ஜெபித்தோம். ஆத்தும பாரத்தோடு திரும்பி வர தேவன் உதவி செய்தார். தேவனுக்கே மகிமை!

**திரு. எம். யோகராஜ்,** கௌரவ விரிவுப்பணி செயலர் - அம்பத்தூர் பிராந்தியம்



# விடுதி கட்டிடப் பிரதிஷ்டை

ஒடிசா மாநிலம், தல்பும்கார் பணித்தளத்தில் நம் விசுவாசிகளின் பிள்ளைகள் தங்கி படிக்கும் விடுதியின் கட்டுமானப் பணிக்கு டாக்டர். ரோபல்லோ சாமுவேல் அவர்கள் குடும்பமாக பொருள் உதவி செய்தனர். இந்த விடுதி கட்டிமுடிக்கப்பட்டு 09.03.2025 அன்று தேவ நாம மகிமைக்காக இக்குடும்பத்தினரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மேலும் அந்நாளில் விடுதியின் வெள்ளி விழாவும் கொண்டாடப்பட்டது. முன்னாள் மாணவர்கள், மண்டல செயலர் அருள்திரு. பால்ராஜ், மிஷனெரிகள், விசுவாசிகள் மற்றும் மாணவர்கள் அனைவரும் கலந்துகொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர். அல்லேலூயா!

**திரு. மனோகரன்,** கௌரவ பிராந்திய செயலர் – சூளைமேடு, சென்னை

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



வடசென்னை–இராயபுரம் பகுதியில் கடந்த 13 வருடங்களாக ஜெபக்குழுத் தலைவியாக பொறுப்பேற்று காணிக்கை சேகரித்தும், ஜெபக்குழுக்களை நடத்தியும், ஆலயப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி வாழ்ந்த திருமதி. ஜாய் ராணி (62 வயது) அவர்களின் வாழ்க்கைக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறோம். கடந்த 2 வருடங்களாக தன்னுடைய சரீர பெலவீனத்தின் மத்தியிலும் தன் அர்ப்பணிப்பைக் காத்து, இறுதி வரை தேவப்பணியைச் செய்த சகோதரி 13.02.2025 அன்று தேவ இராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இவர்களை இழந்து வாடும் குடும்பத்திற்காக ஜெபிப்போம்.

**திருமதி. சகுந்தலா டேனியல்,** இராயபுரம்–விரிவுப்பணி



பல வருடங்களாக தேவகோட்டை ஜெபக்குழு பொறுப்பாளராக இருந்து, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தை ஜெபத்தாலும், தனது ஈகையினாலும் தாங்கி வந்த அண்ணன் பி. ஆசீர்வாதம் அவர்கள் (90 வயது) 29.04.2025 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அண்ணனின் உடல் 30.04.2025 அன்று டோனாவூர் சி.எஸ்.ஐ. ஆலயக் கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அண்ணனது ஊழியத்திற்காக தேவனைத் துதித்து, அவர்களின் குடும்பத்தின் அறுதலுக்காக ஜெபிப்போம்.

**திரு. தினகரன்** – தேவகோட்டை

# பணித்தள விஜயம்



தேவ கிருபையால் டெல்லி வடக்கு மத்திய பிராந்தியத்திலிருந்து 25 பேர் கொண்ட குழுவினர் 2025 ஏப்ரல் 19-20 ஆகிய தேதிகளில் ஹரியானாவிலுள்ள ஆழ்வர் பணித்தளத்தைப் பார்வையிடச் சென்றோம். அங்கிருந்து இரண்டு குழுக்களாகப் பிரிந்து சென்றோம். ஒரு குழு துலேபா கிராமத்தில் நடைபெற்ற ஆராதனையில் கலந்துகொண்டதோடு, ஜெபக்குழுத் தலைவர் திரு. சுப்பிரமணி அவர்கள் பகிர்ந்துகொண்ட தேவ செய்தியின் மூலமாகவும், திருமதி. தங்கமணி அவர்கள் தனது சாட்சியின் மூலமாகவும் விசுவாசிகளை உற்சாகப்படுத்தினார்கள். இரண்டாவது குழுவாக திரு. சுந்தர், திரு. ஜாண்சன், திரு. பங்காரு நாயுடு ஆகியோர் கொய்டா கர்மோலி கிராமத்திற்குச் சென்று நமது விசுவாசிகளை சந்தித்தனர். திரு. ஸ்டீபன் அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்துகொண்டார். பின்னர் நாங்கள் ஆழ்வர் விடுதியை பார்வையிட்டோம். இந்த பணித்தள விஜயம் எங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக அமைந்ததற்காக கர்த்தரைத் துதிக்கின்றோம். அல்லேலூயா!

**திரு. சாம்ராஜ்,** விரிவுப்பணி – டெல்லி

## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI** - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb@icici**

**SBI** - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank** - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

## காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**



# பணித்தள விஜயம் & ஆலயப் பிரதிஷ்டை

தேவனுடைய கிருபையால் தூத்துக்குடி வட பிராந்தியத்தின் சார்பாக திருமதி. புனிதா மெயின்ராஜ் அவர்களின் தலைமையில் 9 பேரும், அருட்திரு. டேனியல் அருள்மணி அவர்களின் தலைமையில் இளைஞர் பிரிவின் சார்பாக சென்னையிலிருந்து 13 பேரும் 26.02.2025 அன்று பிராயணப்பட்டு 28ஆம் தேதி பர்ஹர்வா, மெர்சி சிறுமியர் விடுதிக்குச் சென்றடைந்தோம். அங்கு மிஷனெரி கல்லறைத் தோட்டத்தைப் பார்வையிட்டு அவர்களின் வாழ்விற்காக தேவனைத் துதித்து ஜெபித்தோம். 28.02.2025 அன்று கோவில்பட்டி, CSI சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயம் மற்றும் குமரி மாவட்டத்தைச் சார்ந்த திரு. ஜே. கிறிஸ்டோபர் ஜாண் குடும்பத்தின் சார்பாகவும் ஹிரன்பூர் கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயத்தையும், 02.03.2025 அன்று குமரி மாவட்டத்தைச் சார்ந்த திரு. ஜெயசிங் அவர்கள் குடும்பமாக திரு. ஆலிவா நினைவாக கொடும்பூர் கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயத்தையும் அருள்திரு. D. சாமுவேல் தாமஸ் ராக்லாண்ட், மன்ற தலைவரும், கோவில்பட்டி பாஸ்ட்ரேட் தலைவரின் முன்னிலையில் IMS பொதுக் காரியதரிசியுமான ஐயா அவர்களின் தலைமையில் இவ்விரு ஆலயங்களையும் மங்கலபடைப்பு செய்யப்பட்டுள்ளது.

01.03.2025 அன்று தூத்துக்குடி வட பிராந்தியத்தின் சார்பாக மால்டோ விசுவாசிகளின் பெண் பிள்ளைகளுக்காக கங்குபாடா கிராமத்தில் கட்டி வரும் விடுதியைப் பார்வையிட்டு ஜெபித்தோம். பின்னர் பெல்டிஹா பணித்தளத்தில், பாரு கிராமத்தில் நடைபெற்ற சந்தால் விசுவாசிகளின் மேளாவில் கலந்துகொண்டோம். இம்மேளாவில் சுமார் 4500 பேர் கலந்து கொண்டனர். அருள்திரு. D. சாமுவேல் தாமஸ் ஐயா அவர்களின் தலைமையில் திருவிருந்து மற்றும் மிஷனெரி அர்ப்பணிப்பு ஆராதனை நடைபெற்றது. நம் மூலம் அனுப்பட்ட மிஷனெரிகளின் கடின உழைப்பும், நம்மால் தாங்கி ஆதரிக்கும் சிறுவர்களின் வளர்ச்சி அனைத்தையும் கண்ணாரக் கண்டு தேவனைத் துதித்து, அர்ப்பணிப்போடு திரும்பி வர தேவன் கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**அருட்திரு. I. மெயின்ராஜ்,** பிராந்திய செயலர்–தூத்துக்குடி



# ஆலயப் பிரதிஷ்டை



சென்னை ரெட்ஹில்ஸ் பகுதியிலிருந்து 13 பேர் கொண்ட குழுவாக ஏப்பரல் 3ஆம் தேதி ஒடிசா மாநிலத்திலுள்ள உத்கல் பிராந்தியத்திற்கு பணித்தள விஜயம் சென்றோம். 04.04.2025 அன்று மிஷனெரி கிரஹாம் ஸ்டெய்ன்ஸ் அவர்களின் வீடு, மருத்துவமனை, தொழுநோய் காப்பகம் மற்றும் அவர்களின் கல்லறையை பார்த்து ஜெபித்துவிட்டு, மாலையில் ஜஷிப்பூர் பெண்கள் விடுதிக்குச் சென்றோம். 05.04.2025 அன்று சிம்பிலிபாடா மலைப்பகுதிகளிலுள்ள பேக்காகரா சபை மக்களோடு இணைந்து தேவனை ஆராதித்தோம். 06.04.2025 அன்று ராதாநகர் ஆலயப் பிரதிஷ்டை விழாவில் கலந்துகொண்டோம். ஆலயம் கட்ட தன்னுடைய நிலத்தைக் கொடுத்த திரு. ரமேஷ் பத்ராவுக்கும், நிதி உதவி வழங்கிய ராதாபுரம் திருமதி. பிளாரன்ஸ் நேசமணி குடும்பத்திற்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

07.04.2025 அன்று கியோஞ்சஹர் பணித்தளத்திலுள்ள பெல்டா கிராம தற்காலிக ஆலய (மரக்கட்டை, தார்பாயினால் அமைக்கப்பட்ட ஆலயம்) ஆராதனையில் கலந்துகொண்டு பிரமித்துப்போனோம். 08.04.2025 அன்று காலை முதல் மதியம் வரை உத்கல் பிராந்தியத்திலுள்ள அனைத்து மிஷனெரிகளோடு இணைந்து உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டோம். எல்லா இடங்களிலும் ஹோ இன மக்கள் தங்கள் கலாச்சார முறைப்படி எங்களை வரவேற்றனர். இன்னும் அநேக ஆலயங்கள் கட்டப்பட வேண்டும், ஊழியத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்ற கனத்த இதயத்துடன் சென்னை திரும்பி வந்தோம்.


**திரு. ரஞ்சித் பாண்டியன்,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – ரெட்ஹில்ஸ்

## *மனந்திரும்பிய மைந்தன்*

*ஜம்மு, நௌஷேரா பணித்தளத்தில் ஆலயம் கட்ட நிலத்தை நன்கொடையாக கொடுத்த திரு. குல்தீப் ஒரு நல்ல விசுவாசி. இருப்பினும் குடும்பப் பிரச்சினையின் காரணமாக ஆலயத்திற்கு வருவதை நிறுத்திவிட்டார். பல வருடங்களுக்குப் பிறகு சபையினரின் ஜெபத்தைக் கேட்ட தேவன் மீண்டும் அவர் தனது மனைவியுடன் ஆலய ஆராதனையில் பங்குபெற கிருபை செய்தார். அல்லேலூயா!*

# கோகமுக் மற்றும் தகுவாகானா






# பணித்தளங்கள்

அசாம் மாநிலம் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் கிழக்கு இமயமலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இது வடக்கே பூட்டான் மற்றும் தெற்கே வங்காள தேசம் ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டுள்ளது. அருணாச்சலப்பிரதேசம், மேகாலயா, திரிபுரா, நாகலாந்து, மணிப்பூர் மற்றும் மிசோராம் ஆகிய ஏழு மாநிலங்களையும் எல்லையாகக் கொண்டுள்ளது. இவை இந்தியாவின் **'ஏழு சகோதரிகள்'** என்று அழைக்கப்படுகின்றன. அசாமில் 35 மாவட்டங்கள் உள்ளன. திஸ்பூர் அதன் தலைநகரமாக உள்ளது. புவியியல் ரீதியாக அசாம், மலைகள் மற்றும் பள்ளத்தாக்குகளால் நிறைந்துள்ளது. அசாம் இமயமலை என்று அழைக்கப்படும் கிழக்கு இமயமலைத் தொடர், பரைல் மலைத்தொடர் மற்றும் ஏராளமான சிறிய மலைகளை உள்ளடக்கியுள்ளது. பிரம்மபுத்திரா நதி அசாமின் வழியாக 650 முதல் 725 கி.மீ. வரை பாய்கிறது. பிரம்மபுத்திரா மற்றும் பராக் பள்ளத்தாக்குகள் விவசாயம் மற்றும் தேயிலைத் தோட்டங்களுக்கு வளமான வெள்ளப்பெருக்குகளாக செயல்படுகின்றன. அசாமின் இந்த புவியியல் அம்சங்கள் மாநிலத்தின் இயற்கை அழகை அதிகரிக்கின்றன.



கோகமுக் மற்றும் தகுவாகானா பணித் தளங்கள் அசாமின் தேமாஜி மற்றும் லக்கிம்பூர் மாவட்டங்களிலும் பிரம்ம புத்திராவுக்கு அருகிலும் அமைந்துள்ளன. இங்குள்ள மக்களின் முக்கியமான தொழில் விவசாயம் மற்றும் மீன்பிடித்தல். இங்கு அதிகளவில் மழை பெய்வதால் ஆண்டுக்கு இரண்டு அல்லது மூன்று முறை வெள்ளப்பெருக்கத்தினால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால்



இங்குள்ள மக்கள் ஸ்டில்ட் எனப்படும் தரையிலிருந்து உயரமாகக் கட்டப்பட்ட மூங்கில் வீடுகளில் வாழ்கின்றனர்.

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் இரண்டாவது பெரிய மக்கள் இனமாக மிஸ்ஸிங் பழங்குடியினர் கோகாமுக் மற்றும் தகுவாகானா பணித்தளங்களில் வாழ்கின்றனர். முன்பு '**மிரி**' என்று அழைக்கப்பட்ட இவர்கள் இப்போது அதிகாரப்பூர்வமாக மிஸ்ஸிங் மக்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். பிரம்மபுத்திரா பகுதிகளைச் சுற்றி வசிப்பதால் இவர்கள் '**நதி**' மக்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

இந்தப் பகுதி மக்கள் பல்வேறு கலாச்சார மற்றும் பாரம்பரிய நடைமுறைகளைக் கொண்டுள்ளனர். மிஸ்ஸிங் இன மக்கள் இயற்கையை வணங்குபவர்கள். அவர்களின் நம்பிக்கை சூரியன் (டோனி) மற்றும் சந்திரனை (போலோ) மையமாகக் கொண்டது. மேலும் மூதாதையர்களின் ஆவிகள், நட்சத்திரங்கள், இடி, மின்னல் போன்ற இயற்கையையும் வணங்குகிறார்கள். உதாரணமாக **அலி–ஐ–லிகாங்** என்பது விதைகளை விதைப்பதற்கு முன்பு கொண்டாடப்படும் ஒரு பண்டிகையாகும். இதில் அவர்கள் நல்ல அறுவடைக்காக சூரிய கடவுளிடம் முறையிடுகிறார்கள்.

2008ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூலம் இங்கு ஊழியம் துவங்கப்பட்டது. நமது மிஷனெரி சகோதரிகள் கவிதா மற்றும் அகிலா முன்னோடி மிஷனெரிகளாக இப்பகுதியில் ஊழியம் செய்தனர்.

2009இல் நமது முதல் விசுவாசியும், சுதேச ஊழியருமான மில்லன் குட்டுமின் மகள் ரிங்கு குட்டும் கிறிஸ்தவரல்லாத ஒருவரை மணந்தார். தனது மாமியாரின் மத பழக்கவழக்கங்களைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டது. தனது கணவரின் இரட்சிப்புக்காக 10 ஆண்டுகள் தொடர்ந்து ஜெபித்து வந்தாள். 2019இல் கர்த்தர் அவளுடைய ஜெபங்களுக்குப் பதிலளித்தார். அவளுடைய கணவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவே மெய்யான தெய்வ மென்று அறிக்கையிட்டார். பின்னர் இந்த தம்பதியினரின் அழைப்பின் மூலம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியப் பணி கோகமுக் பகுதியில் தொடங்கப்பட்டது.

ஊழியர்களின் பிரயாசத்தை ஆசீர்வதித்து, தேவன் கிரியைச் செய்ய துவங்கினார். அருகிலுள்ள கொசுதுலி கிராமத்தில் ஒரு புதிய சபை நிறுவப்பட்டது. சுற்றியுள்ள கிராமங்களில் பல அற்புதங்களை தேவன் நடப்பித்தார். திரு. லீலா மிசோங்கின் வயிற்றிலிருந்த நீர்க்கட்டி ஜெபத்தின் மூலம் மறைந்தது. திருமதி. பிலேஷ்வரி இரத்தப் புற்றுநோயிலிருந்து குணமடைந்தார். தேவனை விசுவாசித்த திரு. ஹேமகாந்தோ குடிப்பழக்கத்திலிருந்து விடுபட்டார். சிறுநீரக செயலிழப்பிலிருந்து மஞ்சு குண மடைந்தார். ஹதியமோரா கிராமத்தைச் சேர்ந்த திரு. மங்கள்சன் வயிற்றுப்புண் மற்றும் கொப்பளங்களிலிருந்து சுகம்பெற்றார். இவ்விதமாக ஜெபத்தின் மூலம் தேவன் அநேகருக்கு அற்புத சுகம் அருளினார். இதன் மூலம் சபை துவங்கப்பட்டது.

கடந்த ஆறு ஆண்டுகளில் கர்த்தரின் கிருபையால் 111 ஆத்துமாக்கள் சபையில் இணைந்துள்ளனர். முதல் 5 ஆண்டுகளில் 60 விசுவாசிகளும், கடந்த ஆண்டில் 51 புதிய ஆத்துமாக்களும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தற்போது கோகமுக் பகுதியில் நான்கு சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 2022ஆம் ஆண்டில் தகுவாகானாவில் புதிய பணித்தளத்தைத் திறக்க தேவன் கிருபை செய்தார். முல்லோரியன் என்ற கட்டிகள் மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட திரு. தேவகாந்தோ என்பவர் ஜெபத்தின் மூலம் அற்புத சுகம்பெற்றார். இதன் மூலம் ஒரு சிறு ஆராதனைக்குழு துவங்கப்பட்டது. மிஸ்ஸிங் பழங்குடியினரிடையே நமது ஊழியம் லக்கீம்பூர் வரை விரிவடைந்துள்ளது. இவ்வருட ஊழியத்தின் இலக்கு கோகமுக் மற்றும் தகுவாகானா பணித்தளத்தளங்களிலுள்ள 412 கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து, சுமார் 100 பேரை கிறிஸ்துவின் மந்தையில் இணைப்பதாகும்.

இங்கு பணிசெய்யும் மிஷனெரிகளுக்கு உள்ள முக்கிய சவால்களில் ஒன்று, கிறிஸ்தவம் ஒரு வெளிநாட்டு மதம் என்றும், தாழ்ந்த சாதியினருடையது என்றும் மக்கள் நம்புகிறார்கள். மேலும் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் சமூகத்தில் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். இப்பணித்தளங்களில் ஊழியங்கள் சிறப்பாக நடைபெறவும், அநேக மக்கள் கிறிஸ்துவை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## ஜெபிக்க

- மழை, புயல், பிரம்மபுத்திரா மற்றும் என்.எச்.பி.சி. அணை ஆகியவற்றினால் ஏற்படும் வெள்ளப்பெருக்கிலிருந்து மக்களையும், விவசாய நிலங்களையும் தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.
- வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் கடுமையான பாதிப்புகள் மற்றும் நீர் மூலம் பரவும் நோய்களால் மக்கள் இடம் பெயர்ந்து செல்கின்றனர். அரசாங்கம் உறுதியான தடுப்பணைகளை கட்டவும், நோய்களிலிருந்து மக்களை தேவன் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.
- மக்களிடையே மனநலப் பிரச்சனைகளை ஏற்படுத்தும் போதைப்பொருள் பயன்பாடு, அரிசி பீர் மற்றும் குடிப்பழக்கத்திலிருந்து மக்கள் விடுதலைபெற ஜெபிப்போம்.
- இங்கு பரவலாகக் காணப்படும் மூளைக் காய்ச்சல், புற்றுநோய் ஆகியவற்றிலிருந்து ஜனங்கள் சுகம்பெற ஜெபிப்போம்.
- மூதாதையர் வழிபாடு மற்றும் சிலை வணக்கத்திலிருந்து மக்கள் விடுபட்டு உண்மை தெய்வத்தை ஆராதிக்க ஜெபிப்போம்.
- கிறிஸ்தவத்திற்கு எதிராக செயல்படும் மதவாத இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும், ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

# மிஷனெரிகள் பிரதிஷ்டை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஆவடி பிராந்தியத்தின் சார்பில் மத்தியப் பிரதேசத்தின் மோரேனா மற்றும் மஹாராஷ்டிராவின் ஆலப்பள்ளி ஆகிய பணித்தளங்களில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரிகள் இருவர் 13.04.2025 அன்று சென்னை ஆவடியிலுள்ள Centenary Church of the Nazarene திருச்சபையில், போதகர் அருட்திரு. J. டேவிட்சன் மற்றும் அருட்திரு. கிறிஸ்துதாஸ் (சபை போதகர், முகப்பேர் நசரேய திருச்சபை) அவர்களின் தலைமையில் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இம் மிஷனெரி குடும்பங்களை Centenary Church of the Nazarene, ஆவடி மற்றும் திரு. ராஜசேகர் குடும்பம் தங்கள் ஜெபத்தினாலும், ஈகையினாலும் தாங்கி வருகின்றனர். இவர்களுக்காக கர்த்தரைத் துதிக்கின்றோம். இந்த மிஷனெரிப் பிரதிஷ்டை ஆராதனை சிறப்பாக நடந்து முடிய கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**திரு. ஜான் டிக்சன்,** கௌரவ விரிவுப்பணி பிராந்திய செயலர் – ஆவடி.

27.04.2025 அன்று தேவனுடைய பெரிதான கிருபையால் 25 மிஷனெரிகள் சி.எஸ்.ஐ. தூய பவுல் ஆலயத்தில் (அவினாசி ரோடு, திருப்பூர்) அருட்திரு. பு. ஆனந்த் குமார், தலைவர்/ஆயர் மற்றும் துணை ஆயர் அருட்திரு. பி. பால் டேவிஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். செயலாளர் திரு. ஜெயரூபன் ஜான்சன் (தூய பவுல் ஆலயம்) அவர்கள் மற்றும் அலுவலர்கள் குழுவாக இணைந்து ஆலயப் பொறுப்புகள் அனைத்தும் சிறப்பாக நடத்தி தந்தார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! ஆதரவாளர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் தாங்கள் தாங்கும் ஊழியர்களை தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச் சென்று நன்கு உபசரித்து, மீண்டும் அவர்கள் ரயிலில் பயணப்படும் வரை அவர்களை ஆதரித்து அனுப்பி வைத்தது நெகிழ்ச்சிக்குரிய காரியம். ஜெபித்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அருட்திரு. வின்செண்ட் பிரேம்ராஜ்,** பிராந்திய செயலர் – திருப்பூர்

கோவை, காந்திபுரம், புதிய முல்லை நகரிலுள்ள சி.எஸ்.ஐ. கிறிஸ்து தேவாலயத்தில், பிரஸ்பைட்டார் அருள்திரு. ஆஸ்டின் அவர்களால் மத்தியப்பிரதேசம், தார் பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மிஷனெரியின் பிரதிஷ்டை ஆராதனை 04.05.2025 அன்று மிக சிறப்பாக நடத்திவைக்கப்பட்டது. இம்மிஷனெரியை இச்சபையின் ஆண்கள் ஐக்கியத்தின் சார்பாக ஆதரித்து வருகின்றனர். மேலும் ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் தலைவர், பொருளாளர், செயலர் மற்றும் நமது இயக்கத்தின் ஜெபக்குழுத் தலைவரான திரு. ஜேம்ஸ் ஆகியோருக்காக தேவனைத் துதிப்போம். இம்மிஷனெரி இச்சபையின் மூலம் தாங்கப்படும் முதல் மிஷனெரி என்பது குறிப்பிடத்தக்கது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

**அருட்திரு. P. டேவிட்,** விரிவுப்பணி பிராந்திய செயலர் – கோவை.

# போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம்



1987 டிசம்பர் 7ஆம் தேதி நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுக் கூட்டத்தில் ஜூன் 26ஐ சர்வதேச போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் கடத்தலுக்கு எதிரான தினமாக அறிவித்தார்கள். உலகளாவிய போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் கடத்தல் இல்லாத ஒரு சமூகத்தை நோக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நடவடிக்கை எடுக்கவும் இந்த நாள் குறிக்கப்பட்டது.

போதைப்பொருள் ஒரு நபரை தற்காலிக இன்ப நிலையில் வைக்கிறது. அதனால் பலர் போதைப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளனர். போதைப்பொருள் உபயோகிக்கும் நபருடைய மூளையின் நரம்பியல் செயல்பாடு பாதிக்கப்படுகிறது. இது நீண்டகால பிரச்சனைக்கு வழிவகுக்கிறது. மேலும் அந்நபரின் கற்றல், சிந்தித்தல் மற்றும் நினைவாற்றல் பாதிக்கப்படுவதோடு மன அழுத்தமும், நடத்தையில் மாற்றமும் ஏற்படுகிறது. இப்படிப்பட்டத் தீங்கு விளைவிக்கும் போதைப்பொருளைப் பற்றி அறிந்திருந்தாலும், பலர் அவர்களின் அன்றாட போராட்டங்களிலிருந்து தப்பிக்கும் ஒரு வடிவமாக போதைப்பொருளைக் கருதுகிறார்கள்.

உலக ஐக்கிய நாடுகளின் அறிக்கையின்படி, 2022ஆம் ஆண்டு உலகளவில் போதைப்பொருள் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 292 மில்லியனாகவும், அதில் 64 மில்லியன் மக்கள் போதைப்பொருள் பயன்பாட்டினால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளில் 20% அதிகரித் திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் 73.25 மில்லியனுக்கு அதிகமானோர் போதைப்பொருள் மற்றும் மது அருந்துபவர்களாக உள்ளனர். மேலும் 2021ஆம் ஆண்டின் நிலவரப்படி போதைப்பொருள் பயன்படுத்துவதினால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் (6.3 மில்லியன்) இந்தியா 3வது இடத்தில் உள்ளது.

இந்த போதைப்பொருள் பரவலுக்குக் காரணம், போதைப்பொருள் கடத்தல் வணிகங்கள் அதிகரித்து வருவதே ஆகும். உலகின் போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யும் முக்கிய மையங்களில் ஒன்றாக இந்தியா உள்ளது. 2024ஆம் ஆண்டில் மட்டும் 1.07 பில்லியன் டாலர் மதிப்புள்ள போதைப்பொருள் இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிக்கைகள்

தெரிவிக்கின்றன. கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் தற்போது போதைப்பொருள் வணிகங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. கேரள மாநிலத்தில் மட்டும் 1377 போதைப்பொருள் விற்பனை மையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக காவல்துறை நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. நமது நாடு தற்போது எந்த அளவிற்கு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்பதை இது காட்டுகிறது.

இன்றைய இளைஞர்களில் பலர் தங்கள் நண்பர்களின் வற்புறுத்துதலினால் இப்போதைப் பொருளை உட்கொள்கிறார்கள். பெரும்பாலும் போதைப்பொருள்களை உட்கொள்வதை "கூல்" என்று அவர்கள் கருதுகிறார்கள். இன்றைய இளைஞர்கள் மது மற்றும் சிகரெட்டுகளைவிட போதைப்பொருட்களை அதிகம் விரும்புகின்றனர். தற்போது இந்த போதைப்பொருள் விநியோகம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் தாராளமாக நடைபெற்று வருகின்றது. இளம் வாலிபர்களுக்கு இப்போதைப்பொருளை இலவசமாகக் கொடுத்து, அதற்குப் பதிலாக அவர்களை போதைப்பொருளை விற்பனை செய்யும் 'கேரியர்களாக' பயன்படுத்துகிறார்கள். இதன் மூலம் அநேக இளம் வாலிபர்களின் வாழ்க்கைச் சீரழிந்து காணப்படுகிறது.

18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் இப்போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளனர். இது அவர்களின் வளர்ச்சி மற்றும் எதிர்காலத்தைப் பெரிதும் பாதிக்கிறது. உடல் மற்றும் மனரீதியாக பாதிக்கப்படுவதோடு பெரும்பாலானோர் வாழ்வா, சாவா என்ற நிலையில் இருப்பதைப் பார்க்கிறோம். மேலும் இவர்கள் வன்முறையாளர்களாக மாறி, திருட்டு, கொலை, கடத்தல் போன்ற குற்றங்களைச் செய்தும் வருகிறார்கள். உதாரணமாக பிப்ரவரி மாதம், போதைப் பழக்கத்தால் கடனில் மூழ்கிய 23 வயது இளைஞன் ஒருவன் தனது குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஆறு பேரைக் கொன்ற சம்பவம் நிகழ்ந்துள்ளது. போதைப் பழக்கத்திலிருந்து விடுபடுவது ஒரு பெரிய போராட்டமாகவே காணப்படுகிறது. எனவே, இவர்கள் இது போன்ற குற்றங்களில் மூழ்கிவிடாமலிருக்க அவர்களுக்கு சிறந்த சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வசதிகள் வழங்கப்படுவது அவசியம்.

போதைப்பொருள் உற்பத்தி மற்றும் விநியோகத்தைக் கண்காணிக்க பல்வேறு பிரச்சாரங்கள் மற்றும் சட்ட அமலாக்கக் குழுக்கள் மூலம் அரசாங்கம் தன்னால் முடிந்ததைச் செய்து வருகிறது. இருப்பினும் தேவனின் பிள்ளைகளாகிய நாமும் இப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டோருக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். நம் தேசத்தில் ஒரு மாற்றத்தைக்காண நாம் ஜெபிக்க வேண்டியது அவசியம். 1 கொரி. 6:19 "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" என்று பார்க்கிறோம். நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல. நமக்கு கொடுக்கப்பட்ட சரீரம் கடவுளுக்குச் சொந்தமானது. நாம் அதைப் பரிசுத்தமாக வைத்திருக்க வேண்டும். நம்மை நாமே அழித்துக்கொள்ளக் கூடாது. எனவே இந்த ஜூன் 26ஆம் தேதி, போதைப்பொருள் தொடர்பான அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் நம் தேசம் விடுபட கர்த்தரின் பாதத்தில் மன்றாடி ஜெபிக்க நம்மை அர்ப்பணிப்போம்.

## ஜெபிக்க

- நமது தேசத்தில் தற்போது போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள இளம் வாலிபர்கள் முதல் பெரியவர்கள் வரை இப்பழக்கத்திலிருந்து விடுதலைபெறவும், அவர்கள் குடும்பங்களின் சமாதானத்திற்காகவும்...
- போதைப் பழக்கத்திலிருந்து விடுபட போராடும் மக்களுக்கு தேவன் உதவி செய்ய...
- போதைப்பழக்கத்தினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்கள் மீண்டும் அதில் சிக்கிக்கொள்ளாதபடி தேவன் அவர்களை பாதுகாக்க...
- போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் விநியோகத்தில் ஈடுபடும் இளைஞர்கள் மனந்திரும்பி அதிலிருந்து விடுபடவும், பள்ளிப் பிள்ளைகளின் பாதுகாப்பிற்காகவும்...
- போதைப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவர்களை மீட்டெடுக்க விழிப்புணர்வுகள், மறுவாழ்வு மையங்கள் மற்றும் சிகிச்சை முறைகள் அதிகமாய் அரசாங்கத்தின் மூலம் கொண்டு வர...
- சட்ட விரோதமாக போதைப்பொருட்கள் கடத்தல், உற்பத்தி மற்றும் விற்பனை போன்றவற்றைத் தடுக்க அரசாங்க அதிகாரிகள் சரியான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க..
- இதுபோன்றத் தொழில்களில் ஈடுபடும் மக்கள் மனந்திரும்ப...
- நாம் ஊழியம் செய்யும் பணித்தளங்களில் போதை மற்றும் குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள மக்கள் மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.



## மகிமைக்குள் பிரவேசித்தார்

திரு. பால் மாணிக்கராஜ் அண்ணன் அவர்கள் மிகவும் தாழ்மை யானவர். திரு. நவநீதர் அண்ணன் மூலமாக தேசத்தின் தேவையை அறிந்து அதற்காக அதிகமாக ஜெபித்தவர். ஓவியம் வரையும் தாலந்தை சுவிசேஷ இரத ஊழியத்தின் வளர்ச்சிக்காகவும் மற்றும் மாநில முகாமிலும் பயன்படுத்தி வந்தார்கள். ஓவிய ஆசிரியராக டோனாவூரில் உள்ள வாக்கர் மேல் நிலைப் பள்ளியில் பணியாற்றினார். தன்னுடைய ஆசிரியர் பணியை விருப்பு ஓய்வு பெற்று (VRS) 2002ஆம் ஆண்டு முதல் வள்ளியூர் பணிமாவட்ட கௌரவ முன்னேற்றப் பணி செயலராக பொறுப்பேற்று FMPBயின் ஊழியத்தை அனைத்து கிராம சபைகளுக்கும் எடுத்துச் சென்றார்கள். தன்னுடைய இறுதி மூச்சுவரை FMPBயின் ஊழியத்தில் மிகவும் ஈடுபாடு உள்ளவராக இருந்தார். 09.12.2024 அன்று திடீரென ஏற்பட்ட சுகவீனத்தின் காரணமாக தேவ ராஜ்ஜியத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அண்ணன் விட்டுச்சென்ற அவர்களின் மனைவி, மகள்கள் மற்றும் மகன் குடும்பத்திற்காக தொடர்ந்த ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**திரு. R. எட்வர்ட் ராஜதுரை,** கௌரவ முன்னேற்றப்பணி செயலர் – வள்ளியூர்

# பாதல்கடி ஆலய வரலாறு

## அஹ்வா பணித்தளம்
## குஜராத்



அருள்திரு. எல். மாசிலாமணி

### அறிமுகம்

813 மக்கள் தொகை கொண்ட பாதல்கடி கிராமம் இந்தியாவின் குஜராத் மாநிலத்திலுள்ள டாங்ஸ் மாவட்டத்தின் அதிக மக்கள் தொகை கொண்ட 85வது நடுத்தர கிராமமாகும். டாங்ஸ் மாவட்டத்தில் லாவ்சாலி பஞ்சாயத்திற்குட்பட்ட பாதல்கடி கிராம மானது அஹ்வா என்ற பட்டணத்தி லிருந்து 30 கி.மீ. தூரத்திலுள்ளது. 178 குடும்பங்களை கொண்ட இக்கிராமத்தில், 2011 கணக்கெடுப்பின்படி 61.86% கல்வியறிவு பெற்றவர்கள் உள்ளனர்.

### ஆரம்பம்

அருட்திரு. எல். மாசிலாமணி குடும்பமாக 08.05.1981 அன்று அஹ்வா பணித் தளத்தை ஆரம்பித்தனர். பாதல்கடி கிராமத்திலிருந்து மூன்று கி.மீ. தூரத்தி லுள்ள சிக்லி என்ற இடத்தில் 1985இல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத் தின் மூலம் ஆலயம் ஒன்று கட்டப்பட்டது. நோய்வாய்ப்பட்ட அநேகர் இவ்வாலயத் திற்கு வந்து ஜெபித்து சுகம் பெற்றனர். முதல்முறையாக பாதல்கடி கிராமத்தைச் சேர்ந்த ஜிப்ரு பென் டோங்காரு பாய் பர்தியா என்பவர் சிக்லி ஆலயத்திற்குச் சென்று, ஜெபித்து தன் வியாதி நீங்கி சுகம் பெற்றதால் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, ஆலய ஆராதனையில் பங்குபெற்று வந்தார். இரண்டாவது நபர் ஜானுபாய் சித்தர் பாய் பர்தியா ஆவார். இவரது மகனுக்கு வியாதியிலிருந்து தேவன் சுகம் தரவே, தன் கிராமத்திலுள்ள மற்ற நோயாளிகளுக்காக ஜெபிப்பதிலும், அவர்களை சிக்லி ஆலயத்திற்கு அழைத்துச் செல்வதிலும் முக்கிய பங்கு வகித்தார். அவ்வாறாக பாதல்கடி கிராமத்தில் ஆராதனை துவங்கும் வரை சிக்லி ஆலயத்தின் ஆராதனைக்கு விசுவாசிகள் சென்றுவந்தனர்.

சக்காராம் பாய் புண்யா பாய் கால்வி என்பவரது மனைவி தீராத வயிற்று வலியினால் வேதனைப்பட்டு வந்தார். மந்திரவாதிகளிடம் சென்றும் பலன் கிடைக்காததால் ஜானுபாயின்

அறிவுறுத்தலின்படி சிக்லி ஆலயத்திற்கு தன் மனைவியை அழைத்துச் சென்றார். அங்கு சபை மூப்பர் ஜடார்யா பாய் அவரது மனைவிக்காக ஜெபித்தபோது தேவன் அற்புத சுகமருளினார். அதன்பின் அவரது குடும்பம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். இவ்வாறாக ஜானு பாயின் ஜெபத்தின் மூலமாகவும், சிக்லி ஆலயம் சென்று ஜெபித்ததின் மூலமாகவும் சுகம்பெற்ற பாதல்கடி கிராமத்தினரில் சுமார் 20 பேர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு டோலியம்பார் ஆலயத்தில் திருமுழுக்கு பெற்றனர். சுதேச ஊழியர்களான நானுபாய் மற்றும் ஜிவல்யா பாய் விசுவாசிகளின் வீடுகளை சந்தித்து ஜெபித்து வந்தனர். 1996 முதல் கங்காபாய் கெர்யா பாயின் வீட்டில் இரவுக் கூட்டங்கள் நடத்தப்பட்டது. 1998இல் ஏற்பட்ட எதிர்ப்பினிமித்தமும், குடிப்பழக்கத்தினிமித்தமும் விசுவாசத்திலிருந்து பின்வாங்கி விட்டனர். 2003இல் கங்காபாயின் நிலத்தில் தற்காலிக ஆலயம் கட்டப்பட்டது. 2016 வரை 52 குடும்பங்கள் விசுவாசத்தில் வளர்ந்து வந்தனர்.

## ஆலய வளர்ச்சியும், கட்டுமானப் பணியும்

2003இல் கட்டப்பட்ட தற்காலிக ஆலயத்தில் சுமார் ஏழு ஆண்டுகள் ஆராதனை நடைபெற்று வந்தது. விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவே பெரிய ஆலயம் கட்டும்படி பணித்தள மிஷனெரி டி. ஆபிரகாமிடம் விசுவாசிகள் கேட்டுக்கொண்டனர். விசுவாசி ஜானுபாய் புட்யாபாய் காட்வி 45 அடி நீளமும், 30 அடி அகலமும் கொண்ட தன் நிலத்தை, ஆலயம் கட்டுவதற்காக நன்கொடையாக வழங்கினார். 15.03.2008 அன்று ஆலயக் கட்டுமானப் பணி துவங்கப்பட்டது. விசுவாசிகள் அனைவரும் ஆலயக் கட்டுமானப் பணியில் தன்னார்வமாக ஈடுபட்டனர். ஆலயத்திற்கு தேவையான மரங்களை விசுவாசிகள் நன்கொடையாகக் கொடுத்தனர். இவ்வாறாக இவ்வாலயம் 10.10.2008 அன்று கட்டி முடிக்கப்பட்டு 14.10.2008 அன்று தேவ நாம மகிமைக்கென மங்களப் படைப்பு செய்யப்பட்டது. பிரதிஷ்டை ஆராதனையில் மிஷனெரிகள் அருள்திரு. டி. ஆபிரகாம், அருள்திரு. எஸ். அருள்ராஜ் ஆகியோரும், ஆலயக் கட்டுமானப் பணிக்கு உதவி செய்த ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

## அற்புதங்கள்



**ஜானுபாய் புட்யாபாய் காட்வின் சாட்சி:** 1991ஆம் ஆண்டு முதல் நான் கிறிஸ்தவ ஜீவியத்தில் வாழ்ந்து வருகிறேன். எனது மகன் சாந்தராம் ஜானு தொடர் காய்ச்சலினால் அவதிப்பட்டு வந்தான். என் மகனின் சுகத்திற்காக ரூ.50,000/-க்கும் மேலாய் மந்திரவாதிகளிடம் செலவழித்தேன். 10க்கும் மேற்பட்ட கோழிகளை பலி செலுத்தியும் சுகம் கிடைக்காததால், காசிராம் பாய் கொசல்யா பாய் என் மகனை லாவ்சலி

ஆலயத்திற்கு அழைத்துச் செல்லும்படி அறிவுறுத்தினார். ஆலயத்திற்கு சென்று ஜெபித்தபோது தேவன் என் மகனுக்கு பூரண சுகமருளினார். அதன்பின் பாதல்கடியில் தற்காலிக ஆலயம் கட்டியபின் அங்கு குடும்பமாக தேவனை ஆராதித்து வந்தோம். தேவன் எனது கையின் பிரயாசங்கள் அனைத்தையும் ஆசீர்வதித்து தந்தார்.



**லக்சுபாய் மங்கள்பாய் போயே & சுண்டி பென்:** என் மகள் வர்ஷாபென் சிறுவயதிலிருந்தே ஆஸ்துமா நோயினால் அவதிப்பட்டு வந்தாள். அஹ்வாவிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றும் சுகம் கிடைக்காததால் எங்களது பாரம்பரிய மந்திரவாதிகளிடம் அழைத்துச் சென்று அதிக பணங்களை செலவழித்தும் அவளது உடல் நிலையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. ஜெபக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்று ஜெபித்தால் என் மகள் சுகமாவாள் என்று கங்காபாய் என்பவர் என்னிடம் கூறவே, என் மகளை சனிக்கிழமைதோறும் நடக்கும் ஜெபக் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றேன். ஐந்தே நாட்களுக்குள் என் மகள் பூரண சுகம்பெற்றாள். தற்போது என் மகள் செவிலியர் படிப்பைப் படித்து வருகிறாள்.

**ரமேஷ் துல்ஜி பவர்:** எனது குழந்தை ரமிலா பால் குடிக்கமுடியாமல் வாந்தியினால் மிகவும் பெலவீனப்பட்டு வந்தாள். மருத்துவ சிகிச்சை பலனளிக்காததால் மந்திரவாதிகளிடம் கொண்டுசென்றும் சுகம் கிடைக்கவில்லை. கங்காபாய் என்னிடம் ஜுன்னர் கிராமத்தில் வசிக்கும் சாய்பெனிடம் சென்று ஜெபிக்கும்படி கூறினார். அவர் என் குழந்தைக்காக ஜெபித்து சில மூலிகை மருந்துகளையும் தந்தார். நாங்கள் எங்கள் கிராமத்திற்குத் திரும்பிய போது எனது குழந்தையின் சரீரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. தேவன் பரிபூரண சுகம் கொடுத்ததால் நாங்கள் குடும்பமாய் டோலியம்பார் ஆலயத்திற்குச் சென்று எங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டோம்.

**லலிதா பென் ராமன்பாய் காட்வி:** எனது கணவர் அடிக்கடி காய்ச்சலினால் பாதிக்கப்பட்டார். ஒருமுறை காய்ச்சல் வந்தால் இரண்டு மாதம் வரை காய்ச்சல் நீடிப்பது வழக்கமாயிருந்தது. அநேக மருத்துவ சிகிச்சைப்பெற்றும் சுகம் கிடைக்கவில்லை. என் கணவரின் பாட்டியாகிய பாருபேன் அவரிடம் ஆலயத்திற்குச் சென்று ஜெபிக்கும்படி வற்புறுத்தினார். நாங்கள் ஜானுபாயை எங்கள் வீட்டிற்கு அழைத்து என் கணவருக்காக ஜெபிக்கும்படி வேண்டிக்கொண்டோம். அவர் ஜெபித்த நான்கு நாட்களுக்குள் என் கணவருக்கு பூரண சுகம் கிடைத்தது. அதன்பின் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தொடர்ந்து பாதல்கடி ஆலய ஆராதனையில் குடும்பமாய் கலந்துகொண்டு வருகிறோம்.

## 2008ஆம் ஆண்டு பணித்தள அறிக்கையிலிருந்து சில முக்கிய நிகழ்ச்சிகள்

- மார்ச் மாதம் புதிய ஆலயக் கட்டுமானப்பணி துவங்கப்பட்டது.
- மார்ச் மாதம், அவசுபாய் என்பவர் மனநோயினால் பாதிக்கப்பட்டு பகல் முழுவதும் சத்தமிட்டுக் கொண்டிருப்பதும், இரவு நேத்தை காட்டில் செலவழித்தும் வந்தார். குடும்பத் தினர் அதிக பணம் செலவழித்தும் அவரை குணப்படுத்த முடிய வில்லை. இறுதியாக ஆலயத்திற்கு அவரை கொண்டு வந்தபோது விசுவாசிகள் இணைந்து விசுவாசத்தோடு அவருக்காக ஜெபித்த வேளையில் தேவன் அவருக்கு பரிபூரண விடுதலையை அருளினார்.
- மே மாதம் பாதல்கடி கிராமத்தில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப் பள்ளியில் 110 பிள்ளைகள் கலந்துகொண்டனர்.
- ஜூன் மாதம் பெண்கள் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் 50 பேர் கலந்துகொண்டனர்.
- ஜூலை மாதம் பாதல்கடி கிராம விசுவாசி வித்யாசிபென் தன் மகனால் துன்புறுத்தப்பட்டார். மனமுடைந்த அவர் தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்தார். தற்கொலை முயற்சிக்குமுன் அவர் ஜெபித்த வேளையில் தேவன் அவருடன் இடைப்பட்டு ஆறுதல் அளித்தபடியால் அவர் தற்கொலை முயற்சியைக் கைவிட்டார்.
- அக்டோபர் 14ஆம் தேதி பாதல்கடி ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.
- நவம்பர் 7ஆம் தேதி வட இந்திய திருச்சபையின் குஜராத் திருமண்டல பேராயர் மாளவியா அவர்கள், நமது பணித்தள செயலர் மற்றும் மண்டல செயலர் பாதல்கடி ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டனர். சுமார் 500 விசுவாசிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பேராயர் ஜெபத்தின் வல்லமையைக் குறித்து செய்தியளித்தார்.
- டிசம்பர் 9ஆம் தேதி வட்பாடா கிராமத்தில் கிறிஸ்துமஸ் கீதபவனியை முடித்து இரவில் வீடு திரும்பிய சபை மூப்பர் ரமேஷ் பாயை புலி பின்தொடர்ந்து வந்தது. இதைக்கண்ட ரமேஷ்பாய் சைக்கிளை நிறுத்திவிட்டு புலியிட மிருந்து தன்னைக் காப்பாற்றும்படி ஆண்டவரை நோக்கி முறையிட்டார். ஜெபத்தைக் கேட்ட தேவன் ராமேஷ் பாயை பாதுகாத்தார். புலி அமைதி யாய் காட்டுக்குள் திரும்பி சென்று விட்டது.

## ஆலய செயல்பாடுகள் & தகவல்கள்

2013 ஏப்ரல் மாதத்தில் பாதல்கடி ஆலயமானது வட இந்திய திருச் சபையின் குஜராத் திருமண்டலத்திற்கு

ஒப்புவிக்கப்பட்டது. இந்த ஆலயமானது பிப்லாய்தேவி குருசேகரத்திற்குட்பட்டுள்ளது. வார்லி இனத்தைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களும், பீல் இனத்தைச் சேர்ந்த நான்கு குடும்பங்களும், குக்னா இனத்தைச் சேர்ந்த 26 குடும்பங்களும், குப்டியா கிராமத்தைச் சேர்ந்த ஒரு குடும்பமும் ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். சபை மூப்பராக சுனில்பாய் கொப்யா பாய் பவர் செயல்பட்டு வருகிறார். ஆலய கமிட்டி மூலம் சபை மூப்பர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். வெள்ளிக்கிழமை தோறும் உபவாச ஜெபமும், செவ்வாய் தோறும் வீட்டு ஜெபக் கூட்டங்களும், புதன்தோறும் இரவு கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. ஞாயிறு பள்ளியை பிரபுபாய் ஜானுபாய் ஹாவ்லி பாய் நடத்தி வருகிறார். இதில் 15 சிறுவர்கள் கலந்து கொள்கின்றனர்.

## ஜெபக் குறிப்புகள்

1 அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு அனைவரும் இரட்சிக்கப்படவும், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள தடையாயிருக்கும் குடிப்பழக்கம் மறையவும்...

2. விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்க...


3. ஞாயிறு பள்ளி தடையின்றி தொடர்ந்து நடைபெற...

4. வியாதியிலிருந்து சுகம் பெறுவோர் இயேசு கிறிஸ்துவை முழு இருதயத்தோடு விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ள...

## பொல்லாங்கானவனிடமிருந்து பாதுகாப்பு

*பஞ்சாப், அஹமத்கார்மண்டி பகுதியைச் சேரந்த திருமதி. சர்ப்ஜித் கௌர் வழக்கமாக பிற சபையைச் சேர்ந்த போதகர் நடத்தும் ஆன்லைன் ஜெபத்தில் பங்கு பெற்று வருவார். அந்த ஜெபக்குழுவில் இருந்த ஒருவர் அவரிடம் பேசத் தொடங்கினார். ஜெபத்திற்கு அழைப்பதுபோல் நடித்து அவர், நேரில் வந்து அந்த சகோதரியை கவரும்படி பேசி, மந்திரத்தால் இவரையும், இரண்டு பிள்ளைகளையும் வீட்டை விட்டு வெளிவரும்படி செய்து, அவர்களை ஹிமாச்சல் மலைப் பிரதேசத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் துன்புறுத்தினார். ஆபத்தான சூழ்நிலையில் சர்ப்ஜித்தின் இரண்டு பிள்ளைகள் கர்த்தரை நோக்கி ஜெபித்தனர். இதனிடையில் சர்ப்ஜித் குடும்பத்தார், 25 நாட்கள் அவர்களை எங்கு தேடியும் கண்டுபிடிக்க முடியாமல் மிகவும் கவலையடைந்தனர். பின்பு அவர்களை அமிர்தசரஸ் அருகே கண்டுபிடித்து அழைத்து வர தேவன் கிருபை செய்தார். அல்லேலூயா!. தொடர்ந்து திருமதி. சர்ப்ஜித் குடும்பத்திற்காக ஜெபிப்போம். இவர் காணாமல் போனதினால் கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கி சமாதானத்துடன் வாழ ஊக்கமாக ஜெபிப்போம்.*

# காலச் சுவடுகள்



**சாமுவேல் எஸ். டே** என்று அழைக்கப்படும் சாமுவேல் ஸ்டீர்ன்ஸ் டே கனடாவின் ஒன்டாரியோவில் 1808, மே 13ஆம் தேதி ஜெரேமியா மற்றும் சப்மிட் டே ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். ஒவ்வொரு ஆண்டும் தனது பிறந்த நாளின்போது, கடந்த ஆண்டுக்கான மதிப்பாய்வை எழுதும் பழக்கம் இவருக்கு இருந்தது. 17ஆம் வயதில், இவர் தனது சுயசரிதையை எழுதினார். தான் செய்து வந்த விவசாயத்தை விட்டுவிட்டு ஆசிரியராக தன் வாழ்க்கையைத் தொடங்கிய இவர் பிரிக் ஸ்கூல் ஹவுஸிலும் மற்றும் ஸ்டோன் ஸ்கூல் ஹவுஸிலும் பணிசெய்து வந்தார்.

டே 1825இல் ரோயன்னா கிளார்க் என்பவரை மணந்தார். 1831ஆம் ஆண்டில் இவர் நியூயார்க்கின் ஹாமில்டனிலுள்ள கல்லூரியில் சேர்ந்து ஊழியப் பயிற்சி பெற்றார். கனடாவின் பூர்வீக இந்தியர்கள் மத்தியில் மிஷனெரியாகப் பணியாற்றுவதே இவரது ஆரம்பக்கால கனவாக இருந்த போதிலும், உலகம் முழுவதும் மிஷனெரி ஊழியத்திற்கான அழைப்பு இருப்பதாக உணர்ந்தார். 1833ஆம் ஆண்டில்

## சாமுவேல் ஸ்டீர்ன்ஸ் டே

டே தனது சொந்த தேவாலயத்தில் பிரசங்கிக்கும் உரிமம் பெற்றார். பின் ஆகஸ்டு 1835இல் இவர் இந்தியாவிற்கு மிஷனெரியாகச் செல்ல நியமிக்கப்பட்டார்.

1835 செப்டம்பர் 23 அன்று சாமுவேல் டே & இ.எல்.அபோட் தங்கள் குடும்பத்துடன் அமெரிக்க பாப்டிஸ்ட் வெளிநாட்டு மிஷன் சொசைட்டியின் கீழ் மிஷனெரி பணிக்காக இந்தியாவுக்கு வந்தனர். 1836 பிப்ரவரி 5 அன்று கல்கத்தாவிற்கு வந்தவுடன் இ.எல். அபோட் பர்மாவுக்குப் அனுப்பப்பட்டார். அதே நேரத்தில் டே குடும்பம் விசாகப்பட்டினத்திற்கு அனுப்பப்பட்டனர்.

விசாகப்பட்டினத்திற்கு வந்தவுடன் டே உள்ளூர் தெலுங்கு மொழியைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினார். மேலும் 1805 முதல் விசாகப்பட்டினத்தில் ஏற்கனவே செயல்பட்டு வந்த **லண்டன் மிஷனெரி சொசைட்டி** (LMS) மிஷனெரிகளுடன் இணைந்து ஊழிய பயணங்களை மேற்கொண்டார். அநேக நகரங்களை ஆய்வு செய்தபின்

சிகாகோல் (தற்போது ஸ்ரீகாகுளம்) என்ற இடம் அமெரிக்க பாப்டிஸ்ட் மிஷனின் செயல்பாடுகளைத் தொடங்க சரியான இடமாக இவருக்குத் தோன்றியது. 1836 ஜுன் 6 அன்று ரோயன்னா கிளார்க் தங்கள் முதல் குழந்தையைப் பெற்றெடுத்தார். தங்கள் மகனுக்கு இந்தியாவில் அமெரிக்க பாப்டிஸ்ட் வெளிநாட்டு மிஷன் போர்ட் முகவரான ஹோவர்ட் மால்காமின் பெயரை வைத்தனர். இவரது குடும்பம் சிகாகோலுக்கு குடிபெயர்ந்து உள்ளூர் மக்களுக்காக ஒரு பள்ளியைத் திறந்தனர். இவர்கள் சிகாகோலில் முதல் விசுவாசியின் திருமணத்தை கிறிஸ்தவ முறைப்படி நடத்தி வைத்தனர்.

1805இல் தெலுங்கு மொழி பேசுபவர்களிடையே முதல் புராட்டஸ்டன்ட் மிஷனை ஏற்கனவே LMS நிறுவியிருந்தது. 1818இல் புதிய ஏற்பாடு தெலுங்கு மொழியில் வெளியிடப்பட்டது. மேலும் பழைய ஏற்பாட்டின் சில புத்தகங்களும் மொழிப்பெயர்ப்பு செய்திருந்தது. 1836இல் தெலுங்கு பேசும் மக்களிடையே முதல் புராட்டஸ்டன்ட் தேவாலயம் கட்டப்பட்டது.

1937 மார்ச் மாதம் சென்னையில் வாழும் ஆங்கில மக்களிடையேயும், அங்கு அமைந்துள்ள **மால்மெய்ன் ஆலயத்தின்** ஒரு கிளையிலும் பணியாற்றும்படி டேயை மால்காம் கேட்டுக்கொண்டார். சென்னையிலிருந்து பெல்லாரி வரை (ஆந்திர, கர்நாடகா எல்லைப் பகுதி பயணம் செய்து தமிழ், கன்னடம் பேசும் உள்ளூர்வாசிகளுக்கு திருமுழுக்குக் கொடுத்து வந்தார். கூடுதலாக மெட்ராஸ் துணை பைபிள் சங்கம் மற்றும் அமெரிக்கன் பாப்டிஸ்ட் டிராக்ட் சொசைட்டி ஆகியவற்றுடனும் இணைந்து பணியாற்றினார்.

மத்தேயு நற்செய்தியை தெலுங்கு மொழியில் திருத்துவதற்கான துணைக் குழுவில் 1837 ஏப்ரல் மாதத்திலிருந்து பணியாற்றினார். தெலுங்கில் படிக்கவும், பேசவும் இவர் தேர்ச்சிப் பெற்றிருந்ததால், தெலுங்கு பேசும் மக்களிடையே பணியாற்றுவதற்கான இவரது விருப்பம் நிறைவேற பிப்ரவரி 1940இல் சென்னையிலிருந்து வடக்கே 110 மைல் தொலைவிலுள்ள நெல்லூர் கிராமத்திற்கு இவரது குடும்பம் குடிபெயர்ந்தது. மார்ச் 1840இல் நெல்லூருக்கு வந்த அமெரிக்க மிஷனெரிகளான திரு. & திருமதி. ஸ்டீபன் வான் ஹுசனுடன் சேர்ந்து புதிய ஏற்பாட்டை தெலுங்கு மொழியில் மிக துல்லியமான மொழிப்பெயர்ப்பு செய்ய (திருத்தவும், மீண்டும் எழுதவும்) வேதாகம சங்கத்துடன் இணைந்து பணியாற்றத் துவங்கினார்.

ஆகஸ்ட் 1843இல் நெல்லூரில் மூன்று பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர். அக்டோபர் மாதத்திற்குள் ஒரு தேவாலயம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. 1845இல் டே மற்றும் அவரது மனைவி நோய்வாய்பட்டதால், மருத்துவ சிகிச்சைக்காக டிசம்பர் 3ஆம் தேதி அமெரிக்காவுக்கு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ரோயன்னாவை அமெரிக்காவில் விட்டுவிட்டு, அமெரிக்க மிஷனெரிகளான திரு. & திருமதி. லைமன் ஜுவெட்டுடன் டே இந்தியாவுக்கு பயணம் செய்தார். 1849, பிப்ரவரி முதல் நெல்லூரில் முகமதியர்கள் மத்தியில் தேவனுடைய

பணியைச் செய்தனர். இதற்கிடையில் திருமதி. ஜுவெட் சிறுமியர்களுக்கான விடுதி ஒன்றினை துவங்கினார்.

அவ்வப்போது ஏற்படும் உடல் நல குறைவின் காரணமாக டே 1853, மே 7 அன்று அமெரிக்கா திரும்பினார். 1855-1859 வரை அமெரிக்க பாப்டிஸ்ட் மிஷனெரி யூனியனின் முகவராக பணியாற்றினார். இந்தி யாவில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக நிதி திரட்டுவதற்காக வட அமெரிக்கா மற்றும் கனடா முழுவதும் பயணம் செய்தார். 1871 செப்டம்பர் 17 அன்று நியூயார்க்கின் ஹோமரில் டே மாரடைப்பால் மரித்து தேவ ராஜ்யம் சென்றார். இவர்களின் மூன்றாவது மகள் மேரி மரில்லா டே தனது குழந்தை பருவ இல்லமான இந்தியாவுக்கு மிஷனெரியாக வந்தார். சென்னையில் குழந்தைகளுக்காக ஒரு விடுதியை ஆரம்பித்து, 32 வருடங்கள் தனது பெற்றோரின் பணியைத் தொடர்ந்தார்.

1840ஆம் ஆண்டில் சாமுவேல் டே & ரோயன்னா துவங்கிய ஊழியம் "**தி லோன் ஸ்டார்**" என்று பெயரிடப் பட்டது. இது தென்னிந்தியாவில் தெலுங்கு மக்களின் முழுப்பகுதியிலும் இயங்கிய ஒரே ஊழியமாகும். இந்த செய்தியைக் கேட்பதற்கு முன்னமே சாமுவேல் டே மரித்துவிட்டார். 1878ஆம் ஆண்டில் தேவன் மாபெரும் எழுப்புதலைக் கட்டளை யிட்டார். அதன் மூலம் மூன்று நாட்களில் ஒரு நகரத்தில் 2200 பேரும், அண்டை நகரத்தில் 3536 பேரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதைக் கேள்விப்பட்ட ரோயன்னா மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

அதே ஆண்டு சாமுவேலும், லைமனும் நிறுவிய ஒங்கோல் பாப்டிஸ்ட் திருச்சபையில் 12004 உறுப்பினர்கள் இருந்தனர்.

தெலுங்கு பாப்டிஸ்ட் திருச்சபைகளின் மூலமாக இப்போது மருத்துவமனைகள், சுகாதார மையங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஒரு இறையியல் கல்லூரி இயங்கி வருகிறது. இதில் ஐந்து பட்டப்படிப்பு கல்லூரிகள், எட்டு ஜூனியர் கல்லூரிகள், 14 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 14 தொடக்கப்பள்ளிகள் உள்ளன. ரோயன்னா தனது வீட்டு முகப்பில் துவங்கிய சிறிய பள்ளியானது இன்று ஆயிரக்கணக்கான மாணவர்களைக் கொண்டுள்ள சிறப்பு அங்கீகாரம் பெற்ற விடுதிப் பள்ளியாக திகழ்கிறது. ஒவ்வொரு ஆண்டும் பெரும்பாலான மாணவர்கள் இரட்சிப்பின் அனுபவம் பெற்று வருகின்றனர். இறையியல் கல்லூரியின் மூலம் நூற்றுக் கணக்கான போதகர்கள் பயிற்சிப் பெற்று வருகின்றனர். தி லோன் ஸ்டாரின் **மிஷன் அம்மா**வான ரோயன்னா கிளார்கின் தினத்தன்று அவரின் உறுதியான பக்தி, இரக்கம், அமைதி யான சேவைகள் நினைவுகூறப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

பிரியமானவர்களே! வெளிச்சம் இல்லாத இடத்தில் நீங்கள் ஒரு **தனி நட்சத்திரமாக** பிரகாசிப்பீர்களா? ஆண்டவரே, இன்னும் இருளில் மூழ்கிக்கொண்டிருக்கிற ஆத்துமாக் களுக்கான பாரத்தை எனக்குத் தந்து அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொண்டுவரும் ஒளியாக என்னை பயன்படுத்தும். ஆமென்!

# யுத்த சத்தம்

யுத்த சத்தம்
நித்தம் கேட்குது,
அழுகுரலும்
ஆரவார குரலும்
செவிகிழிக்குது,

பச்சிளம் குழந்தைக்கும்
பாவச்சங்கடையில்
கள்ளிப்பால் ஊட்டும்
இருள் இதய
கயவர்களின் கர்ஜனை
கனத்த இதயத்தை
அதிர வைக்கிறது.

எழுந்திடு!!
நின் இருக்கை
"இதுவன்று"
போர்முனைக்கு
உனை புதுப்பி,
எதிரியை எதிர்த்திட
உலக வஸ்திரம்
எரித்திடு – பின்பு

இயேசுவின் அஸ்திரம்
"தரித்திடு"
நீர்த்திவலையாகி
நித்தியரில் கரைந்திடு,
உண்மைக்கு
உள்ளம் திறந்திடு,

யாசி...!!
என்றும் அவர் சமூகம்,
'நிதம் தேடு'
நீங்கா நித்தியம்!!
"நிமிடம்" என்றும் நிற்காது
பின்திரும்பாது,
மீண்டும் பிறக்காது.

சிந்தித்து செயல்படு,
உன்னதருக்காய்
உலகையும் உதறிடு,
நித்தியர் மனம்
கொண்டிட...
சத்தியம் நிதம் வென்றிட
கொடிய அலகை
குருசினில் ஜெயித்திட
அகிலம் கடந்து வா!!
ஆயுதம் ஏந்தி வா!!

பொய்கள் – என்றும்
புற்றுநோயானது – அதை
புறம் தள்ளு,

உண்மை என்றும்
உறுதியானது – அதை
அகம் கொள்ளு.

இனம் சார்ந்தும்,
இருக்கை சார்ந்தும்
இருப்பிடம் சார்ந்தும்
நீதி வழங்காதே!!
தீங்கு நினையாதே
எவர்க்கும்
தீமை செய்யாதே!!

சில்லரை
உலக வழிக்கு
விலகி ஓடிடு,
விண் மகன்
உயிர் மொழிக்கு
சரணாகதியாகிடு.

அவர் அன்பை
தினம் ருசித்திடு,
உன் சிலுவை
தினம் சுமந்திடு,
அவர் பாதை
நிதம் தொடர்ந்திடு,
உன் ஒரு வாழ்வு
உன்னதருக்காய்
ஒளிரட்டும் – என்றும்
மிளிரட்டும்.

**அருள்திரு. ஆல்பர்ட் பிரபாகர்** FMPB, HQ

ஜூன்
1
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுகந்தி பெத்துவேல் பர்தன்
திருமதி. ஊர்மிளாபேன் ராம்சிங்பாய்
திரு. வினயராஜ் M.
திரு. வசாவா பச்சியாபாய் பொஹ்னாபாய்
திரு. கமித் கம்லேஷ் சிங்கபாய்
திரு. போயா தேவுபாய் கங்காஜுபாய்
திருமதி. ரேச்சல் ஜாய்ஸ் பாபு புஷ்பராஜ்
திருமதி. கவித் ஜாமுபேன் தேவுபாய்
திருமதி. கிருத்தாஞ்சலி குணசந்திர பாய்க்
திரு. வசாவா சுனில் குமார்
திரு. வசாவா ரமேஷ்பாய் உல்சிங்
திரு. போர்சத் பாபுபாய் சீமான்பாய்
திருமதி. சௌமி ஆபிரகாம் தாமஸ்
திருமதி. பிரீத்திபாலா பிரதான் பிதுஷ்
திரு. ஹோசியல் நாயக்
திருமதி. கொன்கனி பாரதிபேன் திலீப்பாய்
திருமதி. ஜாதவ் சரஸ்வதிபெஹன் போர்சத்
திரு. வசாவா ஆஜுபாய் ராமுபாய்
திரு. போடார் அம்ருத்பாய் பச்சுபாய்
திரு. சுர்கார் ரமேஷ்பாய் ஜோஹுராம்பாய்
திருமதி. லமாணி ரத்னா மஞ்ஜ்யா நாயக்
திருமதி. ஜெலின் ஜெயபிரதா குமரன்
திரு. குமரன் G.
திரு. திம்மண்ணா @ தீமோத்தேயு
திருமதி. சுனந்தா குல்கர்னி ராஜா
திருமதி. மீனாக்கி பீரோ சுனில் தத்தகாரா
திரு. வசாவே அர்விந்த் காலுசிங்
திருமதி. தட்வி மனிஷா ஏல்முல்வார்
திருமதி. ஜெயராணி சுகின்லால்
திரு. பவார் தினேஷ் இந்தர்பாய்
திரு. கோண்ட் தேவு விஷ்ராம்
திருமதி. ராண்தே லக்ஷ்மிபேன் தேசாய்

# ஜம்மு

## ரியாசி:

### அய்யனார் டேவிட் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** காந்தன் மற்றும் சலால் கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களின் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிந்து கொண்டனர். தன்சால் கிராமத்தின் மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். தலவரா கிராமத்தைச் சேர்ந்த குஜ்ஜார் இன மக்கள் கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்வதில் அதிக வாஞ்சைக் காட்டுவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமூக பயம், மூட நம்பிக்கைகள், பாரம்பரிய வழக்கங்கள், ஆவிக்குரிய குருட்டாட்டம் போன்ற தடைகள் நீங்கி, மக்கள் விடுதலையோடு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; ராஜ்புத் மற்றும் குஜ்ஜார் இன மக்கள் கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள; ரியாசி மாவட்டத்தில் ஆராதனை நடத்த ஏற்ற இடம் கிடைக்க; புதிதாக துவங்கப்பட்டுள்ள ரியாசி பணித்தளத்தில் அநேகர் வாஞ்சையோடு சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள, இங்கு விரைவில் புதிய ஆராதனைக் குழு துவங்கப்பட; சலால், ஜோதிபுரம், காந்தன் மற்றும் பௌனி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் மக்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## ஜூன் 2 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சோமாபாய் வலுபாய்
திரு. பிபாபா பானி, திரு. சுந்தர் துரை Y.
திரு. சுனில் பிரசாத் சிங்
திருமதி. விமலா பீட்டர் பிரபாகரன்
திருமதி. வசாவா சுனிதாபேன் உல்சிங்
திருமதி. சிவகாமி ஸ்டீபன்
திருமதி. நிஷா ஆனந்தன்
திருமதி. ஜோத்ஸ்னா ஜெரால்ட் சேவியர்

### நௌஷேரா:

**ஷேக் சுபானி & எமி பாக்கியா**

**துதிக்க:** அநேக சவால்கள் மத்தியிலும் நோனியல் கிராமத்தில் புதிய ஆத்துமாக்களை தேவன் தந்துள்ளார். குடும்பப் பிரச்சனையின் காரணமாக விசுவாசத்தை விட்டு பின்மாற்றம் அடைந்திருந்த குல்தீப்பின் குடும்பத்தினருக்காக ஏறெடுத்த ஜெபத்தின் மூலம் அவரது குடும்பம் தற்போது ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகின்றனர். வேலையில்லாமலிருந்த நீலமின் கணவருக்கு ஜெபத்தின் மூலம் வேலை கிடைக்க தேவன் கிருபை செய்தார். பஹல்கம் மாவட்டத்தில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதலிலிருந்து நமது ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளை தேவன் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** யேமங், கவிதா, குலுஸ்ரீ, ஜெகநாத், பிரியா, கமல் ஆகியோர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; பல்லி கிராமத்தைச் சேர்ந்த பல்வீர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும் மற்றும் தெளிவான கண்பார்வை பெறவும்; உபத்திரவத்தினிமித்தம் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள பெரார், லாம், கெனெட்டி, திங், செரி, காங்டி, மன்பூர், கீத்பூர், சோகி, டப்பார், தஹ்னனகா, பாக்னோடி, கல்சியா, நரியன், பண்டோரி மற்றும் போஹானி கிராம மக்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; தங்கள் குடும்பத்தில் தேவன் செய்த அற்புதங்களின் மூலம் இயேசுவை விசுவாசிக்கும் மக்கள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தடையாயிருக்கும் சமுதாயத் தடைகள் நீங்க; அனைத்து கிராமங்களிலும் விடுமுறை வேதாகமப் பள்ளி தடையின்றி நடைபெற; எல்லைப் பகுதிகளில் காணப்படும் பதற்றங்கள் நீங்க, அனைத்து விசுவாசிகளும் குறிப்பாக நௌஷேராவிலுள்ள விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

### பாவ விலங்கொடிக்கப்பட்டது

*மத்தியப்பிரதேசம், கால்வா பணித்தளத்திலுள்ள மோஜ்வாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. விலாஸ் & திருமதி. பார்வதியின் குடும்பம் கடந்த 13 ஆண்டுகளாக கிறிஸ்துவுக்குள் விசுவாச வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர். இச்சூழலில் திரு. விலாஸ் சில நண்பர்களின் வற்புறுத்தலினால் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டார். இதனால் அவரது குடும்பம் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகியது. இவரின் விடுதலைக்காக விசுவாசிகளும், மிஷனெரியும் தொடர்ந்து ஜெபித்து ஆலோசனை வழங்கிய போதிலும் அவர் குடியிலிருந்து விடுபடவில்லை. முடிவாக அவரது மனைவி பார்வதி தேவனிடம் பொருத்தனை செய்து ஜெபித்தார். ஜெபத்திற்கு பதிலளித்த தேவன் கடந்த ஐந்து மாதங்களாக மது அருந்தாமல் அவரை காத்து வருகிறார். அல்லேலூயா! இக்குடும்பத்தின் மூலம் அநேகர் விடுதலை பெற்று இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.*

## ஜூன் 3 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. எட்வர்ட் சாம் T., திரு. வேடியப்பன் L.
திரு. பால் டேனியேல் V., திரு. விஜயகுமார் K.
திருமதி. ரஷ்மித்தா பரிடா வில்சன்
திருமதி. ரூபா குமாரி பிரசாந்த், திரு. பாலமுருகன் V.
திருமதி. ஏசுமணி மயில்சாமி, திரு. ஆஷாபிராப்தா
திருமதி. அந்தோணி ராஜம் ஜெரோம்
திருமதி. வால்வி எஜூ காலுசிங்

# பஞ்சாப்

## பட்டிண்டா:

### சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** ஜெபத்தைக் கேட்ட தேவன் மண்டிகலான் துணை மையத்தில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியரை தந்தருளினார். பாய்ரூபா எனுமிடத்தில் நடைபெறும் வேதாகம வகுப்பில் வாலிபர்கள் ஆறு பேர் உற்சாகத்துடன் கலந்துகொள்கின்றனர். கிறிஸ்தவ விசுவாசத்தைக் கைவிடும்படி தன் குடும்பத்தினரால் வற்புறுத்தப்பட்டாலும் மன்பிரீத் விசுவாசத்தில் உறுதியாயிருக்கிறார். அசுத்தாவியின் பிடியிலிருந்து தேவன் உபாசனாவுக்கு விடுதலை அருளினார். கடுமையான டைபாய்டு காய்ச்சலிலிருந்து குர்தீப்புக்கு தேவன் பூரண சுகமருளினார். விபத்தில் கால் எலும்பு முறிவு ஏற்பட்ட பிஷ்வந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவிருக்கும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சி, சத்சங் கூட்டங்கள், கைப்பிரதி ஊழியங்கள் தடையின்றி நடைபெற; பாய்ரூபா மற்றும் புச்சோ மண்டி துணை மையங்களில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள தன்னார்வ ஊழியர் மற்றும் சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; ராம்நகர், யாத்ரி, ஜோத்பூர், பகவான்புரா, மடி ஆகிய கிராமங்களில் ஊழியத்திற்கான திறந்த வாசலை தேவன் தந்தருள; சிறுநீரக செயலிழப்பினால் பாதிக்கப்பட்டுள்ள ராஜா, இருதயப் பிரச்சனையினால் கஷ்டப்படும் ராஜிந்தர், மது மற்றும் போதைக்கு அடிமைப்பட்டுள்ள தாதே ஷைம் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டுள்ள மஞ்சீத் கௌர் ஆகியோர் விடுதலைப்பெற ஜெபிப்போம்.

## அம்ரித்சர்:

### சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா

**துதிக்க:** சத்சங் மற்றும் இரவு கூட்டங்கள் மூலம் அநேகருக்கு நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். ஜெபத்தின் மூலம் ரூபன் டுடு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதால் தற்போது குடும்பம் முழுவதும் ஆராதனையில் பங்குபெற்று வருகிறார்கள். குடிப்பழக்கத்தினால் சீரழிந்து கொண்டிருந்த மன்ஜீத் கௌருக்கு ஜெபத்தின் மூலம் தேவன் விடுதலையைக் கட்டளையிடவே குடும்பமாக நன்றியோடு தேவனை ஆராதித்து வருகிறார்கள். ஜஸ்பால்சிங் நமது இயக்கத்தில் தன்னார்வ ஊழியராக இணைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தினால் வலது முழங்கையில் அடிப்பட்டுள்ள மிஷனெரி விரைவில் சுகம்பெற; 20 ஆண்டுகளாக மனநிலை பாதிக்கப்பட்டுள்ள காசா கிராமத்தைச் சேர்ந்த போசாவுக்கு தேவன் அற்புத சுகமருள; நீண்ட நாட்களாக காய்ச்சலினால் அவதிப்பட்டு வரும் சபை மூப்பர் ஆதிராஜ் குணமடைய; ஆகாஷ், அனிஷா மற்றும் கரன்தீப்புக்கு அவர்கள் எதிர்ப்பார்க்கும் அரசாங்க வேலை கிடைக்க; விசுவாசத்தில் பின்வாங்கியுள்ள ராஜ்வன்சி மற்றும் மல்லுகல் சபையினர் மீண்டும் கிறிஸ்துவின் ஐக்கியத்திற்குள் வர ஜெபிப்போம்.

**ஜூன்**

**4**

**புதன்**

*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெமிமா ஜெபராணி டேனியேல் டேவிட்
திருமதி. வசாவா நிட்டா குமாரி ஆஜுபாய்
திரு. எபி ஞான செலின் S., திரு. ஜீவர் ஜோஸ்வா E.
திரு. கராடோ பிஸ்வோ ரஞ்சன்

### சங்க்ரூர்:

**கிம்பால் திலீப்பாய் & பிரார்ரி ரீட்டாபேன்**

**துதிக்க:** மூன்று பேர் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டனர். காக்டா கிராமத்தில், பொய் வழக்கில் கைது செய்யப்பட்ட சிங்ரூ சிங்கிற்காக அவரது குடும்பத்தினர் உபவாசித்து ஜெபித்தபோது உடனடியாக விடுதலைப் பெற தேவன் உதவி செய்தார். லோன்காவால் கிராமத்தில் நடைபெற்ற சத்சங் கூட்டத்தில் ஆயிரக்கணக் கானோர் பங்குபெற்று நற்செய்தியைக் கேட்க தேவன் உதவி செய்தார். விஷம் கலந்த உணவை சாப்பிட்ட சபை மூப்பர் மோகிந்தர், விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவை பின்பற்ற வந்தனா மற்றும் பூஜாவிற்கு காணப்படும் தடைகள் நீங்கி விடுதலையோடு இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; இனம்புரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள ஜெப வீரரான ஜோதி ராணி விரைவில் பூரண சுகம்பெற; விபத்தில் கால் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் பல்ஜீத் கௌர் குணமடைய; நமது சபை வாலிபர்கள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும், ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளவும் ஜெபிப்போம்.

### அஹ்மத்கட் மண்டி:

**கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா**

**துதிக்க:** பெண்கள் கூடுகைகள், சிறுவர் முகாம், இரவு கூட்டங்கள், சத்சங் கூடுகைகள், இயேசு திரைப்படம் திரையிடுதல், வேதாகம விளக்க வகுப்புகள் மூலமாக மக்களை சந்திக்க தேவன் கிருபை செய்தார். லெந்து கால உபவாச கூடுகைகள், பெரிய வியாழன், புனித வெள்ளி மற்றும் உயிர்த்தெழுந்த திருநாள் ஆகியவை சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். ஒரு ஆத்துமாவை தேவனு க்கென்று ஆதாயப்படுத்தப்பட்டதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராஜ்கோட் கிராமத்திலுள்ள சபையைச் சுற்றியுள்ள கிராம மக்கள் இயேசுவின் அன்பினை அறிந்து கொண்டு, சபை ஆராதனையில் பங்குபெற; கிறிஸ்துவை பின்பற்றுவதற்கு தடையாகக் காணப்படும் சமூக பயம் நீங்கி மக்கள் விடுதலையோடு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; திட்ட மிட்டிருக்கும் அனைத்து நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெறவும், மிகுந்த பலனை தேவன் கட்டளையிடவும் ஜெபிப்போம்.

**ஜூன்**
**5**
**வியாழன்**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பியூலா சுலோச்சனா ஜாஷ்வா
திரு. இப்ராயிம் மாலி, திரு. மயில்சாமி ஜோசப் T.
திரு. சிவசங்கரன் @ ஜெபசீலன், திரு. சங்கர் A.
திரு. நரேந்திர குமார், திரு. பட்சிகொல்ல பிரவீன்
திரு. ஏல்முல்வார் சுவப்னில் ராமலு
திருமதி. ராம்புரம் பெடக்கா மேத்யூ

### பர்னாலா: பிதன் ஹன்ஸ்தா & பன்சூரி மோஹ்லின்

**துதிக்க:** நீண்ட நாட்களாக வயிற்றில் தொற்று மற்றும் காய்ச்சலினால் உடல் நலிவுற்றிருந்த ஹசன்ப்ரீத் சிங், உபவாசித்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகமருளினார். கடுமையான வயிற்று வலியிலிருந்து நிஷா ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். மிகவும் வறுமை யிலிருந்த ஜெய்சிங் குடும்பம் விசுவாசத் தோடு ஜெபித்தபோது அவரது மகனுக்கு வேலையும், மகளுக்கு தையல் தொழில் செய்ய மிஷனும் கிடைக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரவி (20 வயது) என்ற வாலிபன் மனநிலை பாதிப்பிலிருந்து பூரண சுகம்பெற; புற்றுநோயிலிருந்து பௌன்சிங் விரைவில் குணமடைய; தபால் அலுவலகத்தில் வேலை கிடைத்தும், வெளி இடத்திற்கு செல்ல பயப்படும் பாப்லு நல்ல தைரியத்தினைப் பெற; கோவிந்த் நகர், பியாரிலால் நகரி, நவி பஸ்தி ஆகிய பகுதிகளில் நடைபெறும் சிறு ஜெபக்குழுக்கள் தடையின்றி தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### நானக்மட்டா: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** சுந்தர் நகர் மற்றும் தியோரி கிராமங்களில் பெரிய வெள்ளி ஆராதனை சிறப்பாக நடைபெற்றது. உயிர்த்தெழுந்த பண்டிகையின் ஆராதனையில் இஸ்லாம்நகர், ஹர்தாஸ்பூர் மற்றும் தியோரி கிராமங்களிலிருந்து திரளான மக்கள் வந்து கலந்துகொண்டனர். தியோரி கிராமத்திலிருந்து குல்தீப் மற்றும் ஹர்தாஸ்பூரிலிருந்து ஷிவான் ஆத்தும ஆதாய ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்துள்ளனர். உர வியாபாரத்தில் இரண்டு ஆண்டுகள் நஷ்டத்தையே சந்தித்து வந்த குல்தீப்பிற்கு ஜெபத்தின் மூலம் நல்ல லாபம் கிடைக்க தேவன் உதவி செய்தார். சுந்தர்நகரில் நடைபெற்ற சத்சங் கூடுகையில் கலந்து கொண்ட சந்தான் என்பவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அமித்ஸ் குடும்பத்திலுள்ள சமாதானமின்மை மற்றும் குடிப்பழக்கம் நீங்கி சமாதானத்துடன் வாழ; கல்லீரல் பிரச்சனையினால் வயிறு வீங்கி கஷ்டப்படும் ராஜு பூரணமாக குண மடைய; ராம்பிரகாஷின் குடும்பத்தில் பிரச்சனைகள் நீங்கி ஒருமனப்பட்டு சமாதானத்துடன் வாழ; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு தன் மனைவியை துன்புறுத்தி வரும் பால்கார்சிங் மனந் திரும்பவும், குடியிலிருந்து விடுதலை பெறவும்; நடைபெறவுள்ள அனைத்து நிகழ்ச்சிகளும் எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

ஜூன் 6 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. உதிப்த குமார் பாக்
திருமதி. ஷியாமளா ஷாமினி மேத்யூ
திருமதி. புஷ்பம் மகேந்திரன்
திருமதி. நதியா டேவிட்
திருமதி. புக்யா ஜான்சிபாய்

### பாஸ்பூர்:
**கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்**

**துதிக்க:** நமது விடுதியில் படிக்கும் மாணவி கானாக், 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதல் இடத்தைப் பிடித்துள்ளார். புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். சுல்தான்பூர்பட்டியில் விசுவாசிகளின் பயிற்சி கூடுகை ஆசீர்வாதமாக நடைபெற்றது. பனிஷ்கா சொறி சிரங்கு வியாதியிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். எட்டு கிராமங்களில் இயேசு திரைப்பட ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்தார். மாயா குடும்பம் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டுகின்றனர். பென்னிக்டோ கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள கிராமங்களில் மக்கள் சுவிசேஷத்திற்கு செவி சாய்த்து, இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 50 வயதான ஜாங்கிரோ கௌர் சுகம்பெற; பனிக்கேடா கிராமத்திலுள்ள விசுவாசிகளின் சமாதானத்திற்காக; குஷான்சிங் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; விசுவாசிகளும், சபை மூப்பர்களும் முழுமனதுடன் ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள ஜெபிப்போம்.

## ஹரியானா

### ஃபத்தேஹ்பாத்:
**டேவிட் எஸ். & ஜெப கிரேஸ்**

**துதிக்க:** இரண்டு முறை கருச்சிதைவு ஏற்பட்ட அபிலாஷாவு ஜெபத்தின் மூலம் இப்போது இரண்டரை மாத கர்ப்பிணியாக இருக்கிறார். இதன் மூலம் அவர் இயேசுவை விசுவாசித்து வருகிறார். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நேகா குடும்பத்தார் தங்கள் வீட்டிலிருந்த விக்கிரகங்களை அகற்றிவிட்டனர். நற்செய்தி அறிவிக்கப்பட்டத்தின் மூலம் மூன்று பேர் இயேசுவின் மந்தையில் இணைந்துள்ளனர். கிஜ்ராவன் கலான் கிராமத்திலுள்ள விசுவாசிகள் தர்ஷன் என்பவரின் வீட்டில் கூடி ஆராதித்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மஜ்ரா கிராமத்தைச் சேர்ந்த 19 வயது ஹர்தீப் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைபெற; பாட்டியா கிராமத்தில், ஆராதனைகளில் பங்குபெறும் தங்கள் மனைவி, பிள்ளைகள் மீது கடின இருயத்துடன் நடந்து கொள்ளும் ராம் சோரூப், சுபாஷ் ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; சஞ்சய் மனநல பாதிப்பிலிருந்தும், சன்சாசா சந்து பக்கவாதத்திலிருந்தும் பூரண சுகம்பெற; பட்டிடாபார் ஆலய மூப்பர்கள் தேவிலால், சன்சார் சந்த், விஜய், பண்வாரிலால் ஆகியோர் ஆவிக்குரிய வாழ்வில் வளர ஜெபிப்போம்.

ஜூன் 7 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எலிசபெத் கருணாகரன்
திருமதி. டெய்ஸி இஸ்ரேல் டேனியல்
திருமதி. கமித் சாருபேன் கம்லேஷ்
திருமதி. ஆலிஸ் ஷீபா ஆபிரகாம்

## பெஹோவா:

### போர்சத் பாபுபாய் & சரஸ்வதிபேன்

**துதிக்க:** சாலை விபத்திலிருந்து சாவித்திரியை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். ஜெபத்தின் மூலம் ராஜாவுக்கேற்ற கிறிஸ்தவ மணமகள் கிடைக்க தேவன் கிருபை செய்தார். ஆலயத்தின் மேற்கூரையை சுத்தப் படுத்திக்கொண்டிருந்தபோது கீழேவிழுந்த சுஷிலை தேவன் எந்த காயமுமின்றி பாதுகாத்தார். ஜெபத்தின் மூலம் இருதய பிரச்சினையிலிருந்து சிந்தேர் பரிபூரண சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலயத்திற்கு வரும் சஞ்சய் மற்றும் சரோஜ் விசுவாசத்தில் வேரூன்றி வளர; பேசவும், நடக்கவும் முடியாமலிருக்கும் கைத்தாள் கிராமத்தைச் சேர்ந்த பையன் குர்மீத்க்கு தேவன் அற்புதம் செய்ய; புதிதாக ஆலயத்திற்கு வரும் லால்கோட்டி கிராமத்தைச் சேர்ந்த 13 வயது பெண் லோகேஷா இரவில் வரும் கனவு பயத்திலிருந்து விடுதலைபெற ஜெபிப்போம்.

## தோஷம்: அஜய் பர்டே

**துதிக்க:** வியாதியினிமித்தம் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த முக்கேஷ் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். கர்த்தரின் கிருபையால் கடந்த மாதம் மூன்று புதிய கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு மற்றும் இரவு கூட்டங்களின் மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. கர்ப்பப்பை கட்டியினால் அவதிப்பட்டுவந்த கைலாஷோ அறுவை சிகிச்சையின் மூலம் எவ்வித பக்கவிளைவுகளுமின்றி சுகம்பெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலதுபுற பக்கவாதத்தினால் அவதியுறும் பிஜோதேவிக்கு தேவன் சுகமருள; சர்க்கரை நோய் மற்றும் நுரையீரல் பாதிப்பினால் கஷ்டப்படும் பவான் பாய் பூரண சுகமடைய; புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள 24 வயதான சாந்த்க்கு தேவன் அற்புத சுகமருள; பாலாவாஸ் சபை விசுவாசிகள் கர்த்தருக்குள் வேரூன்றி வளரவும், சபை ஊழியங்களில் உற்சாகத்துடன் பங்குபெறவும் ஜெபிப்போம்.

### *சேனைகளின் கர்த்தர் பெரியவர்*

*ராஜஸ்தான் மாநிலம், ஆழ்வர் பணித்தளத்திலுள்ள முபாரிக்பூர் கிராமத்தைச் சேரந்த கர்னேல் சிங் என்பவர் ராய்சீக் இனத்தைச் சேர்ந்தவர். இவர் அக்கிராமத்தில் வசித்து வரும் நமது விசுவாசிகளுக்கு மிகவும் எதிர்ப்பை தெரிவித்ததோடு, அவர்களின் வீடுகளுக்குச் செல்லும் குடிநீர் மற்றும் மின்சார வசதிகளை தடைசெய்தார். மேலும் வீடுவீடாகச் சென்று யாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளக்கூடாது என எச்சரிப்பு செய்தார். இந்நிலையில் ராய்சீக் மற்றும் ஜாட் இனத்தைச் சேர்ந்தவர்களுக்குள் கடும் சண்டை ஏற்பட்டு அடிதடியில் முடியவே கர்னேல் சிங் மற்றும் அவருடன் சேர்ந்த 15 பேர் தங்கள் ஊரைவிட்டு ஓடிபோகும் நிலை ஏற்பட்டது. கர்த்தர் தம் பிள்ளைகளுக்காக யுத்தம் செய்தார். அல்லேலூயா!*

**ஜூன்**

**8**

**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண் சுந்தர் சிங்
திருமதி. திலகவதி நாகராஜன்
திருமதி. சௌந்தர்ய ரேகா வியாசு பாபு
Ms. ஏஞ்சலின் கிரேஸ் D.

# ராஜஸ்தான்

## உதய்பூர்:

### ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

**துதிக்க:** நான்கு புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. 14 கிராமங்களில் உபவாச ஜெபங்கள் சிறப்பாக நடைபெற்றது. சுதேச ஊழியர் ஆனந்தி லாலின்பேனுடைய திருமணம் எவ்வித தடையுமின்றி கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்றது. பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட பக்ராமுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். புஷ்பாவுக்கு ஜெபத்தின் மூலம் பெண் குழந்தையை தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். உதிரப்போக்குப் பிரச்சனையிலிருந்து ஆஷாவுக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரமீலா, சுக்னா, ஹக்ரி, கமலா ஆகியோர் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைபெற; விபத்தினால் கால் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ள தேவிலாலை தேவன் குணப்படுத்த; ஒருமாதமாக சுகவீனமாயிருக்கும் அம்பாபா என்ற 90 வயது முதியவரை தேவன் குணப்படுத்த; கருச்சிதைவு ஏற்பட்டுள்ள லீலா மற்றும் சோனியாவுக்கு தேவன் புத்திர சந்தானம் அருள; இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயினால் அவதியுறும் ஆனந்திலால், பிரகாஷிபாய், நானாலால் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகம்தர; ராஜஸ்தானில் வசிக்கும் பீல் இன மக்கள் விசுவாசத்தில் பெலப்பட; பலாசியா, கோகுண்டா ஆகிய தாலுக்காககளில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை தந்தருள; நமது சுதேச ஊழியர்களான ஆனந்தி லால், ஷியாம், ஆஷிஷ் தாமோர், மோகன் லால், சுஷில் ஆகியோருக்கு தேவன் ஆரோக்கியத்தையும், பாதுகாப்பையும் அருளி, ஊழியத்தை ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## காஜூவாலா:

### வி. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** நமது விசுவாசிகளின் வயல்களில் கடுகு, கொண்டைக்கடலை மற்றும் கோதுமை ஆகியவற்றில் நல்ல விளைச்சலை தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். கடந்த மாதத்தில் சிறுவர் கூடுகைகள், வேதபாட வகுப்புகள், சுவிசேஷ கூட்டங்கள், பின்தொடர்ப் பணி, வியாதியஸ்தர்களுக்கான ஜெபம், ஞாயிறு ஆராதனைகள் யாவும் தடையின்றி சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சஷி இன மக்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் சத்னம் மற்றும் பிரீதம் விரைவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; தன் தந்தை படுத்த படுக்கையாக இருப்பதால் தங்கள் உயர் கல்வியைத் தொடர சிரமப்படும் மோனிகா மற்றும் சிம்ரனுக்கு தேவன் உதவி செய்ய; நடைபெறவிருக்கும் அனைத்து ஊழியங்களும் நல்ல பலனைத் தர ஜெபிப்போம்.

**ஜூன் 9 திங்கள்**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கோயில் புஷ்பம் பால்ராஜ்
திருமதி. ஜோஸிலா சுந்தரிபாய் பென்ஹர் Y.
திருமதி. செல்வம்மாள் செல்வராஜ்
திருமதி. சகரிகா பிரதான் பரிச்சா

## கேர்வாடா:

### கெனோஸ் ஸ்டான்லி இன்பராஜ் & சாந்தினி, தேபாஷிஸ் ஹெம்ரோம் & ஷிஃபாலி ஹன்ஸ்தா

**துதிக்க:** ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து தீபிகா மற்றும் விசுவாசி ஜெயந்தியின் மகன் விடுதலை பெற்றனர். வயிற்றில் கட்டியினால் அவதிப்பட்டு வந்த கரிஷ்மா, தினேஷ் பகத், லக்மன் பகத் ஆகியோர் ஜெபத்தின் மூலம் பூரண குணமடைந்தனர். விசுவாசி ஆஷாவுக்கு செவிலியர் படிப்பினைப் படிக்க கல்லூரியில் இடம் கிடைத்துள்ளது. ஜெபத்தினால் மனநிலை பாதிப்பிலிருந்து ரமேஷ் சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் நாத்து மலாட் கிறிஸ்துவை இன்னும் ஆழமாய் அறிந்துகொள்ள; எட்டு வருடங்களாக பேச்சு திறனை இழந்திருக்கும் சங்கர் கராடி மீண்டும் பேசும் திறனை பெற; ஆராதனைக்கு செல்வதை தடைசெய்யும் மனிஜாவின் கணவர் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; விசுவாசி மம்தாவின் சுகப்பிரசவத்திற்காகவும், மீனாக்ஷிக்கு விசுவாசியான மணமகன் கிடைக்கவும் ஜெபிப்போம்.

## சாங்ரியா:

### அமிர்காந்த் டிகல் & நிரோலா

**துதிக்க:** சகர்கேடா மற்றும் தாப்பா கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலை கட்டளையிட்டார். பசிகர் இன மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகின்றனர். நான்கு இரவு கூட்டங்கள், இயேசு திரைப்பட ஊழியம் மற்றும் 15 கிராமங்களில் பின்தொடர்பணியின் மூலம் நற்செய்தி அறிவிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன்னார்வ ஊழியராக இணைந்துள்ள ராகுல் குடும்பத்தை தேவன் பயன்படுத்த; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள குல்வீந்தர் சிங் குடும்பம் இன்னும் கிறிஸ்துவில் வேரூன்றி வளர; வாய் புண்ணினால் அவதிப்படும் ஹர்கோவிந்துக்கு தேவன் சுகமருள; கர்ப்பப்பை நோயினால் துன்புறும் சகோதரி அமன்தீப் குணமடைய ஜெபிப்போம்.

## உமது கரத்தில் வாங்கி உமக்கே கொடுக்கிறோம்

*கர்நாடகா, ஷிகோன் பணித்தளத்திலுள்ள நமது விசுவாசி திரு. சந்தோஷின் 15 ஏக்கர் நிலம் பல ஆண்டுகளாக நீதிமன்ற வழக்கில் இருந்தது. தேவன் நீதி செய்ய வேண்டுமென்று தொடந்து சபையார் ஜெபித்து வந்தனர். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு நமது விசுவாசிக்கு சாதகமான தீர்ப்பை வழங்கினார். அவர் இழந்த 15 ஏக்கர் நிலத்தை திரும்ப தந்த தேவனுக்கு நன்றி காணிக்கையாக ஆலயம் கட்ட ஒரு ஏக்கர் நிலம் நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## ஜூன் 10 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. தாமஸ் R., திருமதி. பாலின் மேரி பூபதி
திருமதி. ராஜேஸ்வரி பிரதான் சம்புநாத்
திரு. பால் ரவி ராஜ் B.N., திரு. நாகராஜன் M.
திருமதி. நேத்ரவதி முத்துக்குமார்
திருமதி. ஷைதுல் அஜய் பர்டே

# டெல்லி

### பட்பர்கன்ஜ்:

**ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்**

**துதிக்க:** திரிலோக்பூரி மற்றும் கல்யான்பூரி சபைகளில் வாலிபர் மற்றும் சிறுவர்களுக்காக நடத்தப்பட்ட கோடைக்கால வேதாகமப் பள்ளியில் அநேகர் கலந்துகொண்டனர். சிறுவர்கள் மத்தியில் ஓய்வு நாள் பள்ளி நடத்தும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். சாலை விபத்திலிருந்து ராஜேந்திரன் சிறு காயங்களுடன் பாதுகாக்கப்பட்டார். கிறிஸ்துவை விட்டு பின்வாங்கிபோன விசுவாசியை சபை மூப்பர் உற்சாகப்படுத்தி மீண்டும் அவரை ஆலயத்திற்கு அழைத்து வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாவ பழக்கங்களில் சிக்கி திருச்சபையிலிருந்து விலகி சென்ற பியாலேலால் மற்றும் அவரது பிள்ளைகளின் இரட்சிப்பிற்காக; குடும்பத்தைப் பற்றி கவலைப்படாமல் ஆன்லைன் சூதாட்டத்திற்கு அடிமைப் பட்டு வேலையை இழந்துள்ள ஜதின், ராயல் வில்சன் ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கர்த்தரால் அற்புத சுகம்பெற்ற சந்த்ராவதி, ஜோதி, சாவித்ரி ஆகியோர் தங்கள் விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிட; தொடர்ந்து நடைபெறவுள்ள ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்து, திரளான ஆத்துமாக்கள் தேவனின் மந்தையில் இணைய ஜெபிப்போம்.

# உத்தரப்பிரதேசம்

### கோண்டா சிறுவர் விடுதி:

**ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா சௌத்ரி**

**துதிக்க:** கோண்டா சிறுவர் விடுதியில் புதிதாக 13 சிறுவர்கள் சேர்ந்துள்ளனர். விடுதி சிறுவர்களோடு இணைந்து புனித வெள்ளி மற்றும் உயிர்த்தெழுந்த திருநாளை கொண்டாட தேவன் கிருபை பாராட்டினார். புதிதாக சிலர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோண்டா விடுதி நிலம் சம்பந்தமாக நடந்து வரும் வழக்கு விரைவில் முடிக்கப்பட; நமது விடுதி மாணவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் மற்றும் ஞானத்தில் சிறந்து விளங்க; விடுதியில் படிக்கும் அனைத்து மாணவர்களும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறவும், அவர்களின் மேற்படிப்பிற்கான தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

## ஜூன் 11 புதன்

*உபவாச ஜெபநாள்*

### ஜாலவ்ன்: கவித் ராகேஷ் ரத்திலால் & ஈகார் ரேஷ்மா மாருதி

**துதிக்க:** புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் தந்த திறந்த வாசலுக்காக, உமரி கிராமத்தில் ஒரு குடும்பத்தைச் சந்தித்து சுவிசேஷம் சொல்ல தேவன் கிருபை செய்தார். நான்கு இடங்களில் குருத்தோலை ஞாயிறும், பெரிய வெள்ளி ஆராதனையும் மற்றும் உயிர்த்தெழுந்த பண்டிகையும் சிறப்பாக கொண்டாடப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல ஆண்டுகளாக குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் ஹேமலதா, தினேஷின் மனைவி ஆகியோரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; இருதய நோயினால் அவதிப்படும் ராம் பகதூருக்கு தேவன் சுகமருள; தொடர் காய்ச்சலினால் கஷ்டப்படும் ஒரு வயது குழந்தை சான்வி குணமடைய; புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள படோலி பூரண சுகம்பெற; நுரையீரல் பாதிப்பிலிருந்து குடீ சுகம்பெற; குனியபுரா, துசேபுரா, ஜகமன்பூர் ஆகிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கவும், விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்தவும் தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

### காட்டாம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு காட்டாம்பூர் ஆலயத்தில் குருத்தோலை ஞாயிறு, பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்தெழுந்த பண்டிகை ஆராதனைகள் எவ்வித இடையூறுமின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். மறைந்த ஊழியர் சிவகுமாரின் ஆறுதல் ஜெபக்கூட்டத்தில் கிறிஸ்தவரல்லாதோர் அநேகர் பங்கு பெற்று சுவிசேஷத்தைக் கேட்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தனிமையில் பொது பேருந்தில் பயணம் செய்து ஊழியத்தை செய்து வரும் சுதேச ஊழியர் கீதாவின் பாதுகாப்பிற்காக, ஊழியத்தில் மிகுந்த பலனை தேவன் தர; அசுத்தாவியின் பிடியிலிருந்து அனிதா, ராம் விகாஷ், சுபாஷின் மகள் மற்றும் குமாரி சோனி விடுதலைபெற; கிறிஸ்தவரல்லாத அயலகத்தாரின் உதவியுடன் எதிர்ப்பாளர்களை சந்திக்க, தேவன் தமது கிருபையால் வழிநடத்தி அமைதலான ஊழியம் செய்ய; ஆத்தும அறுவடை பணியில் ஈடுபட்டுள்ள நம் ஊழியர்களுக்கு வேண்டிய வல்லமையை தேவன் நிறைவாய் கட்டளையிட ஜெபிப்போம்.

### ரணியா:

### அனில் குமார் & கவிதா

**துதிக்க:** சிக்கந்தர் கிராமத்தில் நடைபெற்ற மூப்பர் பயிற்சி முகாமில் சுமார் 40 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். கொடிய காய்ச்சலிலிருந்து ஊழியர் சுரேஷ் குமார் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். லெந்து காலத்தில் நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும் ஆசீர்வதித்து, வழிநடத்தின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்தாவியின் பிடியிலிருந்தும், மனநல பாதிப்பிலிருந்தும் சங்கீதா விடுதலைபெற; சபை மூப்பர் ராம்பார் வயிற்றிலுள்ள கட்டி மறைய; சிக்கந்தர்பூரைச் சேர்ந்த குலாப் புற்று நோயிலிருந்து பூரணமாக குணமடைய; நடைபெறவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளி தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## ஜுன் 12 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மோங்வய் ஃபோம் B., திருமதி. பிரின்சி சாம்பால்
திருமதி. மதுஸ்மித்தா பானி, திரு. அஜித் பாண்டியன் G.
திரு. வசாவா தாமஸ்பாய் குலாப்பாய்

### சிக்கந்ரா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கவும், நான்கு இடங்களில் பெண்கள் கூடுகையும், இரண்டு இடங்களில் விசுவாசிகளின் கூடுகையும் நடத்த தேவன் உதவி செய்தார். நமது விசுவாசி ராம்ஜி மகள் திருமணம் தேவ நாமத்திற்கு மகிமை யாக, ஆசீர்வாதமாக நடைபெற்றது. பெரிய விபத்திலிருந்து பிரியானுசுவை அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புத்தேரா கிராமத்தில் இரவு கூட்டம் ஆரம்பிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; நடைபெறவிருக்கும் ஆத்தும ஆதாயக் கூட்டம், பயிற்சி முகாம், வெளிப்புற சந்திப்பு மற்றும் ஆவிக்குரிய நிகழ்வுகள் அனைத்தும் வெற்றிகரமாக நடைபெற; பாலாகராம் கிராமத்திலுள்ள ஆலயத்தின் நில பாதுகாப்பிற்காக விரைவில் சுற்றுச்சுவர் கட்டப்பட; ஔரையா துணை மையத்தின் சிறிய ஜெபக்குழுக்களை ஔரையா, நசிராபாத் மற்றும் சம்ர்தாபூர் சபைகளுக்கு மாற்ற எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண ஜெபிப்போம்.

# மத்தியப் பிரதேசம்

### கடூரா:

### பிமல் சந்திர முர்மு & சீத்தாமணி

**துதிக்க:** குஷ்மாரா கிராமத்தினை சேர்ந்த ராமாகாந்தி, பாப்பி ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். நீண்ட நாட்களாக சுகவீனப்பட்டிருந்த விஜயலக்ஷ்மி மற்றும் சாந்தனா ஜெபத்தின் மூலம்சுகம் பெற்றனர். இரண்டு புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குராரா கிராமத்தில் சபை மூப்பர்களுக்கான பயிற்சி சிறப்பாக நடைபெற; எட்டேரா மற்றும் சந்த்பூர் கிராமங்களில் திட்டமிட்டபடி தடையின்றி வெளிப்புற சுவிசேஷ கூட்டங்கள் நடத்தப்பட; அதிக சுகவீனத்தினால் மருத்துவமனையில் அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள விமலா பூரண சுகம்பெற்று வீடு திரும்ப; சிவானி ஆலய சுற்றுச்சுவர் எவ்வித இடையூறுமின்றி கட்டி முடிக்கப்பட ஜெபிப்போம்.

### கால்வா: ஐசக் & சீதா

**துதிக்க:** அனைத்துவித ஊழியங்களும், பெண்களுக்கான பயிற்சி முகாமும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ஹாசன்புரா கிராமத்தில் மூப்பர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி முகாமில் 30 பேர் கலந்துகொண்டனர். விசுவாசி சஞ்சயின் ஜெபத்தின் மூலம், அசுத்தாவியின் பிடியிலிருந்து முன்னீஸ் குடும்பத்தாருக்கு விடுதலை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜாம்தாடு, மோஜ்வாடி, ஹாசன்புரா மற்றும் கார்பேடி கிராமங்களில் நடத்தவிருக்கும் நிகழ்ச்சிகள் தடையின்றி ஆசீர்வாதமாக நடைபெற; பின்மாற்ற மடைந்துள்ள காத்மி, தீபக், சுக்ராம், மாங்கிலால் ஆகியோர் மீண்டும் விசுவாசத் திற்குள் வர; சுவிசேஷத்திற்கு தடையாகக் காணப்படும் கோர்க்கு இன மக்களின் முரட்டாட்டங்கள் முறியடிக்கப்படவும், இவர்கள் மத்தியில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிடவும் ஜெபிப்போம்.

ஜூன்
13
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கெடம் ஸ்ரீனிவாச ராவ்
திருமதி. ஜெபராணி ஜாண்சன் சங்கர்
திருமதி. சகரிகா மோகினிமாலா பீரோ

# அஸோம்

## கோஹ்பூர்:

**நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா**

**துதிக்க:** நமது இயக்கத்தின் மூலம் கல்வி உதவி பெறும் ஸ்டீபன் குட்டும் மற்றும் ஜாக் பஹாரி 10ஆம் வகுப்பு தேர்வில் முதல் இடத்தைப் பெற்றுள்ளனர். நமது விசுவாசிகளின் பிள்ளைகள் 12ஆம் வகுப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிப் பெற்றுள்ளனர். அனில் காமான் மற்றும் ரீமாபட்கிரி குடம் ஆகிய இருவரும் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10 மற்றும் 12ஆம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்ற பிள்ளைகள் உயர் கல்வி கற்க ஏற்ற கல்லூரிகளில் இடம் கிடைக்க; நடைபெறவுள்ள நற்செய்தி அறிவிக்கும் ஊழியங்கள் தடையின்றி நடைபெறவும், புதிய ஆத்துமாக்கள் தேவனின் மந்தையில் இணையவும்; நமது விசுவாசிகள் தங்கள் சமூகத்தினரின் மத்தியில் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்து, அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்த; பஞ்சாயத்து தேர்தல் நல்லமுறையில் நடைபெற; பெலவீனப்பட்டுள்ள நிரூபோமா பெபர்தாவின் சுகத்திற்காக; நுரையீரல் மற்றும் இருதய பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ள மாதுபுல்ஹாரி பூரண சுகம்பெற; தேவன் தமது இராஜ்யத்தைக் கட்ட பயன்படுத்தும் ஊழியர்களுக்காக ஜெபிப்போம்.

## ஜோனாய்:

**சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா**

**துதிக்க:** பாம்பு கடியிலிருந்து விசுவாசி ராகேஷ் பெகு பாதுகாக்கப்பட்டார். வாலிபர் கூடுகையில் பங்குபெற்ற வாலிபர் ஒருவர் ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்துள்ளார். புதிதாக நான்கு ஜெபக்குழுக்கள் துவங்க தேவன் உதவி செய்தார். கடந்த மாதம் நடைபெற்ற அனைத்து ஆராதனைகளுக்காக, புதிய தொடர் பாளர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டுள்ள ராகேஷ் பெகு குடும்பம் விசுவாசத்தில் வேரூன்றி வளர; வாலிபர் கூடுகையில் பங்குபெற்ற வாலிபர்கள் பரிசுத்த வாழ்க்கை வாழ; சுவிசேஷத்தைக் கேட்ட மக்கள் தேவனை அறிக்கையிட; மாடியிலிருந்து கீழே விழுந்து உட்காரவும், நடக்கவும் முடியாமல் வேதனைபடும் நந்த்லால் டோலேவுக்கு தேவன் அற்புத சுகமருள; பிப்புல்குரி கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்டப்பட; இந்நிதியாண்டின் இலக்கை வெற்றியாய் முடிக்க தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

ஜூன்
14
சனி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. லால்மணி டிகல்

### லக்கிம்பூர்:

**ஆரோன்சிங் நர்சாரி & ரீனா**

**துதிக்க:** தனி நபர் ஊழியத்தின் மூலம் மக்களை சந்தித்து நற்செய்தி அறிவிக்க தேவன் உதவி செய்தார். புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கவும், பின்தொடர் ஊழியங்கள், இரவு கூட்டங்கள், எழுப்புதல் முகாம்கள் யாவும் தடையின்றி நடத்தவும் தேவன் கிருபை செய்தார். அநேகர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிட்டபடி புதிய கிராமங்களில் நற்செய்தியின் மூலம் இயேசுவின் அன்பை பகிர்ந்துகொள்ள எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; நடைபெறவிருக்கும் இயேசு திரைப்பட ஊழியங்கள், முதியோர் கல்வி, பயிற்சிகள் தடையின்றி சிறப்பாக நடைபெற; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போருக்காக; விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; தன்னார்வ ஊழியர்களாக இணைய விரும்பும் புதிய விசுவாசிகளான ரமேஷ் தாயிட் மற்றும் பபுல் ஜங்கிராஸ்க்கு தேவன் உதவி செய்ய ஜெபிப்போம்.

## பீஹார்

### சாட்டாபூர்:

**கே. ரவி ராத்தோட் & சுதாராணி, பவார் தினேஷ்பாய் & பாருட் சீலாபாய்**

**துதிக்க:** பொய் வழக்கின் மூலம் தன் நிலத்தை இழந்த லால்பூரைச் சேர்ந்த பிஸ்னு சதா ஜெபத்தின் மூலம் மீண்டும் தன் நிலத்தை சொந்தமாக்கிக்கொண்டார். சுாக்கர்கஞ்ச் கிராமத்தில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டுள்ளார். கருச்சிதைவினால் ஆபத்தான நிலையிலிருந்த விசுவாசி ஜோக்கிந்தரின் மனைவிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். மஸ்கான் மற்றும் ராஜ்பூர் பகுதிகளில் எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசத்தில் உறுதியாக நிற்கும் விசுவாசிகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளை தவறான உபதேசத்தினால் திசைதிருப்பும் பாப்பு சதா மனந்திரும்பி இரட்சிக்கப்பட; கணவனை பிரிந்து வாழும் தர்மேந்திராவின் மனைவி மீண்டும் குடும்பமாக சேர்ந்து வாழ; குஷ்ட ரோகத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பருன் சதாவின் குடும்பத்தினர் அற்புத சுகம்பெற; மோகனாபூர் மற்றும் மஸ்கான் கிராமங்களில் நடைபெற்று வரும் டியூசன் மையங்களில் படித்து பயன்பெறும் மாணவர்கள் இயேசுவின் அன்பினை உணர்ந்துகொள்ள; தன் மனைவியை ஆராதனைக்கு செல்வதை தடைசெய்யும் ராம்விலாஸ் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**ஜூன் 15 ஞாயிறு**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. புனிதா மெயின்ராஜ்
திரு. அருளானந்தம் வெங்கடேசன் M.
திரு. பொன்னுசாமி S., திரு. டேவிட் S.
திரு. தேபதத்தா லிமா, திரு. ஹுசேன் ஜெராய்
திருமதி. ஆல்பி இவாஞ்சலின் ஹாரிஸ்
Ms. செல்வி பர்தான், திரு. ஜோதி பெகு
திருமதி. லதா ஐசக் தனசிங்
திருமதி. மரியாள் குமரவேல்

### ராணிகஞ்ச்:

**ஆனந்தன் எம். & நிஷா**

**துதிக்க:** பூரணி கிராமத்தில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினதோடு, மக்கள் வாஞ்சையோடு சுவிசேஷத்தைக் கேட்கவும் உதவி செய்தார். பஞ்சு ரிஷி, சுதாகர் ரிஷி, விஜயா ஆகியோர் கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்திக்கொண்டனர். ரைக்கா கிராமத்தில் உயிர்த்தெழுந்த திருநாளன்று ஆராதனைக்குப்பின் இயேசு திரைப்படம் திரையிடவும், அதனை சுற்றியுள்ள கிராமத்தினர் திரளானோர் பார்க்கவும் உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடிப்பழக்கத்திற்கு அடிமைப் பட்டுள்ள சோனு ரிஷி விடுதலைபெற; சாராயம் காய்த்து விற்கும் தொழிலை பிரதானமாக செய்து வரும் கிராம மக்களுக்கு மாற்று வேலைகள் செய்வதற்கான வாய்ப்புகள் அரசாங்கத்தின் மூலம் செய்து தரப்பட; வேலையின் நிமித்தம் புலம் பெயரும் ரிஷி இன மக்களுக்கு தங்கள் சொந்த இடங்களில் நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### ஜாமா:

**முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்**

**துதிக்க:** அரவிந்த் கிஸ்து, பப்லு கிஸ்கு ஆகியோர் சுதேச ஊழியர்களாக பணியாற்ற தங்களை அர்ப்பணித் துள்ளனர். ஆத்தும ஆதாய பயிற்சி, ஜெபக்குழு தலைவர்களுக்கான பயிற்சி, நற்செய்தி அறிவிக்கும் பணி ஆகியவை எவ்வித இடையூறுமின்றி சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். அநேகர் தைரியமாக தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மந்திரவாதிகள் மனந் திரும்பி இரட்சிக்கப்பட; விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தடையாக காணப்படும் சமூக பயங்கள் நீங்க மக்கள் விடுதலையோடு இயேசு கிறிஸ்துவை ஆராதிக்க; விசுவாசத்தில் சோர்ந்து காணப்படும் சபை மூப்பர் மற்றும் சுதேச ஊழியரை தேவன் பெலப்படுத்த; பெலவீனப்பட்டுள்ள விசுவாசிகளுக்கு தேவன் பூரண சுகமருளவும், குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளோர் அதிலிருந்து விடுதலைப் பெறவும் ஜெபிப்போம்.

## ஜூன் 16 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாண்சன் சங்கர் I.
திருமதி. சுஷீலா விஜயகுமார்
திரு. பினித் பிரசாத் பர்தன்
திரு. எலியா சந்திரன் S.

### ராம்கார்:
### லெட்கோலுன் பெய்ட் & ஹட்நெய்கிம்

**துதிக்க:** ஆறு இடங்களில் விசுவாசிகளுக்கான ஆவிக்குரிய வளர்ச்சி முகாமும், இரண்டு இடங்களில் பெண்கள் சிறப்பு கூடுகையும் நடத்த தேவன் கிருபை செய்தார். நீண்ட நாட்களாக டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருந்த ஜும்பாரி டுடு மற்றும் சந்து முர்மு தங்கள் குடும்பத்தினரின் ஜெபத்தினால் பூரண சுகமடைந்தனர். இருசக்கர வாகன விபத்தில் காயமடைந்த சுரேஷ் கோல் தற்போது குணமடைந்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கின்ட்வாட்டிகர் ஆலய சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் விரைவில் முடிக்கப்பட; கான்டாஸ் டுடு மற்றும் ரூபிலால் கிஸ்கு வலிப்பு நோயிலிருந்து பூரண குணமடைய; அங்கிதா சோரன், சுசில் கிஸ்கு ஆகியோர் பக்கவாதத்திலிருந்து சுகம்பெற; புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள ஸ்ரீராம் ஹன்ஸ்தா குடும்பம் கிறிஸ்துவில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

### லால்மட்டியா:
### அமரேந்திரன் & சுவேதா

**துதிக்க:** செவ்வாய்கிழமை தோறும் நமது விசுவாசிகளின் மூலம் மருத்துவ மனை ஊழியம் செய்யப்பட்டு வருகிறது. லெந்து காலத்தில் விசுவாசிகளில் அநேகர் 40 நாட்கள் உபவாசித்து ஜெபிக்க தேவன் உதவி செய்தார். மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்த நீலம் பென் தொடர் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று வருகிறார். சிட்டார்குட்டி கிராம சபையில் புதிதாக இரண்டு குடும்பங்கள் ஆராதனையில் பங்குபெற்று வருகின்றனர். கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட மூன்று பேருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தி பணியில் ஆர்வம் காட்டும் சுசாந்திக்கு எதிராக செயல்படும் அவரது கணவர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; ஐந்து வயதாகியும் பேச இயலாமலிருக்கும் அனிதா முர்முவுக்கு பேசும் திறனை தேவன் கட்டளையிட; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள விலாஸ் மற்றும் நிக்கோலஸ் கிறிஸ்துவில் புது வாழ்வினைப்பெற; இப்பகுதியில் சிறுவர்கள் எலும்பு சம்பந்தமான வியாதியினால் பாதிக்கப்பட்டு மரித்துவிடுகிறார்கள். தேவன் இரக்கம் பாராட்ட ஜெபிப்போம்.

## ஜூன் 17 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எட்வின் செல்வராஜ் R.
திரு. ராஜதுரை N
திருமதி. கவிதா அனில் குமார்

### பர்ஹர்வா:

**மல்லா வித்யாசாகர் & தீபிகா ராணி பானி**

**துதிக்க:** மூன்று நாட்கள் உபவாச ஜெபம், பெரிய வெள்ளி ஆராதனை மற்றும் ஜிகிட்டா குமானி, ராணிப்பூர் கிராமங்களில் ஈஸ்டர் ஆராதனை சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார். ஜிகிட்டா கிராமத்தில் ஆலயக் கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருசக்கர வாகன விபத்திலிருந்து நமது விசுவாசியின் மகனை தேவன் பாதுகாத்தார். ராணிப்பூர் பிராந்தியத்தில் மால் இன மக்கள் மத்தியிலிருந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புதிய விசுவாசிகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுகவீனப்பட்டிருக்கும் நமது தன்னார்வ ஊழியர் டேவிட் மால்தோவுக்கு தேவன் பூரண சுகமருள; ஆத்தும ஆதாயப் பணியில் உதவிவரும் ஈவா, கிரிஷான் மால், பப்புலுஷா, விஷ்தாஸ், மனோஜ் ஆகியோரை தேவன் ஆசீர்வதிக்க; திட்டமிட்டபடி புதிய கிராமங்களில் நடைபெறவுள்ள வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் தடையின்றி நடைபெற; இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் உஷா குப்தாவின் மகனுக்கு பெண் கொடுக்க மறுத்துவரும் கிராம மக்களின் மனக்கண்கள் திறக்கப்படவும், உஷா குப்தாவின் மகனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தந்து தேவன் ஆசீர்வதித்து கனப்படுத்தவும் ஜெபிப்போம்.

### புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளி, பந்தேனி :

**விக்டர் ஜெயசீலன் & பிரின்சஸ் நகோமி; ஸ்டாலின் ஜீவா & செல்வராணி; மெர்ஸி எம்.எச். சுவாஜி, ஜெயஸ்ரீ,**

**துதிக்க:** கடி பகுதியிலிருந்து பந்தேனி வரையிலுள்ள நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு ஏப்ரல் மாதத்திலிருந்து ஆங்கில மொழி கல்வியைத் துவங்க தேவன் உதவி செய்தார். நமது பள்ளியில் படிக்கும் 6 மற்றும் 9ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்புகளுக்குச் செல்ல தேவன் கிருபை செய்தார். கடுமையான வெப்பத்தினால் ஏற்படும் வியாதிகளிலிருந்து ஆசிரியர்களையும், பிள்ளைகளையும் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 10ஆம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் மேற்படிப்பிற்கான தேவைகள் சந்திக்கப்பட; கோடைகால விடுமுறைக்கு தங்கள் வீடுகளுக்குச் சென்றுள்ள பிள்ளைகள் நல்ல ஆரோக்கியத்துடன் மீண்டும் விடுதிக்கு திரும்பி வர; வீடுகளுக்குச் சென்றுள்ள பிள்ளைகள் தங்கள் சொந்த கிராமங்களில் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; மிஷனெரி ஆசிரியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு தேவன் நல்ல ஞானத்தையும், பெலனையும் தந்து பிள்ளைகளை தேவ வழியில் நடத்த ஜெபிப்போம்.

ஜுன்
18
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

செல்வி. ரந்தோன் முர்மு

### பகையா:

### ஜெபக்குமார் பெரியசாமி & பொன்லதா

**துதிக்க:** இயேசு திரைப்பட ஊழியத்தின் மூலம் பல கிராமங்கள் சந்திக்கப்படவும், இதன் மூலம் அநேகர் இயேசுவின் அன்பை அறிந்துகொள்ளவும் தேவன் கிருபை செய்தார். மேலும் ஐந்து குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டி வருகின்றனர். நமது விசுவாசிகளான நரேஷ் மற்றும் கீதா சமையல் பாத்திரங்களை ஆலயத்திற்கு நன்கொடையாக கொடுத்துள்ளனர். டோனவூரில் படிக்கும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகள் பத்திரமாக தங்கள் பெற்றோர்களிடம் சென்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பின் மத்தியிலும் சுவிசேஷத்திற்கு வாஞ்சைகாட்டும் பஜ்ரங்கியின் குடும்பத்தினர் தைரியத்துடன் இயேசுவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட; நமது சுதேச ஊழியர் சுசில் விக்டர் தனது வீட்டிற்கு முன் இருக்கும் இடத்தை ஆலயம் கட்ட கொடுத்துள்ளார். விரைவில் ஆலய கட்டுமானப்பணிகள் துவங்கப்பட; மேற்கு வங்காள பகுதிகளில் ஆத்தும அறுவடைப் பணிக்காக எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### இட்டாஹார்:

### அஸ்தபான் ஆதித்திய குமார் லிம்மா & மனினி பெபர்த்தா

**துதிக்க:** கடந்த மாதம் இரவுக் கூட்டங்கள், இயேசு திரைப்பட நிகழ்ச்சிகள், வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள், ஆவிக்குரிய கூட்டங்கள் யாவும் தடையின்றி சிறப்பாக நடைபெற்றன. அவிக்குரிய வளர்ச்சிக்கென நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்ட 25 பேர் கிறிஸ்துவின் பணி செய்ய தங்களை அர்ப்பணித்துள்ளனர். பெலவீனப்பட்டிருந்த அநேகர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். ஹட் முன்சா மற்றும் உஜய்தார் கிராமங்களில் இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று அறிக்கையிட்டவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை வாஞ்சையோடு கேட்ட குஷ்பனா மற்றும் பலாபன் கிராமத்தினர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சராக ஏற்றுக்கொள்ள; அறுவை சிகிச்சை செய்யப்பட்டு படுக்கையிலிருக்கும் கபிராஜ் முர்மு விரைவில் பூரண சுகம்பெற; உஜய்தார் கிராமத்தில் நற்செய்தி அறிவிக்க நல்ல வரவேற்பு கிடைக்கவும், மக்கள் வாஞ்சையோடு சுவிசேஷத்தைக் கேட்கவும் ஜெபிப்போம்.

**ஜூன்**

**19**

**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜோதிலக்ஷ்மி இம்மானுவேல் கார்த்தி

திரு. செல்வின் ஜேசுதாஸ்

## பாக்குவாஹாட்:

### ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** சில்டானி கிராமத்தில் விசுவாசத்தினிமித்தம் கிராமத்தைவிட்டு தள்ளி வைத்தபோதிலும், ராஜன் சோரனின் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவி செய்தார். குருத்தோலை பவனியின்போது விசுவாசிகளைத் தாக்க திட்டமிட்டிருந்த சில்டானி கிராம வாலிபர்களின் யோசனையை தேவன் அதமாக்கி ஊழியர் மற்றும் விசுவாசிகளை பாதுகாத்தார். திடீரென பேச்சை இழந்த ராஜீவ் முர்முவின் மனைவிக்கு ஜெபத்தின் மூலம் மீண்டும் பேசும் திறனைப் பெற்றார். வேலை நிமித்தம் பிற மாநிலங்களுக்கு சென்ற நமது விசுவாசிகள் சுகபத்திரமாக வீடு திரும்ப தேவன் உதவி செய்தார். துள்சி டுடுவின் கையிலிருந்த பெரிய கட்டி ஜெபத்தினால் மறைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்திற்கு தடையாயிருக்கும் சுசீலாவின் சகோதரன் மனந்திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட; பார்வை இழந்துள்ள விசுவாசி அமித் சோரனுக்கு தேவன் பார்வை அருள; மிருதுங்கா கிராம சபை விசுவாசிகள் ஞாயிறு ஆராதனையில் கிரமமாக பங்குபெற; தன் குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காக ஜெபித்துவரும் சோனாலி டுடுவின் ஜெபத்திற்கு தேவன் விரைவில் பலன்தர; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள கோபின் பஸ்ரா மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## பாலூர்ஹாட்:

### ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

**துதிக்க:** பின்தொடர் ஊழியத்தின் மூலம் சில கிராமங்களில் வீடுகளை சந்தித்து நற்செய்தி அறிவிக்கவும், இரண்டு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடவும் தேவன் கிருபை செய்தார். பெலைன் கிராமத்தைச் சேர்ந்த சுதேச ஊழியர் நயன் ஹன்ஸ்தா விசுவாசிகளுடன் சென்று தனது உறவினர்களுக்கு நற்செய்தி அறிவித்து வருகிறார். போன்கட் கிராமத்தைச் சேர்ந்த லக்ராம் ஹெம்ரோம் மனநோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். சபையின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் உற்சாகத்துடன் ஒத்துழைப்பு தந்து வரும் சொப்னம் கிஸ்குவுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாக உள்ள துலன் ஹன்ஸ்தா, கந்தான் ஹன்ஸ்தா, பிரசன்சா ஹெம்ரோம், லுக்கிராம் ஹெம்ரோம், அன்மோல் சோரன் ஆகியோர் கிறிஸ்துவில் இன்னும் அதிகமாய் வேரூன்றி வளர; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சுப்ராட்டோ ஹெம்ரோம் விரைவில் குணமடைய; குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள சுதோசரா மார்டி, சுவர்னா முர்மு ஆகியோர் விடுதலைபெற ஜெபிப்போம்.

**ஜூன் 20 வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கார்த்திகேயன் S., திரு. விஜயகுமார் R.
திரு. கிரிஷான் குமார், திரு. லுன்ஜாலால் சோங்தட்
திரு. பசவராஜா K., திரு. பூபதி P.

### கரன்டிகி: கய்தியென்ஜின் வய்ஃபெய் &மெலடி டிம்சோன்டிங்

**துதிக்க:** குண்டர்கோ கிராமத்தில் ஒரு தற்காலிக ஆலயம் கட்டி பிரதிஷ்டை செய்ய கர்த்தர் உதவி செய்தார். சரீரம் முழுவதும் வீங்கி கஷ்டப்பட்டு வந்த சகோதரி மருங்மய் தொடர் ஜெபத்தினால் பூரண குணமடைந்தார். புதிதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தி வருகின்றனர். கடந்த மாதம் அநேக கிராமங்களில் இரவு கூட்டங்கள் நடத்தவும், அநேகர் சுவிசேஷத்தைக் கேட்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்வாங்கியுள்ள பிஜு முர்மு, சிபு பாஸ்கி ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; புதிதாக ஊழியத்திற்கு அர்ப்பணித்துள்ள ஜோதி ஹெம்ரோமை தேவன் தமது ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்த; கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் எதிர்ப்புகளை சந்தித்து வரும் சோகருகான் கிராம விசுவாசிகளின் பாதுகாப்பிற்காகவும், அவர்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்து நிற்கவும், எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

### சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** இரத்த வாந்தி எடுத்துக் கொண்டிருந்த லுக்கி ஒராவன் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். உயிர்த்தெழுந்த திருநாளில் விசுவாசிகளுடன் கிராமத்தில் பாடல்கள் பாடி பவனி செல்ல தேவன் கிருபை செய்தார். கடந்த மாதம் அநேக புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கவும், ஒராவன் மக்கள் மத்தியிலிருந்து நான்கு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாடகம் மூலம் நற்செய்தி அறிவிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; வாரி கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள பராக்ராம் கிராமத்தில் தேவன் மிகுந்த கனிகளைத் தர; நடைபெறவுள்ள விடுமுறை வேதாகம வகுப்புகள், பெண்கள் கூடுகை ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### உபவாசத்தின் வல்லமை

*மஹாராஷ்டிரா மாநிலம், தட்கோன் பணித்தளத்திலுள்ள காடிக்கையா கிராமத்தைச் சேர்ந்த கருணா, மருத்துவப் படிப்பை முடித்தப்பின் நிரந்தர அரசு பணிக்காக காத்திருந்தார். கொரோனா காலங்களில் தற்காலிக பணியில் இணைந்தார். பின்னர் அரசாங்க தேர்வுகளை எழுதி அதிலும் தேர்ச்சி அடைந்தார். இருப்பினும் அரசு வேலை கிடைக்காததால் குடும்பமாக சுமார் ஒன்பது மாதங்கள் உபவாசித்து ஜெபித்து வந்தார். அப்பொழுது நேர்முகத் தேர்வுக்கு அழைப்புப் பெற்று, ஜெபத்தோடு கலந்துகொண்டு வெற்றியும் பெற்றார். தற்போது மஹாராஷ்டிரா மாநில அரசு மருத்துவப் பணியில் நிரந்தரமாக அமர்த்தப்பட்டுள்ளார். அல்லேலூயா!*

## ஜுன் 21 சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கெத்சியா பால்ராஜ், திரு. ஜாண் குமார் C.
திருமதி. சுவேரா மார்த்தாபெஹன் போடார்

### மால்டா:

### உதித்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** கர்த்தரின் பெரிதான கிருபையால் நமது விசுவாசியின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி ஆசீர்வாதமாக நடைபெற தேவன் கிருபை செய்தார். வாகன விபத்தி லிருந்தும், பாம்புக் கடியிலிருந்தும் விசுவாசி சமாய் பஹாரியவை தேவன் பாதுகாத்தார். பெரிய வெள்ளி மற்றும் உயிர்த்தெழுந்த பண்டிகையின் ஆராதனைகள் ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவி செய்தார். நமது மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுக்கு தேவன் தந்த நல்ல சுகத்திற்காகவும், பாதுகாப்பிற்காகவும் அவரைத் துதிப்போம்

**ஜெபிக்க:** பந்தேனி பள்ளி மற்றும் விடுதிக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்காக; இந்த நிதியாண்டின் இலக்குகள் முழுமையாக சந்திக்கப்பட; இந்த மாதம் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் தடையின்றி நடைபெற; சுதானி, ஹிட்டல்பூர் ஆகிய இடங்களில் நடைபெறும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும், அநேகர் இரட்சிக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் மந்தையில் இணையவும் ஜெபிப்போம்.

### ராணிகஞ்ச் (New):

### ஜெரால்டு சேவியர் & ஜியோத்சனா

**துதிக்க:** பர்தான்டாஸ்கா, நிம்ச்சா, சோன்பூர் பசாரி, குத்தார்டி, ஜே.கே.நகர் ஆகிய கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் நற்செய்தி அறிவிக்கப் பட்டது. அதிக காய்ச்சலினால் கஷ்டப்பட்ட தி ஷாபவுரி என்ற 7 வயது சிறுமிக்கு உபவாச ஜெபத்தின் மூலம் தேவன் பரிபூரண சுக மருளினார். போக்கிரா மற்றும் பார்சுந்தி கிராமங்களில் புதிதாக ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். நமது புதிய தொடர்பாளர்களின் உதவியுடன் ஊழியம் விரிவாக்கம் செய்ய தேவன் கிருபை செய்தார். பெரிய விபத்திலிருந்து தேவன் ஊழியர்களை தேவன் பாதுகாத்தார். பொருளாதாரத்தில் கஷ்டப்பட்டபோதி லும் ஊழியத்திற்கு உதவி செய்து வந்த உப்தால் பவிரி என்ற வாலிபனுக்கு புதிய வேலையைத் தந்து உயர்த்திய தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெபக்குழுவில் பங்கு பெறும் புதிய குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருக்கிறவர்களுக்கான தடைகள் உடைக்கப்பட; பிறப்பிலிருந்தே ஊனமுற்றிருக்கும் 14 வயதான அனிக்கேட் என்ற சிறுவனுக்கு தேவன் அற்புதம் செய்யவும், இதன் மூலம் அக்கிராமத்தி லுள்ள 50 குடும்பங்கள் இயேசுவே ஜீவனுள்ள தேவன் என்பதை உணர்ந்து அவரை அறிக்கையிடவும்; வயது முதிர்ச்சி யினால் கேட்கும் திறனை இழந்து, ஊழியத்தில் பங்குபெற முடியாமல் தவிக்கும் உத்பால்பவுரிக்கு தேவன் கேட்கும் திறனைக் கட்டளையிட; உக்ரா கிராமத்தில் புதிய ஜெபக்குழு விரைவில் துவங்கப்பட; குடும்பத்தில் பிரச்சினைகளை சந்தித்து வரும் பூஜாவின் வாழ்வில் தேவன் இடைபட்டு சமாதானத்தைக் கொடுக்க ஜெபிப்போம்.

ஜூன் 22 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஷண்முகம் R.S.
செல்வி. ஈவ்லின் பாக்கியா, திரு. மகேந்திரன் A.
திருமதி. ரிஸ்மாராணி அபிகல் காரா

## சத்தீஸ்கார்

### ஹட்டி: தினேஷ் குமார் & நீத்து

**துதிக்க:** ஜோக்டா மற்றும் ஜாம்பாலி கிராமங்களில் நடைபெறும் ஆராதனையில் புதிய குடும்பங்கள் பங்குபெற்று வருகின்றனர். ஆறு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். மாகான்ட் மக்கள் இனத்திலிருந்து ஒரு புதிய குடும்பம் ஆராதனையில் கலந்துகொள்கின்றனர். விசுவாசி ராம்சிலாவுக்கு ஏற்ற கிறிஸ்தவ மண மகனை தேவன் அருளினார். இரண்டு நாட்கள் உபவாச ஜெபமும், சபையின் ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளரான ரான ஜமாலி, ஜகதீஷ் மற்றும் இவரின் சகோதரன் பிரதீப் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; சுவிசேஷம் அறிவிக்க அர்ப்பணமுள்ள இரண்டு சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; பிடியா சபையைச் சேர்ந்த விசுவாசிகள் அனைவரும் தவறாமல் ஆராதனையில் பங்குபெற; இந்நிதியாண்டின் இலக்கு சந்திக்கப்பட ஜெபிப்போம்.

## ஒடிசா

### ஜகன்நாத்பூர்:

**பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ**

**துதிக்க:** அனைத்து சபைகளிலும் சபை மூப்பர் பயிற்சி, சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி முகாம்கள் மற்றும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்றன. பராஜாம்டா கிராமத்தில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் சுமார் 350 பேர் கலந்துகொண்டு தேவ வார்த்தையினால் பயன் பெற்றனர். திரிபூரு, பரபாசேயா மற்றும் கிட்டிகென்று கிராமங்களில் வாழும் விசுவாசிகள் எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசத்தில் உறுதியாயிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டோன்டோ மற்றும் துவார்சாய் குருசேகரத்தைச் சேர்ந்த இடங்களில் தலைவர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளுடன் இணைந்து வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் நற்செய்தி அறிவிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; கிட்டிகோண்டு கிராமத்தைச் சேர்ந்த பிஜே திரியா, கானு, லாகூரி மற்றும் மூன்று குடும்பங்கள் மீது ஜகன்நாத்பூர் நீதி மன்றத்திலுள்ள வழக்குகள் விரைவில் விசாரிக்கப்பட்டு நீதி வழங்க; சராண்டா காடுகளில் நக்சலைட் கட்டுப்பாட்டிலுள்ள ஜோடா நகாரா என்ற கிராமத்தில் வாழும் சந்தால், ஹோ, கோபே, லோஹர் மற்றும் ஒடியா மக்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும், தீவிரவாதிகள் இயேசுவின் அன்பினால் தொடப்படவும் ஜெபிப்போம்.

**ஜூன்**
**23**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மீனா கிங்ஸ்லி ஐசக் ஜாண்சசன்
திருமதி. பிரபினா ராணி பிஸ்வோ ரஞ்சன்
திரு. ராமசாமி V. ஜெரோம்

# குஜராத்

## சூரத்:

### மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** விசுவாசி பிங்கிபேனை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். மனீஷ் பாய்க்கு காலில் ஏற்பட்ட புற்றுநோய் ஜெபத்தின் மூலம் குணமடைந்து தற்போது ஆலயத்திற்கு நடந்து வருகிறார். தபசு காலத்தில் 40 நாட்கள் உபவாச ஜெபத்திலும், வேதாகம வகுப்புகளிலும் விசுவாசிகளை வழிநடத்த தேவன் நமது ஊழியர்களுக்கு உதவி செய்தார். ஜாம்நகர் பகுதியில் ஜெப அறையின் பராமரிப்புப்பணி தேவைகளை சந்தித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தில் சிக்கி மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வரும் விசுவாசி சோனிபேன் விரைவில் சுகம்பெற; கரும்பு தோட்டங்களில் வேலை செய்யும் நமது விசுவாசிகள் கோடைக்கால விடுமுறைக்கு பத்திரமாக தங்கள் வீடுகளுக்குச் செல்ல; கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்த மாயிருப்போரை தேவன் பெலப்படுத்த; அர்ஜுன் பாய் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், அவரது மனைவி அனிதாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளவும்; தீய நண்பர்களின் சகவாசத்தினால் சிறையிலிருக்கும் விசுவாசி கீதாபேனின் மகன் குணால் விடுதலை பெறவும், மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## கொர்காம் விடுதி:

### ஜி. குமரன் & ஜெலின் ஜெயா

**துதிக்க:** மும்பை ஜெபக்குழுவிலிருந்து வந்திருந்த தலைவர்கள் விடுதி மாணவர்களை உற்சாகப்படுத்தி சென்றனர். கடுமையான கோடை வெப்பத்திலிருந்து ஊழியர்கள் மற்றும் மாணவர்களை தேவன் பாதுகாத்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதி மாணவனின் தாயார் சுசீலா கர்ப்பப்பை புற்று நோயிலிருந்து பரிபூரண சுகம்பெற; விபத்தினால் காலில் காயமடைந்துள்ள மஹில் குணமடைய; கால்களில் கட்டி வந்து கஷ்டப்படும் கரண் மற்றும் அர்பித்துக்கு தேவன் சுகமருள; விடுதிக்கு அர்ப்பணமுள்ள காப்பாளர்கள் மற்றும் சமையல்காரர்கள் கிடைக்க; அரசாங்கத் தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் நல்ல மதிப்பெண் களுடன் தேர்ச்சிப்பெற ஜெபிப்போம்.

## ஜூன் 24 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பால்ராஜ் ஆபிரகாம் P.
திருமதி. ரஸ்மித்தா ராணி ரவுத் ஹேமந்தா

### கவாண்ட்:
**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** லெந்து நாட்களில் தன் சரீர சுகத்திற்காக தொடர்ந்து ஜெபித்து வந்த சைலேஷ் பாய்க்கு தேவன் பரிபூரண சுகமருளினார். மூன்று கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். ஜெபத்தின் மூலம் சுமித் என்பவர் சிறுநீரக பிரச்சனையிலிருந்து சுகம் பெற்றார். சரீரம் முழுவதும் கட்டிகளினால் அவதியுற்று வந்த விஷால் பாய்க்கு ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்போர் தடையின்றி தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; கேட்கும் திறனை இழந்து வரும் ஜெயராம் பாய், கீதாபேன், சுனில்பாய், ரமேஷ், தர்சாவா ஆகியோர் குணமடைய; உம்பலா கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கச் சென்ற நமது ஊழியர்களைத் தாக்க முற்பட்ட கிராமத்தினர் மனந்திரும்ப; சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து சவிதா பேனுக்கு தேவன் சுகமருள; விடுமுறை வேதாகம வகுப்புகள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

### நஸ்வாடி:
**ஹென்றி சாலமோன் & ஏஞ்சல் ஜெபா**

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். அநேகர் ஆர்வத்துடன் நற்செய்தியை கேட்டது மட்டுமின்றி மீண்டும் வருமாறு ஊழியர்களைக் கேட்டுக்கொண்டனர். ஐந்து இல்லங்களில் நடத்தப்பட்ட இரவுக் கூட்டங்களில் அவர்களது உறவினர்களும் உற்சாகத்துடன் கலந்துகொள்கின்றனர். ரெலியாம்பா கிராமத்தில் சபை மூப்பர்கள் மற்றும் ஊழியர்களுக்கான கூடுகை நடத்தப்பட்டது. எதிர்ப்பின் மத்தியிலும் திரு. ஜித்தேந்திரா குடும்பத்தை தேவன் வல்லமையாய் பயன்படுத்தி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கடி மற்றும் ஜன்தார் கிராமங்களைச் சேர்ந்த கிமா, கன்ஜி மற்றும் தேவோசி கிறிஸ்துவில் வேரூன்றி வளர; நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள குனர்வாட் கிராமத்தில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட; புதிதாக ஆலயத்திற்கு வரும் தீபா மற்றும் ரசல் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலைபெற; ஐந்து கிராமங்களிலுள்ள சபைகளில் நடத்தப்படும் விடுமுறை வேதாகமப் பள்ளி தடையின்றி சிறப்பாக நடைபெறவும், சிறுவர்கள் திரளாய் பங்குபெறவும் ஜெபிப்போம்.

**ஜுன் 25 புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெனிலா பொன்மலர் செலின்
திருமதி. பிரியா ஹெத்ஸி அலெக்ஸ்

## மோட்டாபண்டா:

**மர்குஸ் மால்தோ & சாரா**

**துதிக்க:** ராஜேஷ் & கலா தம்பதியினர் புதிதாக ஆராதனைக்கு வருகின்றனர். அனைத்து கிராம சபைகளிலும் லெந்து கால உபவாச ஜெபங்கள் நடத்தப்பட்டு, புனித வெள்ளி மற்றும் உயிர்த்தெழுந்த திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டன. சிவல் கிராமத்தில் சுமார் 300 பேர் புனித வெள்ளி ஆராதனையில் பங்குபெற்றனர். அநேகருக்கு தனிப்பட்ட முறையில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவுள்ள வேதாகம பள்ளி தடையின்றி நடைபெறவும், கிறிஸ்தவ வாலிபர்கள் தங்களை பரிசுத்தத்துடன் காத்துக்கொண்டு தங்கள் சாட்சியின் மூலம் அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்தவும், விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள மக்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்து கிறிஸ்துவை உறுதியாய் பற்றிக்கொண்டு ஜீவிக்கவும் ஜெபிப்போம்.

## சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த கல்பேஷ் பாய்க்கு தொடர் ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். வாஸ்னா கிராமத்தைச் சேர்ந்த ஜோதி பேன் உபவாச ஜெபத்தின் மூலம் மார்பக வலியிலிருந்து சுகம்பெற்றார். நானா ரந்தாவில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டுதி மற்றும் கான்சா சபைகள் ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சிபெற; திலீப் பாய் மற்றும் அஞ்சலி பென்னின் குடும்பங்களை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்ட இளைஞர்கள் வாழ்வில் மாற்றம்பெற்று கிறிஸ்துவுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க; டையூசி மற்றும் ஜாதிபாடா கிராமங்களில் ஆலயம் கட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் அனுமதி வழங்க ஜெபிப்போம்.

# தாத்ரா & நகர் ஹவேலி

## கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** கீழே விழுந்து இடுப்பு எலும்பு முறிவு ஏற்பட்ட நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஜேக்சன் ஜெபத்தினால் விரைவாக குண மடைந்து வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். 23 ஆண்டுகளாக காலில் ஏற்பட்ட புண் ஆறாமல் கஷ்டப்பட்டுவந்த விலாஜ் பாய் தொடர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். கடந்த மாதம் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டோருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆதிவாசிகளுக்கு அரசாங்கத்தின் மூலம் கட்டித் தரப்படும் வீடுகள் நமது விசுவாசிகளுக்கும் கிடைக்க; நரம்புத் தளர்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டுள்ள விசுவாசிகள் லாசிபேன் மற்றும் தினேஷ் பாய் விரைவில் குணமடைய; ஐந்து வயதாகியும் பேசாமலிருக்கிற தினேஷ் பாயின் மகனுக்கு விரைவில் பேசும் திறனை தேவன் அருள ஜெபிப்போம்.

## ஜூன் 26 வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. இம்மானுவேல் கார்த்தி P.
திருமதி. சுனிதா மராண்டி சுஷில்

# மகாராஷ்டிரா

## காண்ட்பாரா & நவாப்பூர்:

### திம்மண்ணா தீமோத்தேயு & மமதா நான்சி

**துதிக்க:** தாராபூர், ஜாம்டா, வாக்கிப்பாடா மற்றும் கோல்ஹர் கிராமங்களில் நடைபெற்ற விசுவாசிகளின் பயிற்சி கூட்டங்களில் சுமார் 120 பேர் கலந்துகொண்டு பயன் பெற்றனர். ஹாரினிப்பாடா மற்றும் காண்டபாடா கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, புதிய ஏற்பாடு கொடுக்க தேவன் கிருபை செய்தார். ஓராண்டு காலமாக மஞ்சள் காமாலை நோயினால் வேதனைப்பட்டு வந்த ஜோபாங் டாடா ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். ஞாயிறு ஆராதனையில் பங்குபெற்ற இரண்டு புதிய ஆத்துமாக்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தில் விசுவாசிகள் வீடுகளிலும், மற்ற இடங்களிலும் ஆராதனை நடத்த கடினமாக இருப்பதால் கோல்கர் கிராமத்தில் ஆலயம் கட்ட தேவையான நிலம் கிடைக்க; மனநல பாதிப்பிலிருந்து பேபி சிகான் குணமடைய; இரத்தசோகை வியாதியினால் அவதிப்படும் அமித் மற்றும் சாந்திபாய் சுகம்பெற; சூரத், பூனே, நாசிக் மற்றும் மும்பை பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ள நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; சிறுநீரகப் பிரச்சினையினால் அவதிப்படும் அர்ஜுன் டாடா பூரண சுகம்பெற; நடைபெறவுள்ள அனைத்து கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## பிம்பள்நேர், சிர்னிபாடா, சாக்ரி:

### பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஸ்வரி

**துதிக்க:** தேம்பா கிராமத்தில் நடைபெற்ற சுவிசேஷ கூட்டத்தில் ஐந்து பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். புதிதாக நான்கு குடும்பங்கள் நமது ஆராதனையில் பங்கு பெற்று வருகின்றனர். எட்டு இடங்களில் உபவாச ஜெபங்களும், இரண்டு நாட்கள் விடுமுறை வேதாகமப் பள்ளியும், மலிக்கோன் ஆலயத்தில் சபை மூப்பர் கூடுகை நடத்தவும், சபை மக்களின் வளர்ச்சியைக் குறித்து கலந்தாய்வு செய்யவும், மேலும் அநேகர் இக்கூடுகையில் பங்குபெறவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவும், உட்காரவும், பேசவும் முடியாமல் கஷ்டப்படும் மாயாவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; பஞ்சமவுலி கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; அக்காடா கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்கப்பட; இப்பணித்தளத்திலுள்ள புதிய கிராமங்களில் விரைவில் ஊழியங்கள் துவங்கப்பட; முப்பது இடங்களில் விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்த தேவன் உதவி செய்யவும், அநேக பிள்ளைகள் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

**ஜூன் 27 வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சார்லெட் ஜெசிந்தா செல்வின்
திருமதி. லில்லி ராணி வின்செண்ட் பிரேம்ராஜ்
திருமதி. லுன்சிங் பம்சோன்சின்

## குருக்ஸ் வேதாகம மொழிபெயர்ப்புப்பணி:

**ஆர். தாமஸ்**

**துதிக்க:** அனைத்து பணித்தளங்களின் இலக்குகளின் புள்ளிவிவரங்களை புதுப்பிக்க நமது மிஷனெரிக்கு தேவன் உதவி செய்தார். நீட் தேர்வு எழுதியுள்ள மிஷனெரியின் மகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நியாயாதிபதிகள் புத்தகத்தை மொழிபெயர்க்கும் திரு. மொஹர்சாய் மற்றும் பாடல் புத்தகத்தை மொழி பெயர்க்கும் திரு. பவுலோஸ்க்கு, தேவன் ஞானத்தையும், ஆரோக்கியத்தையும் நிறைவாய் அருள; பணித்தள அலுவலகத்தில் நடைபெற்று வரும் கட்டிட பழுதுபார்ப்பு மற்றும் கழிப்பறை கட்டு மானப் பணிகள் விரைவில் முடிக்கப்படட; ஒரு நல்ல சமையல்காரர் கிடைக்க ஜெபிப்போம்.

# கர்நாடகா

## மாலூர்:

**கிஷாந்தா லிமா & பிரமிளா சிங்**

**துதிக்க:** வீட்டின் அருகில் வந்த சிறுத்தையிடமிருந்து விசுவாசி லாவண்யாவின் குடும்பத்தினரை தேவன் பாதுகாத்தார். ஒருவர் இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டுள்ளார். சபை மூப்பர் ராஜம்மாவுக்கு சிறுநீரக அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது. திட்டமிட்டிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நான்கு வருடங்களாக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ராஜேஷ்க்கு தேவன் பரிபூரண சுகமருள; ஆராதனைகளில் குறைவான சகோதரர்களே கலந்து கொள்கின்றனர். இந்நிலை மாறி பெண்களுக்கு சமமாக ஆண்களும் சபை ஆராதனை களில் பங்குபெற; நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள விசுவாசி ஜோனத் தானின் வழக்கு விரைவில் முடிக்கப்பட்டு சாதகமான தீர்ப்பு வழங்க ஜெபிப்போம்.

### புதியதோர் இதயம்

*கர்நாடகா, மாலூர் பணித்தளத்தி லுள்ள ஜெயமங்களா கிராமத்தைச் சேர்ந்த தனுஸ்ரீ என்ற மூன்று வயது சிறுமிக்கு இருதயத்தில் ஓட்டை இருப்பதால் இன்னும் இரண்டு வாரங்களில் அவள் மரித்துவிடுவாள் என்று மருத்துவர்கள் கூறினர். மிகவும் துயரத்திலிருந்த தனுஸ்ரீயின் தாயார் அக்கிராமத்திலுள்ள ஆராதனைக்கு தன் மகளை அழைத்துச் சென்று மருத்துவர் கூறியதை சபையாருக்கு அறிவித்தார். சபையார் இணைந்து ஊக்கத்தோடும், கண்ணீரோடும் மகளுக்காக ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் தனுஸ்ரீக்கு பரிபூரண சுகமருளினார். இதைத்தொடர்ந்து தனு ஸ்ரீயின் தாயார் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஆராதனையில் தொடர்ந்து பங்கு பெற்று வருகிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

## ஜூன் 28 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. செல்வி தெய்வநாயகம்

### ஷிக்காவ்: நரேந்திரா குமார்

**துதிக்க:** விசுவாசிகளின் பிள்ளைகள் அனைவரும் நல்ல மதிப்பெண்களுடன் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ளனர். சவிதா 92% மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற தேவன் கிருபை செய்தார். புதிய விசுவாசியான கிரிஜம்மாவுக்கு சிறுநீரக அறுவை சிகிச்சை முடித்து சுகத்துடன் வீடு திரும்ப தேவன் உதவி செய்தார். ஜெபத்தின் மூலம் தீபாவுக்கு தேவன் குழந்தை பாக்கியம் அருளினார். கடந்த மாதம் அனைத்து ஊழியங்களும் தடையின்றி சிறப்பாக, தேவனுக்கு மகிமை யாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளியில் ஏராளமான சிறுவர்கள் கலந்துக்கொள்ள; விசுவாசி களின் கல்லறைக்கு நிலம் பெறுவது சம்பந்தமாக தாசில்தார், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து ஒப்புதல் கடிதம் விரைவில் கிடைக்கப் பெற; பக்கவாதத் தினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாம லிருக்கிற மல்லவாவிற்கு தேவன் சுகமருள; வரும் நாட்களில் செய்யப்படவுள்ள ஊழியங்களில் தேவனின் வழிநடத்துதல், ஆசீர்வாதம் நிறைவாய் அருளப்பட ஜெபிப்போம்.

### ஹலியால்:

**தாங்லால் ஸௌ & நெம்ஸாவா**

**துதிக்க:** கிராமத்தில் அனைத்து தண்ணீர் ஊற்றுகளும் வற்றிபோன நிலையில் விசுவாசி ரூத்ரேஷ் ஜெபித்து கிணறு தோண்டினபோது நல்ல தண்ணீர் கிடைக்க தேவன் கிருபை செய்தார். அநேக வருடங்களுக்குப் பின் ஜெபத்தின் மூலம் சாந்தா குடும்பத்திற்கு இரட்டை குழந்தைகளைத் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். சோபியாவுக்கு திடீரென ஏற்பட்ட கால் வீக்கத்திலிருந்து ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நந்தியாட் ஆலய நிலத்திற்கு பஞ்சாயத்திடமிருந்து தடையில்லா சான்றிதழ் விரைவில் கிடைக்க; இட்டகி கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; கடன் பிரச்சனையிலிருந்து விசுவாசி ரேணுகாவின் குடும்பம் விடுவிக்கப்பட; சமூகத்தின் பயத்தினால் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட தயங்கும் மக்களின் இருதயத்தில் தேவன் கிரியைச் செய்ய ஜெபிப்போம்.

### *கிருபை மட்டுமே*

*மஹாராஷ்டிராவிலுள்ள போரடி பணித் தளத்தில் அம்பாடுக் கிராமத்தைச் சேர்ந்த ஆசாராம்பாய் தனது விவசாய நிலத்தில் வேலை செய்துகொண்டிருந்தபோது, அவர் அருகில் டிராக்டரைக் கொண்டு ஒருவர் உழுதுக் கொண்டிருந்தார். அச்சமயம் திடீரென டிராக்டரின் இன்ஜினிற்குள் இருக்கும் தண்ணீர் குழாய் உடைந்து வெந்நீராக அவரை நோக்கி பீச்சி அடித்தது. தேவனுடைய கிருபையால் வெந்நீர் அவரின் முகத்தில் படாமல் உடலில் மட்டும் பட்டு சில காயங்களோடு தப்பினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

**ஜூன்**
**29**
**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெபதங்கம் மாதவராய்
திரு. பால்ராஜ் P, திரு. மின்ட்டு குட்டும்
திரு. வடேகர் திலீப்பாய் ரங்குபாய்
திருமதி. சோனியா ராணி தேபதத்தா
திருமதி. மன்னா சிங் டெப்ராடோ

## ஆந்திரப் பிரதேசம்

### குப்பம்: வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** முனீர் மற்றும் சகுந்தலா அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். ஸ்ரீராம் பலவிதமான வியாதிகளிலிருந்து ஜெபத்தினால் சுகம்பெற்றார். கடந்த நீதியாண்டின் இலக்கை வெற்றிகரமாக முடிக்க தேவன் உதவி செய்தார். லெந்து காலத்தில் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளும், கடந்த மாதம் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள், பின்தொடர் பணி, இரவுக் கூட்டங்கள் அனைத்தும் ஆசீர்வாதமாக நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் விசுவாசத்தில் வேரூன்றி வளர; தேவ ஒத்தாசையைக்கொண்டு இந் நிதியாண்டின் இலக்கை வெற்றிகரமாக அடைய; வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் தடையின்றி நடத்தப்படவும், திரளான ஆத்துமாக்கள் தேவனின் மந்தையில் இணையவும், உட்பிரிவுகளில் நடைபெறும் ஆராதனைகள் எவ்வித இடையூறுமின்றி அமைதலாய் நடைபெறவும், வேத வகுப்புகள், ஜெபங்கள் மற்றும் ஐக்கிய கூடுகைகளின் மூலம் விசுவாசிகள் பெலப்படவும், தொடர்ந்து நடைபெறவிருக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்காகவும் ஜெபிப்போம்.

### சதும்: அனில் மஹாலி & பிரசாந்தி

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மற்றும் பின்தொடர் பணிகள் அநேக கிராமங்களில் செய்து முடிக்க தேவன் உதவி செய்தார். இரவுக் கூட்டங்கள், சபை மூப்பர்களின் பயிற்சி, உபவாச ஜெபம், ஞாயிறு ஆராதனைகள் மற்றும் விசுவாசிகளின் ஆவிக்குரிய கூடுகை ஆகியவை ஜோகிவாரிபள்ளி கிராமத்தில் நடத்த தேவன் கிருபை செய்தார். நமது திருச்சபையைச் சேர்ந்த சாம் பிரசாத் 10ஆம் வகுப்புத் தேர்வில் வெற்றிப்பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் ஸ்வரூபா ராணி, லக்ஷ்மி மற்றும் கிறிஸ்டால் ஜெபாவின் ஜெபங்களுக்கு தேவன் பதிலளிக்க; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ளவர்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; வணிக நிர்வாகத்தில் முதுநிலை படிப்பை முடித்திருக்கும் ஹேமந்த் ராஜ், இளங்கலை கணிணி படிப்பை முடித்துள்ள கெய்னி, மருத்துவ இளங்கலையில் வெற்றிபெற்ற யாமினி ஆகியோருக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை தேவன் கட்டளையிட; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் நர்ஷிம்கா தனது விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

## ஜூன் 30 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அசரியா ராஜ்குமார்
திரு. விக்னேஷ்வரன் N, திரு. ஷிஷு பால்
திரு. வெங்கடேசன் C. கிரசன்ஸ்

# தமிழ்நாடு

## வார்லி மொழிபெயர்ப்புப்பணி:

### ஆபிரகாம் ஜி. & ஹேமலதா

**துதிக்க:** மொழிபெயர்ப்பு உதவியாளர்களின் உதவியுடன் புதிய ஏற்பாடு சரிபார்க்கப் பட்டது. மத்தேயு நற்செய்தி நூல் முதல் வெளிப்படுத்துதல் வரை எல்லா புத்தகங் களையும் சரிபார்க்க தேவன் கிருபை செய்தார். புதிய மிஷனெரிகளுக்கு மானுடவியல் கற்றுக்கொடுக்க தேவன் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நீதிமொழிகள் 14 முதல் 31 வரையிலான அதிகாரங்களை மொழி பெயர்ப்பு செய்யவும், மொழி பெயர்ப்புக்கு உதவி செய்யும் உதவியாளர்களுக்கு தேவன் நல்ல ஞானத்தை அருளவும், மிஷனெரி மற்றும் உதவியாளர்களுக்கு தேவன் நல்ல சரீர ஆரோக்கியத்தைக் கட்டளையிடவும் ஜெபிப்போம்.

## அஞ்செட்டி:

### டேவிட் நிக்கல்சன் & ஐவி

**துதிக்க:** நமது தொடர்பாளர் கௌரம்மா வின் (53 வயது) இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து, மரணப்படுக்கையில் இருந்த அவருக்காக சபையார் இணைந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுக மருளினார். மூன்று புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். புதிய தொடர்பாளர் வெள்ளையின் ஒன்றரை வயது பேரனின் நாசியில் வேர்கடலை சிக்கிக்கொண்டு சுவாசிக்க சிரமப்பட்டான். பலமணிநேர போராட்டத்திற்குப் பின் மருத்துவர் மூலம் அதை வெளியே எடுக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று விசுவாசித்து, இரட்சிக்கப்பட; நமது விசுவாசி சரோஜா என்பவருக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பு கழுத்தில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சையின் காயம் இன்னும் ஆறாமல் அவதிப்படுகிறார். தேவன் அற்புத சுகமருள; தனபால்கொட்டாய், திம்மன்தோட்டி, பசபட்டணா, கோவள்ளி, மந்தைவெளி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; வரும் நாட்களில் நடைபெறும் அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## வெட்டவலம்:

### பிரைட் ஜெயக்குமார் & பியூலா

**துதிக்க:** ஓலைப்பாடி பகுதியைச் சேர்ந்த அசாய்மாலி தன் மூன்று பேரப் பிள்ளைகளுடன் தவறாமல் ஆராதனையில் பங்குபெற்று வருகிறார். சரசு ஆலய பணிகளில் உற்சாகத்துடன் உதவி செய்து வருகிறார். இரவு முழுவதும் தூங்காமல் அலறிக்கொண்டிருந்த லோகேஷ் பெற்றோரின் ஜெபத்தின் மூலம் நன்றாக உறங்க செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நோயின் தாக்கத்தினால் படுக்கையிலிருக்கும் விசுவாசி ராதாவின் தாயார் சின்னதாய் சுகம்பெற்று இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; காலசரத்தூல் ஆலய நிலம் அளவீடு செய்யப்பட்டு விரைவில் சுற்றுச்சுவர் எழுப்பப்பட; நற்செய்தி வட்டங்களுக்குத் தேவையான ஒலி, ஒளி சாதனங்கள் கிடைக்க; நடக்கவிருக்கும் அனைத்து நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

**405**
**மிஷனரி ஆல்பம்**



# திரு. ஜெரால்டு சேவியர் & திருமதி. ஜோத்ஸ்னா

திரு. ஜெரால்டு சேவியர் தமிழ்நாடு, ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கரன்காடு கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜோசப் பாண்டியன் & திருமதி. இந்திரா ஜெபமாலை தம்பதியினருக்கு 09.11.1989 அன்று பிறந்தார். இவரது தாயார் கிறிஸ்தவ நல் ஒழுக்கங்களிலும், ஊழிய பாரத்தோடும் இவரை வளர்த்தார். சிறுவயதிலிருந்தே வடஇந்தியா சென்று ஊழியம் செய்யவேண்டும் என்ற வாஞ்சை இவருக்கு இருந்தது. எனவே அநேக மொழிகளை கற்றுக் கொள்ளவும், இசைக்கருவிகளை வாசிக்க வேண்டுமென்றும் தொடர்ந்து ஜெபித்து வந்தார். 12ஆம் வகுப்பு முடித்து வேதாகம கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். அந்நாட்களில் இவரது பகுதியில் நடைபெற்ற சுவிசேஷ இரதம் ஊழியத்தில் தன்னார்வமாக உதவி செய்தார். அச்சமயம் ஆனந்த் அண்ணன் மூலம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தைப் பற்றி அறிந்துகொண்டார். 2008ஆம் ஆண்டில் சுவிசேஷ இரத ஊழியத்தில் இணைந்து ஒரு வருடம் பணியாற்றினார். 2009ஆம் ஆண்டு FMPBஇல் முழுநேர ஊழியராக இணைந்து மிஷனெரி பயிற்சிப் பெற்றார். அதன்பின் 2010இல் மத்தியப்பிரதேசத்திலுள்ள பரேலா இனமக்கள் மத்தியிலும் 2011க்குப் பிறகு ரட்டியா இனமக்கள் மத்தியிலும் ஊழியம் செய்தார். 2016லிருந்து ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள சந்தால் இன மக்கள் மத்தியில் தேவ ஊழியத்தை செய்து வந்தார்.

ஆந்திர மாநிலம், சித்தூர் பிராந்தியம், கலக்கடா பணித்தளத்தில் வசிக்கும் திரு. சுதாகர் & திருமதி. பத்மாவதி ஆகியோருக்கு இளைய மகளாக 02.06.1995 அன்று சகோதரி. ஜோத்ஸ்னா பிறந்தார். பள்ளிப் படிப்பிற்குப்பின் செவிலியர் படிப்பை முடித்தார். அப்போதைய பணித்தள மிஷனெரியான அருள்திரு. ஜாண் டேவிட் ராஜ் அவர்களால் திருமுழுக்குப் பெற்று ஆவிக்குரிய வழியில் வளர்க்கப்பட்ட சகோதரி ஜோத்ஸ்னா 2012இல் நம் இயக்கத்தின் மூலம் திருப்பதியில் நடைபெற்ற தேசிய வாலிபர் மாநாட்டில் கலந்துகொண்டார். இக்கூட்டத்தில் மிஷனெரியின் சாட்சிகளையும், வாழ்க்கை வரலாறுகளையும் கேட்கும் வேளையில் பரிசுத்தாவியானவர் இவருக்கு ஊழிய வாஞ்சையையும், அழைப்பையும் அருளினார். எனவே முழுநேர ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்த இவர் 2014இல் FMPBஇல் இணைந்து ஜான்சியில் மிஷனெரி பயிற்சிப் பெற்றார். பயிற்சிக்குப்பின் மஹாராஷ்டிரா மாநிலத்தில் 2016 வரை ஊழியம் செய்து வந்தார்.

27.01.2017 அன்று சகோதரர் ஜெரால்டும், சகோதரி ஜோத்ஸ்னாவும் திருமணத்தில் இணைக்கப்பட்டனர். அதன்பின் குடும்பமாக மேற்கு வங்காளத்தில் வசிக்கும் வங்காள மொழி பேசும் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகின்றனர். தேவன் இவர்களுக்கு இரண்டு மகன்களை தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகன் ஜெஹ்பில் ராம்போ (22.11.2017) இரண்டாம் வகுப்பும், இளைய மகன் ஜெப்ரி ஜின் (16.06.2019) முதல் வகுப்பும் டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இம்மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.

**406 மிஷனரி ஆல்பம்**




# திரு. தாங் சின் லியான் லாங்கல் & திருமதி. வுங்தியான்சிங்

மணிப்பூரின் சூரசந்த்பூர் மாவட்டத்தில், விவசாய பெற்றோர்களான திரு. எல். துவல்கான்பாவ் மற்றும் திருமதி. தோங்சானிங் ஆகியோருக்கு 03.03.1984 அன்று பிறந்த திரு. தாங் சின் லியான் லாங்கல், இரண்டு சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரருடன் கிறிஸ்தவக் குடும்பத்தில் வளர்ந்தார். சிறுவயது முதல் ஞாயிறு பள்ளியில் பங்கு பெற்று வேதவசனங்களைக் கற்று வந்தார். தனது பத்து வயதில், சிலுவை தியானக் கூட்டத்தில் ரோமர்.10:9 வசனத்தினால் தொடப்பட்டு இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். வேத வசனங்களை ஆழமாய் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற வாஞ்சையோடு இறையியல் கல்வியைத் தொடர்ந்தார். 2007ஆம் ஆண்டு கேரளாவின் ஃபெய்த் பாப்டிஸ்ட் வேதாகமக் கல்லூரியில் பி.டி.எச். பட்டத்தையும், 2009இல் மணிப்பூரில் எம்.டி.எச். பட்டத்தையும் பெற்றார். இவர் தனது படிப்பின்போது கலாச்சாரம்கடந்த ஒரு மிஷனெரியாக பணியாற்ற வேண்டுமென்ற தெளிவான ஊழிய அழைப்பைப் பெற்றார்.

மணிப்பூர், சுராசந்த்பூர் மாவட்டத்திலுள்ள பங்குவல் கிராமத்தில் திரு. என். ஜின்லியான் & திருமதி. நிங்சாடிம் ஆகியோரின் மகளாக 14.03.1987 அன்று சகோதரி வுங் தியான்சிங் பிறந்தார். இவருக்கு இரண்டு சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி உள்ளனர். இவரது பெற்றோர் இருவரும் அரசு ஊழியர்களாகப் பணிபுரிந்தனர். கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த இவர் சிறுவயது முதல் ஞாயிறுப் பள்ளி மற்றும் ஆலயத்தில் நடைபெறும் பிற ஊழியங்கள் மூலம் கிறிஸ்தவப் போதனைகளில் வளர்க்கப்பட்டார். 2000ஆம் ஆண்டு நடைபெற்ற இளைஞர் முகாமில் பங்குபெற்ற இவர் 1பேதுரு 2:9 வசனத்தின் மூலம் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டார். 12ஆம் வகுப்பு முடித்தபின் 2006ஆம் ஆண்டு திருவனந்தபுரம் வேதாகமக் கல்லூரியில் இறையியல் இளங்கலைப் படிப்பையும், 2008ஆம் ஆண்டு சூராசந்த்பூரில் உள்ள கிரேஸ் வேதாகமக் கல்லூரியில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றார். இவரது இறையியல் படிப்பின் போது தேவனின் அழைப்பையும், பாரத்தையும் உணர்ந்த இவர் ஒரு முழுநேர மிஷனெரியாக தன்னை அர்ப்பணித்தார்.

21.05.2010 அன்று திரு. தாங் சின் லியான் லாங்கல், சகோதரி வுங் தியான்சிங்கை மணந்தார். திருமணத்திற்கு பிறகு இருவரும் 17.06.2010 அன்று FMPBயில் முழுநேர ஊழியராக இணைந்து சேலம், டேனிஷ்பேட்டையிலுள்ள பெத்தேல் வேதாகமக் கல்லூரியில் மிஷனெரி பயிற்சிப் பெற்றனர். துவக்கத்தில் பாண்டேர் பணித்தளம் & சிறுவர் விடுதியில் மிஷனெரிகளாக நியமிக்கப்பட்டனர். ஒரு வருடத்திற்குப் பின் இவர்கள் ஜார்கண்ட் சந்தால் பகுதியில் சில மாதங்களும், மால்டோ தொடக்க பள்ளியில் ஆறு வருடங்களும் பணியாற்றினர். 2019 ஜுலை முதல் இவர்கள் சத்தீஸ்காரிலுள்ள பையாதன் பணித்தளத்தில் கோண்ட் இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தனர். 2024 மார்ச் 11ஆம் தேதி கெவ்ரா கிராமத்தில் விசுவாசியின் இல்லத்தில் ஆராதனை நடத்திக்கொண்டிருந்த போது, எதிர்ப்பினிமித்தம் திரு. தாங் சின் லியான் கைது செய்யப்பட்டு, ஒருநாள் சிறையில் அடைக்கப்பட்டு, கர்த்தரின் கிருபையால் மறுநாள் பிணையில் விடுவிக்கப்பட்டார். நீதிமன்ற வழக்கு முடியும் வரை இவர்கள் தற்காலிகமாக லுடெக் மாணவர் விடுதியில் தங்கியிருந்தனர். தற்போது 2025 மார்ச் முதல் சத்தீஸ்காரிலுள்ள ரகுநாத்பூர் மாணவர் விடுதியில் பணிபுரிந்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு இரண்டு மகன்களை தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகன் பவுதியன்லால் லாங்கல் (18.02.2011) 9ஆம் வகுப்பும், இளைய மகன் தாங் லியாண்டிங் லாங்கல் (30.05.2012) 7ஆம் வகுப்பும் மணிப்பூரின் சூரசந்த்பூரில் உள்ள ஈஸ்டன் ஹால் பள்ளியில் படித்து வருகின்றனர். இந்த மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம். மணிப்பூரிலுள்ள அவர்களின் குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோருக்காக ஜெபிப்போம்.

Regd. Newspaper for India No.17759/69




***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***